# சந்திர சாம்ராஜ்யம்



இந்திரா சௌந்தர்ராஜன்

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு
35848
F329462
கொளத்தூர், சென்னை 99.

# சந்தோஷ சாம்ராஜ்யம்

## 1

**க**ல்யாண வீடு என்றாலே ஒரே குதூகலம்தான்!

இத்தனைக்கும் கடன்பட்டுத்தான் பலர் திருமணத்தையே நடத்துகின்றார்கள். கல்யாண மண்டப வாடகை, சாப்பாட்டுச் செலவு, பட்டுத் துணிமணி, நகை நட்டு என்று கணக்குப் போட்டால் குளோரோஃபார்ம் இல்லாமலே மயக்கம் வரும்.

ஆனாலும் அதைப்பற்றி நினைக்காமல் இரண்டு பேர் புதியதாக குடும்ப வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைக்க இருப்பதை மனதில் கொண்டு அதற்காக செலவழிப்பதை நினைக்கும்போது விஸ்வநாதனுக்கு சிரிப்பாக இருந்தது.

விஸ்வநாதன் எப்பொழுதுமே இப்படித்தான்.

எதிலும் வித்யாசமான பார்வை அவனுக்கு.

அதுதான் நண்பன் பிரபாகரின் கல்யாணத்துக்கு வந்த இடத்திலும் இப்படி சிந்திக்க ஆரம்பித்துவிட்டான்.

யார் ரசிக்கிறார்கள் ரசிக்கவில்லை என்கிற கேள்விக்கோ, பார்வைக்கோ துளிகூட இடம் கொடுக்காமல் நாதஸ்வரக்காரர் வாசித்துக்கொண்டிருந்தார். அங்கும் இங்குமாக பிரபாகர் வீட்டுப் பெண்களும் நடந்து கொண்டிருந்தார்கள். அதில் சிலரிடம்தான்

வேலை நோக்கம் இருந்தது. பலர் கூடியிருக்கும் இடத்தில் தங்களது பட்டுப்புடவைக்காகவே சிலர் நடந்துகொண்டிருந்தார்கள். கல்யாணம் என்று ஒன்று நடப்பதே பட்டுப்புடவை கட்டிக்கொண்டு, நகைகள் எல்லாம் போட்டுக்கொள்ளத்தான் என்கிற மாதிரிகூட தோன்றியது.

பிரபாகரும் மாப்பிள்ளை அழைப்புக்கு தயாராகிக்கொண்டு இருந்தான். அவனுக்கு கோட்டு சூட்டைப் போட்டு மேலும் கீழும் இழுத்து விட்டு அழகு பார்த்துக்கொண்டிருந்தார்கள் சிலர். "நீ உன் உடம்பை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு சும்மா இரு" என்கிற மாதிரி அவனைச் சுற்றி சுற்றி வந்து பௌடர் போடுவதும் பின் அது கூடி விட்டதாக நினைத்து எச்சில் ஒற்றிய கர்ச்சீப்பால் துடைத்து விடுவதும் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

கழுத்திலும் நல்ல விரல் பருமனின் சங்கிலி!

சாதாரண நாட்களில் போட்டுக்கொண்டு நின்றால் பைத்தியக்காரன்கூட வெறுத்துப்போய் முறைப்பான். ஆனால் இப்போது அதெல்லாம் போட்டால்தான் மாப்பிள்ளை லட்சணமே தித்திக்கும் என்கிற மாதிரி அதை மாட்டிவிட்டு ஒரு இரண்டடி பின்னால் போய் அது எப்படி இருக்கிறது என்கிற பார்வை வேறு.

இந்தக் கூத்தை எல்லாம் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்த விஸ்வநாதனின் அருகில் ஒருவர் சிரித்தபடி வந்து உட்கார்ந்தார். ஆள் கன்னங்கறுக்க தோண்டி எடுத்த நிலக்கரி மாதிரி இருந்தார். இருந்தாலும் பட்டு வேட்டி சட்டை, விரலில் மோதிரம் என்று கொஞ்சம் டாலடித்தார்.

"தம்பி யார்... மாப்பிள்ளைக்கு உறவா?" என்று கேள்வி வேறு.

"இல்ல... நான் மாப்பிள்ளை கூட வேலை பாக்கறேன்."

"அப்படியா சேதி... ரொம்ப சந்தோஷம். நான் பொண்ணுக்கு மாமா முறை."

-அவன் கேட்காமலே அவர் அறிமுகத்தில் புகுந்தார்.



"அப்படியா...?"

"ஆமாம்... ஏன் இப்படி தனியா உட்காந்துகிட்டிருக்கீங்க. உங்க ஃபிரண்ட்சுங்களோட சேர்ந்து சீட்டுக் கச்சேரி போட வேண்டியது தானே?"

-அவர் எதற்காக வந்திருக்கிறார் என்பது விஸ்வநாதனுக்கும் சன்னமாக புரிந்தது.

"இல்ல... எனக்கு சீட்டாடத் தெரியாது!" என்றான் நிதானமாய். அடுத்த நொடி அவர் பார்த்த பார்வையே ஒரு தினுசாக இருந்தது.

"என்ன தம்பி நீங்க... சீட்டாடத் தெரியாதுங்கறீங்களே. இந்தக் காலத்துல இப்படி ஒரு புள்ளையா... ஆமா மாப்ளை எப்படி?"

"அவனுக்கும் சீட்டாடத் தெரியாதுன்னுதான் நினைக்கிறேன்."

-அவர் முகத்தில் உள்ள சொல்ல முடியாத ஒரு பரவசம். அப்படியே "ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே..." -என்று பீடிகை போட்டார். விஸ்வநாதனும் இணக்கமாகப் பார்த்தான்.

"உங்களுக்கு இந்த சிகரெட் பீடின்னு, ஏதாவது..."

"இல்ல... அதெல்லாம் எதுவும் கிடையாது!"

"பான்பராக் - ஜர்தா பீடான்னு அப்படி ஏதாச்சும்..."

"அதுவும் கிடையாது!"

"மாப்பிள்ளைக்கு?"

-விஸ்வநாதன் இப்பொழுதுதான் அவரது பீடிகைக்கு பொருள் தெரிந்தது.

"பிரபாகர் தங்கமான பையன்க. அவனுக்கு எந்த கெட்ட பழக்கமும் கிடையாது. நானாவது கொஞ்சம் சைட் அடிப்பேன். அவனுக்கு அதுகூடத் தெரியாது.

-அவர் கேட்காமலே விலாவாரியாக சொல்லி முடித்தான். அவரிடம் சந்தோஷம். கூடவே கொஞ்சம் அத்துமீறிக் கேள்வி கேட்டுவிட்டதாக சங்கடமும்!

ஒரு மாதிரி குழைந்து நெளிந்து சமாளித்தவர் அதற்கு மேல் உட்கார மனமில்லாதவராக நைஸாக கிளம்பியும் போனார்.

அவர் அகலவும் சுந்தர் வந்து அமர்ந்தான்... விஸ்வநாதனோடு சேர்ந்து திருமணத்திற்கு வந்திருக்கும் அவனது சகா!

"என்னடா மாப்ள... பெருசு பிரபாகரனைப்பத்தி விசாரிச்சுட்டு போவுதாக்கும்?"

"ஆமாண்டா... எப்படிடா கரெக்டா கேட்டே?"

"கொஞ்சம் முந்திதான் என்கிட்ட பிளேடு போட்டாரு. அப்புறமா நம்ம சீனிவாசன்கிட்ட... இப்ப நீ மாட்டியிருக்கே."

"எதுக்குடா இப்படி கல்யாணத்தின்போது வந்து விசாரிக்கிறான் இந்த ஆள். மாப்பிள்ளை பார்க்கும்போதே இதையெல்லாம் விசாரிக்கலையா இவங்க...?"

"ஒரு சந்தேகம்தான். பிரபாகரைப் பாரு. அசப்புல பின்லேடன் சாயல் தெரியலை. அந்த பயமா இருக்கும்."

-சுந்தர் ஹாஸ்யமாக வாரினான்.

"ஆமா பொண்ணு எப்படிடா இருக்கா...?"

"நீ இன்னுமா பார்க்கலை...?"

"எங்கடா... கண்ணுல பட்டாதானே?"

"சும்மா சொல்லக்கூடாது. இந்த தேங்காத்தலையனுக்கு சிம்ரன் கணக்கா பொண்ணு மாட்டியிருக்குது."

"அப்படியா... இதுக்காகத்தான் மூணு வருஷமா பொண்ணு தேடி அலைஞ்சானா?"



"போய்ப்பாரு... அசந்து போயிடுவே! எனக்குள்ள இப்ப பயங்கரமான கற்பனை எல்லாம் ஓடிக்கிட்டிருக்குன்னா அதுக்கு கூட கல்யாணப் பொண்ணு மஞ்சுளாதான் காரணம்."

"அது என்ன பயங்கரமான கற்பனை?"

"எல்லாம் நம்ம தமிழ் சினிமா ஸ்டைல்தான். கல்யாண மேடைல பொண்ணு வந்து உக்காருது. நம்ம பிரபாகர் தடியனும் தாலிகட்டப் போறான். அப்படி நிறுத்துங்கன்னு ஒரு பொண்ணு குரல்..."

"போதும் போதும்... மிச்சத்த நீ சொல்ல வேண்டாம். அது என்னன்னு எனக்கே தெரியும். ஏண்டா மாப்ள உனக்கு இப்படி ஒரு கொடுமையான புத்தி?"

"நான் என்னடா பண்ண... பெண்ணோட சுந்தர ரூபாவண்யம் என்னை அப்படி நினைக்க வைக்குதுடா. ஆங்... இன்னும் அந்த கற்பனையோட முடிவை நான் சொல்லி முடிக்கலையே..."

"அத நீ சொல்லணுமாக்கும். எனக்கே தெரியும்னு சொன்னேன்ல?"

"சரி... என்னன்னு சொல்லு பார்க்கலாம்."

"என்னடா பெரிய புடலங்கா. அந்த பொண்ணு கலாட்டா பண்ணி நான் பிரபாகரோட காதலி. இப்ப மூணு மாசம் முழுகாம இருக்கேன்னு சொல்லுவா. உடனே கல்யாணப் பொண்ணோட அப்பா, 'அடப்பாவி என் மகளோட வாழக்கையோட விளையாடப் பாத்தியேடா துஷ்டா துன்மார்க்கா'ன்னு புலம்புவாரு. அப்ப நீ போய், 'டோன்ட் ஒர்ரி மாமா நானிருக்கேன். உங்க மகளுக் குன்னு' சொல்வே. உடனே அவரும் மாப்ளைம்பாரு. நீயும் மாமான் னுவே... அப்புறம் என்ன பொண்ணு கழுத்துல நீ தாலி கட்டுவே. இதுதானே உன் கற்பனை?"

"கரெக்டா சொன்னேடா..."

"அலையாதடா... போய் நல்ல மனசோட கல்யாணத்தைப் பாரு."

-விஸ்வநாதன் சுந்தரைத் தள்ளிவிட்டு கல்யாண கலாட்டாக் களை திரும்ப ரசிக்கத் தொடங்கினான். முன்பெல்லாம் கல்யாண வீடுகளில் நிறைய பாவாடை தாவணிகள் திரியும். குனியும்போதும், திரும்பும்போதும், தாவணி விலகி வாலிப மனங்களில் நெருப்பை யும் மூட்டும்.

ஆனால் இப்போது எங்கு பார்த்தாலும் சுடிதார், மிடி என்று மொத்த உடம்பையும் மூடியிருக்கும் ஆடைகள். அதுவும் அழ காகத்தான் இருக்கிறது. இருந்தாலும் பாவாடை தாவணியின் கவர்ச்சி இதற்கெல்லாம் வராது என்றுதான் தோன்றியது.

தலையிலும் பெரிதாக மல்லிகைச் சரமோ, கதம்பமோ இல்லை. ஒற்றை ரோஜா இல்லாவிட்டால் ஷாம்பு விளம்பரத்துக்கு வந்த மாதிரி அள்ளிக் கட்டாத கூந்தல்கள். அப்படியும் இப்படியுமாக நடக்கும்போது எத்தனைபேர் தன்னைப் பார்க்கின்றார்கள் என்கிற கம்ப்யூட்டர்த் தனமான வேகக் கணிப்புகள் வேறு.

பாவம் நாதஸ்வரக்காரர்.

வாங்கிவிட்ட காசுக்காக 'தேமே' என்று ஊதிக் கொண்டிருந்தார். விஸ்வநாதனும் பார்த்துப் பார்த்து போரடித்துப் போய் எழுந்து நின்றான்.

சுந்தர் மணப்பெண்ணைப் பற்றி சொன்னது மனதில் ஒரு கல்கண்டின் சொரசரப்பாய் நிரவிக்கொண்டிருந்தது.

அப்படியே நடந்துபோய் எட்டிப் பார்க்கலாம் என்று தோன்றி யது. நடந்தான். கல்யாண மண்டப மாடியில் இருந்தது மணப்பெண் கள் அறை! மணப் பெண்ணின் உறவுக்காரப் பெண்கள் கூட்டம். அவர்களில் பீப்பாய் சைஸில் இருந்து ஊதுபத்தி குச்சி வரை விதம்விதமான அளவுகள்.



ஒரு பட்டு வேட்டிக்காரர் மந்தை ஆடு கணக்காய் வெற்றிலை யைக் குதப்பிக் கொண்டு, "நேரமாச்சு நேரமாச்சு" என்று கத்திக் கொண்டிருந்தார்.

பரமசாதுவாய் வந்து நிற்கும் விஸ்வநாதனைப் பார்த்துவிட்டு அவனிடம் வந்தவர், "மணி என்ன சார்" என்றார். விஸ்வநாதனும் கெடிகாரத்தைப் பார்த்து "ஏழாகப் போகுது" என்றான்.

அப்போது "அத்தான் ஒரு நிமிஷம்..." என்று உள்ளிருந்து ஒரு குரல். நிமிர்ந்தபோது மணப்பெண் மஞ்சுளாதான் கூப்பிட்டிருந் தாள்.

தலை கொள்ளாத பூவும் ஜடை வில்லையுமாய் பட்டுப்புடவை சரசரக்க விஸ்வநாதனின் கண்ணில் பட்டவள் அவனையும் பிரமிக்க வைத்தாள்.

சுந்தர் சொன்னது உண்மைதான்!

விஸ்வநாதனுக்கு அவளது அழகு தட்டாமலை சுற்றியது. அவளோ மணி என்ன என்று கேட்ட வெற்றிலை வாய் மனிதரிடம், "அக்காவை உடனே வரச் சொல்லுங்க. எனக்கு இந்தப் புடவை சுத்தமா பிடிக்கலை. அந்த மஜந்தா கலர் புடவைதான் நல்லாருக்கு. அதை எடுத்துக்கிட்டு வரச் சொல்லுங்க..." -என்று அதட்டலாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். கொஞ்சம் கட்டைக்குரல். உருவ அழகோடு அது மட்டும் ஒத்துப்போகாமல் தனியாக நிதானித்தது.

"சொல்றேம்மா... சொல்றேம்மா..." என்று அவரும் தாண்டிப் போனார். விஸ்வநாதனுக்கு தரிசனம் முடிந்து திரும்பினான்.

நேராக பிரபாகரனைத்தான் தேடிப் போனான். அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, "குண்டா... உன் ஆள் செம பர்சனால் டிடா... சரியான செலக்ஷன்?" என்றான். பிரபாகரும் பெருமை பொங்க நாம நெற்றியோடு பார்த்துச் சிரித்தான்.

"ஆமா எதுக்குடா இந்த நாமம்?"

"எங்க குடும்ப வழக்கம்டா..."

"சகிக்கலடா... உன்னை இப்ப பார்த்தா ராம ஜென்ம பூமிக்காக போராட்ற சாமியார் மாதிரியே இருக்கே."

-விஸ்வநாதனும் சந்தோஷமாய் பிரபாகரை வார ஒரே குதூகலம். ஆனால் இதெல்லாம் நிரந்தரமில்லை என்கிற மாதிரி ஒரு பொடியன் அந்த கல்யாண வீட்டில் நுழைந்து பெண்ணின் அப்பா வான கல்யாண சுந்தரம் எங்கே என்று தேடிக்கொண்டிருந்தான்.

கல்யாண சுந்தரமும் சமையல் கட்டுக்கு முன்னால் நின்று கொண்டு அதட்டலாக சமையல்காரரிடம் பேசிக்கொண்டிருந்தார்.

"யாராவது சாப்பாடு சரியில்லைன்னு சொன்னா பேசுன தொகையில பாதியைக் குறைச்சிடுவேன். அதே பிரமாதம்னு சொன்னா பேசுன தொகையோட ஒரு பவுன் மோதிரமும் பரிசா உண்டு. பாத்து கவனமா கைவரிசையைக் காட்டுங்க. ஞாபகம் இருக்கட்டும்."

-சொல்லி முடித்த அவர் முன், தேடிக் கொண்டு வந்த பொடியன்

"யார் தம்பி நீ. என்ன இது கைல கடுதாசி?"

"ஒரு ஆள் வந்து இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாரு." - அவன் நீட்ட அவரும் வாங்கி ஆவலாகப் பிரித்தார்.

கடிதம் மிரட்டியது.

"எச்சரிக்கை!

கல்யாணப் பையன் பிரபாகர் ஒரு பொம்பளைப் பொறுக்கி. இவனுக்கு பெண் கொடுத்தால் உங்கள் பெண்ணின் வாழ்க்கை அதோ கதிதான். இப்படிக்கு உண்மை விளம்பி."

கடிதத்தைப் படித்துவிட்டு நிமிர்ந்தவர் எதிரில் அந்தப் பொடி யன் இல்லை. அவருக்குத் தலையைச் சுற்றியது.



# 2

பிரபாகரிடம் அசடு வழிந்துகொண்டிருந்தது.

சுற்றிலும் நண்பர்கள் நின்றுகொண்டு நையாண்டி செய்து கொண்டிருந்தனர். அவர்களில் அவனது ஆபீஸ் ஸ்டெனோ சசிகலாவும் இருந்தாள்.

"பிரபா என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டு கடைசில என்னை ஏமாத்திட்டேல்ல?" என்று கோபமாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டு எல்லோரையுமே ஒரு கணம் திகைக்க வைத்தாள்.

"அடப்பாவி... என்னடா இது?"

"சசி சும்மா இருக்கமாட்டே. இந்த உலகத்துல ஒரு குருடன் கூட உன்னை கட்டிக்கறேன்னு சொல்ல மாட்டான். உன் வாய்க்கு பயந்தே ஓடிடுவான். விளையாட்டு வினையாகப் போகுது. போய் வாயைக் கழுவு." என்றான் அருகில் இருந்த சுந்தர்.

"நீ சும்மா இருடா... இப்படி எல்லாம் சொன்னா நான் நீ சொன்னதை சொல்ல மாட்டேன்னு நினைச்சியா?"

"நானா... நான் என்னடி சொன்னேன்?"

"சரி இவன் என்ன சொன்னான். கமான் கமான் சொல்லு."

"அப்பப்ப எனக்கு கம்பெனி கொடு. நான் நம்ம எம்.டி.கிட்ட சொல்லி உனக்கு ப்ரமோஷன் வாங்கித் தர்றேன்னு சொன்னான். ச்சீ போடா நான் அந்த மாதிரி பொண்ணு இல்லேன்னு சொல்லி கன்னத்துலகூட அறைஞ்சுட்டேன்."

"ஐய்யோ ஐய்யோ புளுகறாடா இவ. போயும் போயும் இவகிட்ட போய் யாராவது கம்பெனி கொடுன்னு சொல்வாங் களாடா... யோசியுங்கடா..."

சுந்தர் பொறியில் அகப்பட்ட எலிகணக்காய் கத்த மொத்த பேரும் சிரித்தனர். பிரபாகரும் சேர்ந்து சிரித்தபோது கல்யாண சுந்தரத்தின் தலை அங்கே தெரிந்தது.

அவரைப் பார்க்கவும் கலாட்டா வேகம் குறைய சசிகலாவும் அங்கிருந்து நகர்ந்தாள்.

கல்யாண சுந்தரம் பிரபாகரை நெருங்கினார்.

பிரபாகர் சுவரை மலங்க மலங்கப் பார்த்தான்.

பால் வடியும் முகம். அதைப் பார்த்தவர் கையில் அந்த கடிதம். அதை வைத்துக்கொண்டு எதையோ கேட்க வாயெடுத்து பின் முடியாமல் போய் "மாப்ள எல்லாம் செளகர்யமா இருக்குல்ல..." என்று பேச்சை மாற்றினார்.

"அதெல்லாம் ஒரு குறையும் இல்லை மாமா..."

"அதான் சும்மா விசாரிச்சுட்டு போகலாம்னு வந்தேன். எல்லாம் செளகர்யமா இருக்குன்னா ஓ.கே..." என்று அவர் மிடறு காட்டும் போது சற்றுத் தள்ளி சசிகலா. சுந்தர் கையை கோர்த்துக்கொண்டு கலாட்டா செய்துகொண்டிருந்தாள். அதையும் பார்த்தவர் அங் கிருந்து தேங்கித் தேங்கி நடந்து வெளியேறினார்.

கடிதம் மனதுக்குள் சூறாவளியை உருவாக்கியிருந்தது. ஆனால் அதை எந்த அளவு நம்புவது என்றுதான் தெரியவில்லை.

பொதுவில் மொட்டைக் கடிதங்கள் எப்பொழுதும் குட்டையைத் தான் குழப்பும். பெரும்பாலும் அதில் உண்மை இருக்காது. இது அந்த ரகமா இல்லை நிஜமாலும் உண்மையை சொல்லியிருக்கிறதா என்று தெரியவில்லையே...?

சற்று முன் வரை ஒவ்வொருவரையும் விரட்டிக் கொண்டிருந்த வர் அப்படியே மாறி தத்தளிப்பும் திகைப்புமாக அந்த கல்யாணக் கூட்டத்தை சுற்றிவர ஆரம்பித்தார்.



நடுநடுவே பிரபாகரையும் அவன் சகாக்கள் செய்யும் கலாட்டாக்கள் மேலும் பார்வை ஓடிக்கொண்டே இருந்தது.

அவர் பார்க்கும் நேரம் அவனது ஆபீஸ் கிளார்க் ஒருத்தி பிரபாகரின் நெற்றியை முத்தமிட்டு வாழ்த்திக்கொண்டிருந்தாள்.

அதை சகஜமான ஒரு விஷயமாக எடுத்துக்கொள்வதா இல்லை சந்தேகத்திற்குரியதாக எடுத்துக்கொள்வதா என்பதிலும் குழப்பம் அவரை ஆக்ரமித்தது.

அந்தவேளை பார்த்து அவர் மனைவி பார்வதி அவரைத் தேடிக் கொண்டு வந்து, "இங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க. மாப்பிள்ளை அழைப்புக்கு நேரமாகுதுல்ல. வாங்க..." என்று அவரது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனாள்.

அவரும் குட்டி ஆடு கணக்காய் பின்னால் போனார்.

"ஆமா. அது என்ன கையில காகிதம். ஏதாவது டெலிகிராமா?"

"ஆங் ஆமாம்... ஆமாம்... ஆமாம் வாழ்த்துத் தந்தி!"

-என்று தந்தியடித்தபடியே அதை சட்டைப் பாக்கெட்டில் அடக்கினார்.

மாப்பிள்ளை அழைப்பும் ஆரம்பமாயிற்று!

பிரபாகர் சஃபாரி சூட்டில் நாம நெற்றியோடு தூள் கிளப்பினான். கழுத்தில் மாலையோடு கையில் செண்டோடு வந்து பந்தலிலும் அமர்ந்தான். அதன்பின் ஐய்யர் மற்ற விஷயங்களைப் பார்த்துக் கொள்ளத் தொடங்கிவிட்டார்.

வழக்கமான சம்பிரதாயங்கள் அரங்கேற நேரமும் உருளத் தொடங்கியது.

கல்யாண சுந்தரத்திற்கு மட்டும் இருப்பே கொள்ளவில்லை. கடிதம் வாரிக் கொட்டிய நெருப்பு மனதில் புகைந்துகொண்டே இருந்தது.

அது யாருக்கு புரிந்ததோ புரியல்லையோ கல்யாண சுந்தரத்தின் நண்பர் ஜனார்த்தனத்திற்கு மட்டும் புரிந்தது.

கல்யாண சுந்தரத்தை நெருங்கி காதைக் கடித்தார்.

"கல்யாண சுந்தரம் ஏன் ஒரு மாதிரி இருக்கே... கல்யாணச் செலவுக்கு பணம் கிணம் குறையுதா... சொல்லு நான் தர்றேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல ஜனார்த்தனம். இதுவேற சிக்கல்."

"என்னன்னு சொல்லு. நீ இப்படி உம்முன்னு இருந்தா எப்படி?"

"கொஞ்சம் அப்படி வா..." கல்யாணசுந்தரம் ஜனாவை தள்ளிக் கொண்டு போய் ரகசியமாய் அந்தக் கடிதத்தை நீட்டினார். அதை வாங்கிப் பார்த்த ஜனார்த்தனம் முகத்திலும் அதிர்ச்சி.

"இப்ப என்ன ஜனா பண்றது?"

"அவசரப்படாதே. யாராவது பொறாமை பிடிச்சவங்க உன்னை குழப்பணும்னு இப்படி எழுதியிருப்பாங்க. நீ பையன பத்தி நல்லா விசாரிச்சுட்டுத்தானே கல்யாணத்துக்கு சம்மதிச்சே?"

"பின்னே... இப்பகூட என் மச்சினன் மாப்பிள்ளை எப்படின்னு தோண்டி துருவிட்டு வந்து தங்கமான பையனாத்தான் தெரியறான் னான்."

"அப்புறம் என்ன? தைரியமா இரு!"

"முடியலை ஜனா. ஒரே பொண்ணு. எங்கே மோசம் போயிடு வேனோன்னு பயமா இருக்கு."

"வாஸ்தவம்தான். அதுக்காக இப்ப நாம என்ன நீதி விசாரணையா பண்ண முடியும்."

"நீதான் இப்ப எனக்கு ஒரு உதவி பண்ணணும்."

"என்ன பண்ணணும் சொல்லு."



"நாளைக்கு காலைலதான் முகூர்த்தம். நல்லவேளை அதுவும் பதினோறு மணிக்குமேலதான். இதுக்கு நடுவுல பையன் நிஜமா பொம்பள விஷயத்துல எப்படின்னு நீதான் கண்டுபிடிக்கணும். நீ வந்து பையன் உத்தமமான பையன்னு சொன்னாதான் நான் தாலி கட்டவே விடுவேன். இல்லேன்னா தலை தப்புனது தம்பிரான் புண்ணியம்னு நான் கல்யாணத்தையே நிறுத்திடுவேன்..."

"அட என்ன கல்யாண சுந்தரம் நீ. இந்த ராத்திரியில. இந்த பரீட்சையை எப்படிய்யா நான் வைக்கறது. கூட்டத்த பார்த்தியா?"

"அப்ப ஒண்ணு பண்ணவா?"

"என்ன?"

"நான் திடீர்னு ஹார்ட் அட்டாக்னு சொல்லி மயக்கம் போட்டு விழுந்திடறேன். இதுதான் சாக்குன்னு கல்யாணத்தை நிறுத்திடு. அப்புறமா பையன பத்தி முழுசா தெரிஞ்சிகிட்ட பிறகு ஒரு முடிவுக்கு வந்து கல்யாணத்தை நடத்தலாம்."

"உளறாதய்யா. ஒரு தடவை கல்யாணம் தள்ளிப் போனாலும் அது தள்ளிப் போனதுதான். பாத்துப் பாத்து ஏற்பாடு பண்ணிட்டு இப்பப் போய் இப்படி பேசுறியேய்யா..."

"நான் என்ன பண்ணட்டும். என் இடத்துல நீ இருந்து பார். அப்ப தெரியும்."

"அலட்டாதே. நானும் உன்னை மாதிரி ஒரு பொண்ணுக்கு அப்பன்தான்."

"இல்ல ஜனார்த்தனம். எனக்கு மனசே சரியில்ல. பையன் தங்கம்னு எனக்கு தெரியற வரை எனக்கு மனசு நிம்மதியாகாது. நிஜமாலுமே மாரடைப்பு வந்தாலும் வந்துடும்."

"இப்பதானே சொன்னேன் அலட்டிக்காதேன்னு. சரி... பொறுப்பை என்கிட்ட விட்டுடு. நீபோய் வேலையை பார். பையன்

தங்கமா பித்தளையான்னு இந்த ராத்திரியிலேயே நான் கண்டு பிடிக்கிறேன்..."

"எப்படி... எப்படி கண்டுபிடிப்பே?"

"ஒரு பையன் எப்படிப்பட்டவன்னு தெரிஞ்சுக்க முதல்ல அவன் பழகற வட்டத்தைத்தான் கவனிக்கணும். மாப்பிள்ளையோட ஃப்ரண்ட்சுங்கல்லாம் கல்யாணத்துக்கு வந்துருக்காங்கல்ல..."

"அத ஏன் கேக்கறே... ஒரு கூட்டமே வந்துருக்குது."

"அப்புறம் என்ன... விடு... நான் பாத்துக்கறேன்."

"பாத்து ஜனா..."

"நீ வாயை மூடிக்கிட்டு சும்மா இரு. இந்த மொட்டைக் கடுதாசி விஷயமா உன் பொண்டாட்டிக்கிட்ட கூட நீ மூச்சுவிடக் கூடாது."

"நான் மூச்சு காட்டமாட்டேன். இந்த நிமிஷம் நீதான் என் கடவுள்."

"சரி சரி போய் வேலையைப் பார். நான் பாத்துக்கறேன்."

-ஜனார்த்தனம் கல்யாண சுந்தரத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு அங்கிருந்து விலகினார்.

# 3

**க**ல்யாண விருந்து நடந்துகொண்டிருந்தது.

பிரபாகரின் ஆபீஸ் கூட்டம் ஒரே வரிசையாக உட்கார்ந்து கொண்டு ஒரு பிடி பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

ஜனார்த்தனம் நடுவில் அப்படியே ஒரு ரவுண்டு வந்தார். சாதம் பரிமாறுகிறவர்களையும் விரட்டி, "அந்த இலையில் அப்பளம் இல்ல பார்... இங்க ரசம் கொண்டு..." என்று தர்பார் பண்ணினார்.



சுந்தர் ரசத்தை ஊடுகட்டி அடித்துக்கொண்டிருந்தார். தயிர் வடைக்காக விஸ்வநாதன் சப்ளையரை தேடலோடு பார்த்தான்.

"என்ன தம்பி. என்ன வேணும்...?"

"ஒண்ணுமில்ல. தயிர் வடை ரொம்ப நல்லா இருக்கு. அதான்...!"

"ஏம்பா சர்வர்... இங்க தம்பிக்கு தயிர் வடை கொண்டு வா..." -ஜனார்த்தனம் நின்ற இடத்திலிருந்து கத்திவிட்டு, "நீங்களெல்லாம் மாப்பிள்ளையோட ஃபிரண்ட்ஸா?" என்று தெரியாத மாதிரி கேட்டார்.

"ஆமாம்... சார் நீங்க...?"

"நான் பொண்ணோட அப்பாவோட ஃபிரண்டு."

"அப்படியா...?"

"உங்களுக்கெல்லாம் நான்வெஜ்ஜே ஏற்பாடு செய்திருந்ததா சொன்னானே கல்யாணசுந்தரம். உங்ககிட்ட யாரும் சொல்ல லையா?" -ஜனா மெல்ல வளைக்க ஆரம்பித்தார்.

"அப்படியா... அடடா முதல்ல தெரியாம போச்சே?" -சுந்தர் கையை உதறினான்.

"டேய் பாத்துடா. இங்க மேலே எச்சி தெறிக்குது பாரு." -பக்கத்தில் அமர்ந்திருந்த பாஸ்கர் என்பவன் இடையில் ஒரு கத்து கத்த,

"சும்மா இருடா... நான் இந்தப் பக்கம் திரும்பினப்போ என் இலையில இருந்த மைசூர் பாக்கை திருடும்போது அது எச்சியா தெரியலையாக்கும்" என்று சுந்தரும் ஒரு சூடு வைக்க ஜனார்த்தனம் அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தார்.

"என்ன சார் சிரிக்கிறீங்க... ஆமாம் இப்ப நான்வெஜ்ஜையெல் லாம் யார் கொட்டிக்கப் போறாங்க?"

"கவலையே படாதீங்க. சாப்பிட்டவரை போதும். கைய கழுவிக்கிட்டு வாங்க. நான்வெஜ் மட்டுமில்ல. பாட்டில்கூட இருக்கு..."

-ஜனார்த்தனம் கண்களைச் சிமிட்ட சுந்தரும் பாஸ்கரும் சொக்கிப் போனார்கள். ஆனால் விஸ்வநாதன் அதை பெரிதாக ரசிக்காமல் "வேண்டாண்டா அலையாதீங்கடா..." என்றான்.

"ஆமா... எங்களையும் சேர்த்துப்பீங்களாடா...?" -சசிகலாவின் குரலும் குறுக்கே நுழைந்தது. ஜனார்த்தனத்துக்கு ஒருகணம் மூச்சுத் திணறியது. சசிகலாவை சற்று கூர்மையாகப் பார்த்தார்.

"என்ன சார் பாக்கறீங்க. பயந்துட்டீங்களா? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்" என்று பதிலுக்கு அவரைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

"அதனால என்னம்மா... இப்பல்லாம் எல்லாமே மாறிப் போச்சு. அப்பப்ப நானும் என் சம்சாரமும்கூட ரகசியமா தண்ணி போடுவோம்..." -ஜனா வேண்டுமென்றே பேசிவிட்டு நண்பர்களின் முகங்களைப் பார்த்தார்.

"வெரிகுட் சார் அப்படித்தான் இருக்கணும். உங்க வொய்ஃப் ரொம்ப கொடுத்து வெச்சவங்க..."

"கொடுத்து வெச்சவதான். பாட்டிலைத் திறந்தா எனக்குன்னு மிச்சமே வைக்க மாட்டா..."

-அவர் அப்படிச் சொல்ல கலீர் என்ற சிரிப்பொலி பரவியது.

"சரி சரி சாப்பிட்டுட்டு வாங்க. உங்களையெல்லாம் ஸ்பெஷலா கவனிச்சுக்கச் சொல்லி எனக்கு உத்தரவு."

"இதோ வந்துட்டே இருக்கோம்..." -அவர்களும் தயார் ஆனார்கள்.

சாப்பிட்டு முடித்துவிட்டு திரும்பியவர்களை அப்படியே அள்ளிக்கொண்டு அருகில் ஒரு ஏ.சி. அறைக்குள் நுழைந்தார் ஜனார்த்தனம்.



சுந்தர், பாஸ்கர், விஸ்வநாதன் என்கிற மூவரும் சாப்பிட்ட களைப்போடு நெட்டி முறித்தனர். உள்ளே ஒரு டபுள் காட் பெட்! அதன்மேல் ஒரு பட்டுப்புடவை விரிந்து கிடக்க அதில் அடுக்கி வைக்கப்பட்ட சீட்டுக்கட்டு. பக்கத்தில் மோடா ஒன்று. அதன்மேல் நல்ல முழங்கை உயரத்துக்கு நான்கு மது பாட்டில்கள். பக்கத்திலேயே சிப்ஸ், மெது பக்கோடா, வடை என்கிற கார வகைகள்.

"சூப்பர் சார்..." -என்றபடியே சுந்தர் போய் பாட்டிலைத் தொட்டான்.

"தம்பி தம்பி இப்பதான் சாப்பிட்டு வந்துருக்கீங்க. கொஞ்சம் போகட்டும் உட்காருங்க. கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருப்போம்." என்றபடி அந்த பாட்டிலை வாங்கி சற்றுத் தள்ளி வைத்தவர்,

"அப்புறம் உங்கள்ல யாருக்கெல்லாம் கல்யாணம் ஆகி யிருக்கு..." என்று நைச்சியமாகப் பேச்சை ஆரம்பித்தார்.

"மூணு பேருமே கட்டை பிரம்மச்சாரிங்கதான் சார்... நல்ல பொண்ணு இருந்தா சொல்லுங்க..." -என்றான் பாஸ்கர்.

"ஆமா முணு பேருமே எங்க மாப்ளையோட தான் வேலை பாக்கறீங்களா?"

"பின்ன... ஒரே டிபார்ட்மெண்ட் வேற!"

"எத்தனை வருஷமா பழகறீங்க?"

"எனக்கு பிரபாகரை அஞ்சாறு வருஷமாத்தான் தெரியும். விச்சுதான் அவனோட பால்ய ஸ்னேகிதன்."

"அப்படியா... அப்ப நீங்களும் மாப்பிள்ளையோட ஊரா?"

"ஆமாம்..." -விஸ்வநாதன் அந்த அறையில் கிடந்த சோபாவில் உட்கார்ந்திருந்த நிலையில் மென்மையாக தலையசைத்தான்."

"நானும் கல்யாண சுந்தரமும் கூட பால்ய சினேகிதங்கதான்." -ஜனா நைச்சியமாக விஷயத்துக்குள் புகத் தொடங்கினார்.

"அதனாலதான் எங்கள கவனிச்சுக்கற பொறுப்ப உங்ககிட்ட விட்டுருக்கார் போல இருக்கு."

"நல்லா கவனிச்சுக்கடா ஜனான்னு சொல்லித்தான் அனுப்பி யிருக்கான். அவனுக்கு எல்லாரும் எப்பவும் சந்தோஷமா இருக் கணும். ரொம்ப வித்தியாசமான கேரக்டர் அவன்."

ஜனார்த்தனன் இடைவெளி விட்டார். நண்பர்கள் முகத்தில் எதிரொலியைத் தேடினார்.

சுந்தர் கைகள் பதிலுக்கு சீட்டுக் கட்டைத் தேடி குலுக்க ஆரம்பித்திருந்தன.

"என்ன தம்பி ஒரு ரவுண்டு உக்காருவோமா?"

"பின்ன வாழை மரம் கட்டாம கூட கல்யாணம் பண்ணலாங்க... ஆனா சீட்டு விளையாட்டு இல்லாம கல்யாணம் பண்ணுனா அது கல்யாணமே இல்லை. வாங்கடா... உட்காருங்கடா..."

-சுந்தர் கட்டைப் பிரித்து ஆளாளுக்குப் பிரித்துப்போட பாஸ்கர் மட்டும் எழுந்து வந்து அவன் எதிரில் அமர்ந்துகொண்டு சீட்டை எடுத்தான்.

"ஏன் தம்பி நீங்க வரலையா?" -ஜனா விஸ்வநாதனைப் பார்த்துக் கேட்டார்.

"எனக்கு ஆடத் தெரியாதுங்க."

"ஆச்சரியமா இருக்குதே... இது என்ன பரதநாட்டியமா? வாத்யார் வெச்சு கத்துக்க. வாங்க சொல்லித் தர்றேன்."

"இல்ல வேண்டாம். நீங்க ஆடுங்க நான் சும்மா பாக்கறேன்."

"சரி... தீர்த்தமாவது சாப்பிடுங்க..."

"இல்ல... எனக்கு அந்தப் பழக்கமும் கிடையாது."



"ஆமாங்க. அவன் ஒரு சாமியார். இவன் ஒரு சாமியார்னா உங்க மாப்ளை இருக்கானே பிரபாகர் அவன் அதுக்கு மேல..."

"அப்படியா... அவருக்கும் எந்த கெட்டப் பழக்கமும் கிடையாதா?"

"தெண்டங்க அவன்..." சுந்தர் சீட்டைப் பார்த்தபடியே வார்த் தையை விட "அப்படியா ஆச்சர்யமாயிருக்குதே..." என்ற ஜனார்த் தனம் நைஸாக எழுந்துபோய் டி.வி. அருகில் இருந்த வி.சி.ஆர்.-ஐயும் அதன் மேல் இருந்த கேசட்டையும் பார்த்தார்.

"என்ன சார் ஏதாவது புதுப்படமா?"

"யாருக்குத் தெரியும். வெச்சிருக்காங்க. போட்டுப் பார்ப்போம்" - என்றபடி கேசட்டை உள்ளே செருகினார்.

அடுத்த சில நிமிடங்களில் திரையில் ஒரு முழு நிர்வாணப் பலான படம் ஓட ஆரம்பித்தது.

"டேய் டேய்... ப்ளூ ஃபிலிம்டா... அட்றா சக்கை." -சுந்தர் மத்தாப்பானான். பாஸ்கரும் சீட்டை விட்டெறிந்துவிட்டு டி.வி.-யில் ஊன்றினான். விஸ்வநாதனுக்கு மட்டும் அங்கே இருக்கவே பிடிக்காமல் போனது. எழுந்து வெளியே செல்லத் தொடங்கினான்.

"தம்பி தம்பி எங்கே போறீங்க..." -ஜனார்த்தனம் தடுக்கத் தடுக்க அவன் வெளியேறிவிட்டான்.

"விடுங்க சார். அவன் அப்படித்தான். அவனுக்கு இந்த மாதிரி ஜமா எல்லாம் பிடிக்காது."

"அதெல்லாம் சும்மா தம்பி. இந்த மாதிரி விஷயமெல்லாம் பிடிக்காத ஆள் கூட இருக்க முடியுமா?"

"அப்ப அவன் நடிக்கிறான்னு சொல்றீங்களா?"

"ஆமாம். இல்லையா பின்னே? இந்த மாதிரி ஆளுங்கதான் ரகசியமா போய் ஜல்சா வேலை பார்ப்பாங்க." -ஜனார்த்தனம்

அடுத்தடுத்து பாணங்களாய் போட்டு எதிரொலிகளை உடனுக்குடன் கவனித்தார்.

"எங்களுக்கு தெரிஞ்ச அவன் அப்படியெல்லாம் இல்லை சார்." -என்ற பாஸ்கர் படத்தை விட்டு கண்ணை விலக்கவில்லை.

"ஆமாம் நீங்க எப்படி... வெறும பாக்கறதோட சரியா? இல்ல பாப்பாங்கள தேடிப் போறதும் உண்டா?"

"போகணும்னு ஆசையாதான் இருக்கு. ஆனா பயமா இருக்கு."

"ஆம்பளைன்னா போகணும் தம்பி. எனக்குத் தெரிஞ்ச எந்த ஆம்பளையும் யோக்யதை கிடையாது. ஒண்ணு காதலிச்சிருக்கணும். இல்ல ஒரு பொம்பளகிட்டையாவது போயிருக்கணும். இல்லேன்னு யார் சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்."

-ஜனார்த்தனம் ஆவேசமாகச் சொல்ல பாஸ்கரும், சுந்தரும் பதில் சொல்லாமல் ஓடிக்கொண்டிருந்த காட்சியிலேயே கண்ணாய் இருந்தனர்.

அதைத் தடுக்க நினைத்தவர் மெல்ல எழுந்து கதவருகே சென்று வெளியே பார்ப்பது போல பார்த்துவிட்டு வந்து, "தம்பி தம்பி கல்யாணத்துக்கு போலீஸ்காரர்கூட ஒருத்தர் வந்திருக்கிற மாதிரி தெரியுது. எதுக்கு வம்பு. ஆஃப் பண்ணுங்க" என்றபடியே டிவியை அணைத்தார். இருவரும் அவரை பரிதாபமாக பார்த்தனர்.

ஜனார்த்தனம், அவர்கள் பரிதாபமாகப் பார்ப்பதை உள்ளுக்குள்ளே ரசித்தபடியே வெளியே காட்டிக்கொள்ளாமல்,

"என்ன தம்பிங்களா... சிவபூஜையில கரடி மாதிரி போலீஸ் காரன் வந்துட்டானேன்னு பாக்கறீங்களா?" -என்று மெல்ல நூல் விட்டார்.

"கரடி மாதிரி இல்ல சார் அவர். கரடியேதான்..." என்றான் பாஸ்கரன்.



"ஏன் சார்... நாம கதவைச் சாத்திக்கிட்டுதானே பாக்கறோம். அவருக்கு என்ன தெரியவா போகுது?" -என்று அசடு வழிந்தான் சுந்தர்.

"ஒருவேளை இந்தப் பக்கம் வந்து பாத்துக்கீத்து வெச்சா அசிங்கம் பாருங்க... கல்யாண வீடா வேற இருக்கு. எதுக்கு தம்பி ரசாபாசம்" என்ற ஜனா தான் விட்ட நூலை அழகாக கோர்க்கும் விதமாய் "உங்களுக்கு ஒண்ணு தெரியுமா?" -என்று அவர்களைப் பார்த்து சற்று இடைவெளி விட்டார். அவர்களும் என்ன என்று ஆவலாகப் பார்க்க "இந்த கேசட்டை வாங்கிட்டு வந்து தந்ததே நம்ம மாப்ளைத் தம்பி பிரபாகர்தான்!" என்றார் படு கூலாக.

"அவனா...?" -அதிர்வு பாஸ்கரிடம்.

"அடப் போங்க சார். அவனுக்கு புளூ ஃபிலிம்னாலே காய்ச்சல் வந்துடும். அவன் வாங்கிட்டு வந்தாங்கறீங்களே?" -இது சுந்தர்.

-அவர்கள் அப்படிச் சொல்லச் சொல்ல உள்ளூர அவருக்கு சந்தோஷமாகத்தான் இருந்தது. இருந்தாலும் விடவில்லை.

"அப்ப நான் பொய் சொல்றேன்னு சொல்றீங்களா?" -என்று முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக்கொண்டு கேட்டார்.

"சரி இப்ப அதுக்கென்ன சார்?" -என்று இருவருமே கோரஸாக திருப்பிக் கேட்டனர்.

"இல்ல... மாப்ள என்னமோ பொம்பளைங்க சமாச்சாரம்னா என்னன்னே தெரியாத ஒரு பாப்பாங்கற லெவல்ல நீங்க நினைச்சுக் கிட்டிருக்கீங்களே அதுக்காகத்தான் அப்படிச் சொன்னேன்."

"இப்பவும் சொல்றேன், பிரபாகர் இந்த விஷயத்துல ஒரு பாப்பாதான். கல்யாணம் பண்ணிக்கிட்டு இவன்லாம் என்ன பண்ணுவான்னு எங்களுக்கெல்லாம் இப்பவும் ஒரு சந்தேகம் உண்டு. உங்க பொண்ணு விவரமாக இருந்தாதான் பேரன் பேத்தின்னு உங்க நண்பர் பாக்க முடியும். இல்லாட்டி போகவேண்டியது தான்."

-சுந்தர் ஒரே போடாக போட்டான். "டேய் இவரு சுத்த மோசம்டா... நமக்கு எல்லா விஷயத்துலயும் ஆசைக் காட்ற ஆளாகத்தான் இருக்கார். அனுபவிக்க விடமாட்டேங்கறார். வாடா போகலாம்" என்று பாஸ்கரும் எழுந்து நடையைக் கட்டப் பார்க்க ஓடிப்போய் அவனை இழுத்து வந்தார்.

"தம்பி தம்பி இப்படி கோவிச்சுகிட்டா எப்படி. நான் வேணா வெளியே போய்ட்றேன். கதவைச் சாத்திக்கிட்டு நீங்க சந்தோஷமா இருங்க. நான் வரட்டுமா?"

-அவர்களை உள்ளே தள்ளி கதவையும் சாற்றிக்கொண்டு வெளியில் வந்தார்.

## 4

மணி பதினொன்றைத் தாண்டியிருந்தது.

கல்யாண சந்தடியும் ஓய்ந்த மாதிரியே தெரியவில்லை.

அங்கங்கே தீவு தீவாகக் கூடி அரட்டை அடித்துக் கொண்டிருந் தார்கள்.

நல்லவேளை... நாதஸ்வரக்காரர் மட்டும் ஏறக்கட்டியிருந்தார்.

இதில் எங்கே கல்யாண சுந்தரம்?

ஜனார்த்தனத்தின் இமை நரைத்த விழிகள் ஒரு ரவுண்டு கட்டுமுன் கல்யாணசுந்தரமே காத்திருந்த மாதிரி ஓடி வந்தார்.

"ஜனா... ஜனா... என்னாச்சு? ஏதாவது விஷயம் தெரிய வந்ததா?"

"அப்படி வா சொல்றேன்... யார் காதுலையாவது விழுந்துடப் போகுது."



-ஜனா கல்யாணசுந்தரத்தோடு ஒரு ஓரமாக ஒதுங்கினார். பின் நிதானமாய் அவர் எதிரில் பொடி டப்பியை எடுத்து அதன் தலையில் நொட் நொட் என்று தட்டினார்.

"எலேய்... நான் துடிச்சிட்டிருக்கேன். நீ நிதானமா பொடி போட்றியா? விஷயத்தைச் சொல்லுப்பா."

-கல்யாண சுந்தரம் படு கத்தலாக சுதற சிரித்தார் ஜனா...

"இப்படிச் சிரிச்சா என்ன அர்த்தம்?"

"நீ பயப்படும்படியா ஒண்ணுமில்லேன்னு அர்த்தம்."

"எப்படி... எப்படி... எப்படின்னு விளக்கமா சொல்லு."

"எதுக்கு இப்படிப் பாயறே... விளக்கமாவே சொல்றேன் கேட்டுக்க. மாப்பிள்ளையோட சினேகிதப் பசங்களை நான் எல்லா விதத்துலேயும் தட்டிப் பார்த்துட்டேன். அதுக்காக இதுக்கு கீழ போக முடியாதுங்கற அளவுக்கும் போய் புளுஃபிலிம் கேசட் ஒண்ணை ஐநூறு ரூபாய் வாடகைக்குன்னு வாங்கிக்கிட்டு வந்து போட்டுவிட்டும் ஆழம் பார்த்தேன்னா பார்த்துக்கையேன்..."

"அந்தப் பசங்களைப்பத்தியா நான் இப்ப கேட்டேன். எனக்கு மாப்பிள்ளையைப் பத்தி தெரியணும் ஜனா..."

"எலேய்... நான் என்ன விளங்கா மண்டையா? இவனுங்கள தடவிக்கொடுத்தாதானே இவனுங்க மனசுல இருக்கறது வெளிய வரும்."

"சரி சரி... என்ன சொன்னாங்க?"

"பச்சையா சொல்லட்டுமா?"

"சொல்லுப்பா..."

"சொல்லிடுவேன்..."

"அந்த மாதிரி விஷயத்துல மாப்பிள்ளை எலிமிண்ட்ரி ஸ்கூலாம். அதுகூட கிடையாது. எல்.கே.ஜி., யு.கே.ஜி.ன்னு கூட சொல்லலாமாம். நீ தாத்தா ஆறது உன் மாப்ள கைல இல்லையாம். உன் பொண்ணு கைலதான் இருக்குதாம்."

"அப்படியா சொன்னாங்க..."

"ஆமாம்... எனக்கும் அலுத்துப்போச்சு. நான் கல்யாணத்துக்கு வந்தேனா இல்ல. துப்புத்துலக்க வந்தேனான்னு ஒரே சந்தேகமாக வேற இருக்கு. இதோபார் கல்யாணம். முடிவா சொல்றேன். மாப் பிள்ளையும் சரி, அவரோட சினேகிதப் பசங்களும் சரி, வயசுக்குத் தகுந்த மாதிரிதான் இருக்காங்க. பெருசா ஒரு குறையும் தெரியலை. இருந்தாலும் நீ சமாதானப்படமாட்டே இதுக்காக நான் கடைசியா ஒரு ஐடியா பண்ணியிருக்கேன்."

"என்ன... என்ன?"

"பதட்டப்படாதே... பதட்டப்படாதே! கல்யாண ஏற்பாட்டை யெல்லாம் பிரமாதமா பண்ணியிருக்கே. அதை ஒரு அல்ப மொட்டைக் கடுதாசி கெடுத்ததா இருக்கவேண்டாம். அவ்வளவு தான் சொல்வேன்."

"ஜனா... நீ அந்த கடைசி ஐடியாவைச் சொல்லு..."

"பெருசா ஒண்ணுமில்லை. மாப்ளையைத் தனியா பார்த்து ஒரு பொண்ணு உங்களை புருஷன்னு சொல்லிக்கிட்டு வந்து கலாட்டா பண்ணப் பார்த்தா. நான்தான் லட்ச ரூபாயைக் கொடுத்து சரிக்கட்டி அனுப்பியிருக்கேன். போனதெல்லாம் போகட்டும். கல்யாணம் பண்ணிக்கப் போற எங்க பொண்ணுக்கிட்டையாவது ஒழுங்கா இருக்கறேன்னு சத்தியம் பண்ணுங்க. அப்பதான் காலையில மேள சப்தம் கேக்கும்னு சொல்வேன்.

மாப்ள ஒருவேளை களவாணியா இருந்தா என் கையைப் பிடிச்சுக்கிட்டு கதறுவாரு. இல்லே தாட்பூட்னு குதிச்சார்னு வை அப்படியே பிளேட்டை மாத்தி ஏப்ரல் ஃபூல்னு சொல்லிடுவேன்.



அதன் வசதியா இன்னும் ஒரு மணி நேரத்துல ஏப்ரல் ஒண்ணாம் தேதி பொறக்கப் போகுதே... எப்படி ஐடியா?"

-ஜனார்த்தனம் விஸ்தாரமாகச் சொல்லி முடிக்க கல்யாண சுந்தரம் அதைக் கேட்டு கல்லாகிவிட்டிருந்தார்.

"என்னய்யா.... ஏன் சிலையாயிட்டே?"

"இல்ல... இது சரியா ஒர்க் அவுட்டாகுமா... இல்லை ஏடாகூடமா ஏதாவது ஆயிடுமோன்னு பயமா இருக்கு."

"அட போய்யா... உனக்கு கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை. இப்படி இருந்தா எப்படி உன் சந்தேகம் தீரும்?"

"இல்ல... ஒருவேளை மாப்பளை தப்பு பண்ணிட்டேன்னு சொல்றார்னு வை..."

"அடப்பாவி..... உனக்கு இவ்வளவு அவநம்பிக்கையா?"

"என்ன பண்ண... கொஞ்சம் முந்தி இன்னொரு மொட்டைக் கடுதாசி வந்துருக்குதே...."

"நிஜமாவா.... எங்கே?" -ஜனார்த்தனத்துக்கு கேட்கும் போதே கைகள் நடுங்கியது. கல்யாண சுந்தரமும் எடுத்து நீட்டினார்.

வாங்கிப் பிரித்த ஜனாவின் விழிகள் கடிதத்தில் ஓடியது.

"மாப்பிள்ளையைப் பற்றி எச்சரிக்கை செய்தும் உங்களுக்கு புத்தி வரவில்லை. இனி உங்கள் மகளை அந்த ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்! - இப்படிக்கு உண்மை விளம்பி."

"அடச்சண்டாளா... எவன் இப்படி மொட்டைக் கடுதாசி போட்டு குட்டி கலாட்டா பண்றவன்....?"

"என் மனசே சரியில்ல ஜனா... இப்ப நீயே சொல்லு. என்னால எப்படி நிம்மதியா இருக்க முடியும்?" கல்யாண சுந்தரம் கண்களில் சரசரவென்று கண்ணீர் கொட்டியது.

"அழுவாதய்யா... யாராவது பாத்துடப்போறாங்க. சரி விடு. அந்த ஏப்ரல் ஃபூல் தந்திரம்தான் ஒரே வழி"

"பாத்து ஜனார்த்தனம். என் பொண்டாட்டி மச்சினன்லாம் கூட என்னைப் பாத்து என்ன ஆச்சுங்க உங்களுக்குன்னு தொணப்ப ஆரம்பிச்சுட்டாங்க. நான்தான் மென்னு முழுங்கிட்டு இருக்கேன்."

"சரி சரி... அப்படியே இரு. இன்னும் ஒரு மணி நேரம். ஒரே ஒரு மணி நேரம் பொறு. ஒருவழி பண்ணுவோம். நான் வர்றேன்."

"ஜனார்த்தனம் தீர்க்கமாய் சொல்லிவிட்டு அந்த இருண்ட மறைவிடத்தைவிட்டு நகர்ந்தார்.

தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தான் பிரபாகர். அவனைச் சுற்றி அவன் தங்கை வாசுகி, அம்மா கல்யாணி, அப்பா ராமரத்னம், மாமா கோபால்சாமி என்று சொந்தங்கள்.

"ஆமா இன்னுமா நீங்க போய் படுக்கலை?"

என்று கேட்டுக்கொண்டே வந்து ஒரு சேரை இழுத்துப் போட்ட படி அமர்ந்தாள் பிரபாகரின் அத்தை சிவகாமி.

"படுப்போம். ஆமா ராத்திரி எவ்வளவு நேரமானாலும் மாப்ளை வந்துடுவார்னு சொன்னியே சிவகாமி. இன்னும் வந்த மாதிரி தெரியலையே?" பிரபாகரின் அம்மா கல்யாணி வெற் றிலைக்கு சுண்ணாம்பு தடவியபடியே அவளிடம் விசாரித்தாள்.

"அதான் அண்ணி நானும் பாத்துகிட்டிருக்கேன். வாசல்ல ஆட்டோ வந்து நிக்கும்போதெல்லாம் அவரா அவரான்னுதான் பாக்கறேன். ஆனா யார் யாரோ வர்றாங்க."

"சரி சரி கவலையை விடு. சரியா வண்டி கிடைக்கலியோ என்னவோ?"

"அப்படித்தான் இருக்கும். ஏ அண்ணி பொண்ணு வீடு ரொம்ப பெரிய இடமாத் தெரியுதே. எப்படி அண்ணி பிடிச்சே இந்த சம்மந்தத்தை..."



"அத ஏன் கேக்கற... அங்கத்தொட்டு இங்கத்தொட்டு கடைசியில நம்ம வடமதுரை சண்முகசுந்தரி இல்ல...."

"ஆமா...."

"அவ மூலமாகத்தான் இந்த இடம் வந்தது. பொண்ணும் கிளியாட்டம் இருந்தா. எங்க இவன்தான் இந்த பொண்ணையும் வேண்டாம்னு சொல்லிடுவானோன்னு நினைச்சேன். நல்லவேளை சரின்னு சம்மதம் சொல்லிட்டான்."

-கல்யாணி பேச்சோடு பேச்சாக மகன் பிரபாகரைப் பார்க்க அவன் முகத்தில் கொஞ்சம்போல வெட்கம்.

"ஆமா சீரெல்லாம் பேசி முடிவு பண்ணினீங்களா இல்ல அவங்களே கேக்கவிடாம நல்லா பண்றதா சொல்லிட்டாங்களா?"

"அத ஏன் கேக்கறே.... எதையும் கேக்கக்கூடாது. பொண்ணு வாங்கற இடத்துல நகை நட்டு வரதட்சணைன்னு கேக்கறது பெரிய கேவலம்னு இவன் எங்களை கட்டிப் போட்டுட்டான்."

-கல்யாணி மீண்டு பிரபாகரைப் பார்த்தாள். அவன் சிரித்தான்.

"அத்தே.... கேக்காமலே அவங்க பொண்ணுக்கு என்னென்ன சீர் கொடுத்திருக்காங்க தெரியுமா?" - நடுவில் நுழைந்தாள் பிரபாகரின் தங்கை வாசுகி.

"எங்க எல்லாத்தையும் நம்ம சம்பிரதாயப்படி கொலுவுல வெச்சிருக்காங்களா?"

"அடக்கெரகமே... நீ இன்னுமா அதைப் பார்க்கலை....?"

"எங்க அண்ணி.... என்னை யார் கூட்டிகிட்டுப்போய் காட்டுனீங்க?"

"ஏய் வாசுகி... எழுந்திரி. முதல்ல உங்க அத்தையை சீர்வரிசை இருக்கற ரூமுக்கு கூட்டிக்கிட்டு போய் காட்டிட்டு வந்து உக்காரு. எழுந்திரி."

"அட என்னம்மா நீ... நடந்து நடந்து காலெல்லாம் ஒரே வலி. நீ போய்ட்டு வாயேன்."

"வேண்டாம்... வேண்டாம்... எங்க இருக்குன்னு சொல்லுங்க. நான் பார்த்துக்கறேன்"

"மாடியிலே பொண்ணு ரூமுக்கு பக்கத்து ரூம்லதான் இருக்குது"

கல்யாணி சொல்ல சிவகாமி ஆவலாக எழுந்திரிக்க அங்கே ஜனாவும் மெல்ல நுழைந்தார். தோள் துண்டை சரி செய்தபடி பிரபாகர் அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தவர் அவனைப் பார்த்து நைச்சியமாக சிரித்தார். அப்படியே பேச்சையும் தொடங்கினார்.

"தம்பி யாருன்னு பாக்கறீங்களாக்கும்?"

-பிரபாகர் பதில் உணர்வை வார்த்தைகள் இன்றி முகத்தில் காட்ட....

"என்பேர் ஜனார்த்தனன் உங்க மாமனாருக்கு ஐ மீன் மாமனாரா வரப்போற கல்யாண சுந்தரத்துக்கு பால்ய ஸ்னேகிதன்"

"அப்படியா சந்தோஷம்..." பிரபாகர் பேச்சோடு குலுக்குவதற்காக கையை நீட்டினான். ஜனார்த்தனமும் பதிலுக்கு கைகொடுத்து குலுக்கினார். வெற்றிலையை மென்று கொண்டிருந்த கல்யாணியும், வாசுகியும் அவர்கள் பேசட்டும் என்கிற மாதிரி நழுவினாலும் மாமா கோபால்சாமி மட்டும் எழுந்தரிக்கவில்லை.

"இந்த மனிதரை எப்படிக் கிளப்புவது?"

"யோசனையில் விழுந்த ஜனார்த்தனத்திற்கு கற்பூர புத்தி, உடனேயே ஐடியா அதில் பற்றி எரிந்தது.

"சார் நீங்க....?"

"நான் பையனுக்கு மாமா..."

"அப்படியா உங்களைத்தான் கீழே யாரோ தேடிக்கிட்டிருந்தாங்கன்னு நினைக்கிறேன்."



"என்னையா... யாரு?"

"தெரியலை. உயரமா கோடு போட்ட சட்டை போட்டுகிட்டு ஒருத்தர் சுத்திக்கிட்டிருக்காரு"

"யாரது... நீங்க பேசிக்கிட்டிருங்க. நான் போய் பார்த்துட்டு வர்றேன்."

-அவரும் நழுவ 'அப்பாடா...' என்றிருந்தது.

"தம்பி கொஞ்சம் அப்படி வர்றீங்களா... உங்க கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

"என்கிட்டையா... என்ன விஷயம்?"

"கொஞ்சம் வாங்களேன்..." ஜனா எழுந்து சென்றார். நடுவில் கெடிகாரத்தை ஒரு பார்வை பார்த்தார் மணி சரியாக 12 ஆகியிருந்தது.

"உங்க கெடிகாரத்துல மணி என்ன?" கேட்டார்.

அவனும் பார்த்துவிட்டு 12.05 என்றான்.

"குட்... முகூர்த்தநாள் பொறந்துடிச்சி...."

"என்ன சார் நீங்க என்னவோ புது வருஷம் பொறக்கறப்ப சொல்ற மாதிரி சொல்றீங்க."

"இல்லையா பின்னே... ஒவ்வொரு வருஷமும் புதுவருஷம் வரும். ஆனா உங்களுக்கு முகூர்த்த நாள்னா அது இன்னிக்கு மட்டும்தானே?"

- பேச்சோடு பால்கனியை நோக்கி ஒட்டிப் போய் நின்றார். பால்கனிக்கு வெளியில் சீரியல் விளக்குகள் எரிந்து எரிந்து அணைந்துகொண்டிருந்தன. அமர்க்களமான ஏற்பாடு. அங்கிருந்து கல்யாண மண்டப வாயிலும் தெரிந்தது. வாயிலில் 'பிரபாகர் WEDS மஞ்சுளா' என்கிற சீரியல் லைட் செட்டப்பும் கீழே ஒரு தாமரைப்பூ அலங்காரமும் படு தூக்கலாக இருந்தது.

பிரபாகர் அதைப் பார்த்தபடி நின்றுவிட்ட ஜனாவை செரும லோடு பார்த்து, "சொல்லுங்க சார். என்ன விஷயம்?" என்றான்.

"சொன்னா வருத்தப்படக்கூடாது."

"வருத்தமா... என்ன சார் சொல்றீங்க?"

"இது ரொம்ப சென்சிட்டிவான சீரியஸான விஷயம்."

"பீடிகை போடாம சொல்லுங்க சார்."

"நளினின்னு ஒரு பொண்ணு...." ஜனா வேண்டுமென்றே சற்று இடைவெளி விட்டார். பிரபாகரும் "சரி அவங்களுக்கென்ன..." என்று சாதாரணமாய் திருப்பிக் கேட்டான்.

"அந்தப் பொண்ணு இப்ப மூணு மாசமா கர்ப்பமா இருக்காளாம்."

"என்ன சார் நீங்க. அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?"

"அந்த கர்ப்பத்துக்கு...." மீண்டும் இடைவெளி. ஆனால் பிரபா கரோ அவரைப் பார்த்து சிரித்தான்.

"என்ன தம்பி சிரிக்கிறீங்க. நான் இன்னும் முடிக்கலை. முடிச்சா அசந்து போய்டுவீங்க...."

திரும்பவும் சிரித்தான்.

ஜனார்த்தனத்துக்கே ஒரு மாதிரியாகிவிட்டது.

"சிரிக்காதீங்க தம்பி... விஷயம் ரொம்ப சீரியஸ்.

"தெரியும். நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு எனக்கு நல்லா தெரியும்."

"தெரியுமா?"



"ஆமாம். அந்த நளினி கர்ப்பமா இருக்க நான்தான் காரணம்னு சொல்லப் போறீங்க. அப்படித்தானே?"

ஜனார்த்தனம் பிரபாகரின் இந்த பதிலை துளிகூட எதிர்பார்க்க வில்லை. திகைத்துப் போனார்.

"என்ன முழிக்கறீங்க. சார் நீங்க தடுக்கல பாஞ்சா நான் கோலத் துல பாய்வேன். என்னை யாருன்னு நினைச்சீங்க. நீங்க இப்ப என்ன டயம்னு கேட்கும்போதே நினைச்சேன்."

"என்ன தம்பி சொல்றீங்க?"

"அடப் போங்க சார். நீங்க ஏப்ரல் ஃபூல் ஆக்க நான்தான் கிடைச்சேனாக்கும்."

பட்டென்று போட்டு உடைத்தான். துளிகூட பதட்டமோ, படபடப்போ அவனிடம் இல்லை.

"என்ன பாக்கறீங்க, எப்படி உங்களையே மடக்கினேன் பார்த்தீங் களா? போய் யாராவது இளிச்சவாயனா பார்த்து உங்க ஏப்ரல் ஃபூல் விளையாட்டைக் காட்டுங்க."

பேச்சோடு பாக்கெட்டில் இருந்து ஒரு பாக்கு பொட்டலத்தை எடுத்துப்பிரித்து உள்ளங்கையில் கொட்டிக்கொண்டு அவருக்கும் கொஞ்சம் நீட்டினான்.

ஜனார்த்தனம் உண்மையிலேயே ஸ்தம்பித்துப் போயிருந்தார்.

"உம் எடுத்துக்குங்க."

"இருக்கட்டும். ஒருவேளை இது ஏப்ரல் ஃபூல் கிடையாது உண்மையான சம்பவம்னு நான் சொன்னா என்ன பண்ணுவீங்க?"

"அதெல்லாம் தமிழ் சினிமாவுலதான் சார் நடக்க முடியும். நான் நிஜமா அப்படி ஒரு தப்பு பண்ணியிருந்தாலும் அதை யாரும் நம்ப மாட்டாங்க. அந்த பொண்ணு ஏதோ பிளாக்மெயில் பண்றான்னு சொல்வாங்க."

"உங்கமேல எல்லோருக்கும் அவ்வளவு நம்பிக்கையா?"

"என்ன சார் நீங்க பேசறத பார்த்தா நிஜமாலுமே என்னை சந்தேகப்பட்ற மாதிரி தெரியுதே. சார் சத்யமா சொல்றேன் நான் சைட் அடிச்சது கூட கிடையாது. என் ஃபிரண்ட்ஸ்கிட்டே கேட்டுப் பாருங்க... சொல்வாங்க."

"மிகச்சாதாரணமாக எந்தவித உள் உதறலும் இன்றி பிரபாகர் பேசியதில் சத்தியம் மின்னியது. உண்மையில் குற்றவாளியாக இருந்தாலும் இந்த மாதிரி சமயங்களில் ஒன்று கோபத்தின் உச்சிக்குப் போய் கத்திக் கூப்பாடு போடுவார்கள். இல்லாவிட்டால் காலில் விழுந்து கெஞ்சத் தொடங்கிவிடுவார்கள். இப்படி நிச்சய மாக இயல்பாக இருக்கவே முடியாது.

"ரைட் மிஸ்டர் பிரபாகர், நீங்க ரொம்ப ஸ்போட்டிவ். சாரி ஃபார் தடிஸ்டபர்ன்ஸ்..." என்றார் ஜனா.

"நோ மென்ஷன் சரர். கல்யாண வீட்டுல இந்த அளவுகூட ஜாலியா இல்லேன்னா எப்படி?"

"அப்பா நான் வர்றேன். உங்க மாமனாரா வரப்போற கல்யாண கந்தரத்துக்கிட்ட நான் இப்படி ஒரு கலாட்டா பண்ணினதைச் சொல்லிடாதீங்க. அப்புறம். என்கிட்ட கத்துவான்" - பேச்சோடு படிகளில் இறங்கி காணாமலும் போனார். சிரிப்பாக வந்தது பிரபாக ருக்கும். அப்படியே கொட்டாவியும் வந்தது. போய் படுக்கலாம் என்று காலெடுத்தவன் எதிரில் ஒரு பொடிப் பையன். அவன் கையில் ஒரு கடிதம்.

"என்னடா என்ன வேணும்?"

"இந்த லெட்டரை ஒருத்தர் உங்ககிட்ட கொடுக்கச் சொன் னாங்க."

"லெட்டரா?" கை நீட்டி வாங்கினான்.



நடந்தபடியே பிரித்தான் ஒரு அறையின் ஜன்னல் வழியாக விழுந்த வெளிச்சத்தில் நிறுத்தி நெற்றியில் வரி விழப்படித்தான்.

"மாப்பிள்ளைக்கு?"

நீ திருமணம் செய்துகொள்ளவிருக்கும் மணப்பெண் மஞ்சுளா ஒரு கெட்டுப்போன பெண். ஒருமுறை அபார்ஷன்கூட ஆகியிருக் கிறது. அதை மூடி மறைத்துத்தான் உன் தலையில் அவளைக் கட்டப் போகிறார்கள், எச்சரிக்கை. - இப்படிக்கு உண்மை விளம்பி!"

-கடிதத்தை படித்த அடுத்த கணமே பிரபாகருக்குள் பி.பி. எகிறத் தொடங்கியது. எங்கே நாற்காலி என்று தேடிப்போய் விழுந்தான். கையில் காகிதம் படபடத்தது. எங்கோ போயிருந்த மாமா கோபால் சாமி அவன் உட்கார்ந்திருப்பதை பார்த்து அவனை நோக்கி வந்தார். அவர் வரவும் கடிதத்தை மளமளவென்று மறைத்தான். மிடறு விழுங்கினான்.

"ஏண்டா இன்னும் உக்கார்ந்துகிட்டிருக்கே. காலைல சீக்கிரமா எழுந்திருக்கணும். போய்ப்படு... போ..."

"இருக்கட்டும் மாமா.."

"என்ன இருக்கட்டும் மாமா... வா வா... உன் அத்தை அம்மா வெல்லாம்தான் சீர் புராணம் படிக்கணும். உனக்கென்ன? கிளம்பு... கிளம்பு..."

-மாமா அவனை துரிதப்படுத்தினார். ஒரு வினாடி கடிதம் பற்றி அவரிடம் பேசலாமா என்று தோன்றியது. மறுவினாடியே அது அழிந்தும் போனது.

அவனது ஆபீசில்கூட பல மொட்டைக் கடிதங்கள் வந்து குழப்பி யிருக்கின்றன. அப்போதெல்லாம் அவன் மேனேஜர் முதுகெலும் பில்லாத கோழைகள்தான் இப்படி கேவலமாக மொட்டைக் கடுதாசி போடுவாங்க. என்று கிழித்துப் போட்டது ஞாபகத்தில் வந்து அவனைக் கட்டுப்படுத்தியது.

ஒரு தேவதை மணமகளாக வரப்போகிறாள் என்று நினைத்து போதையில் இருந்த மனசில் இப்போது சலனம்.

கடவுளே... இது யாரோ செய்யும் தந்திரமா... இல்லை நிஜமா?

அவன் நெற்றியைத் தேய்த்தபடி அறை நோக்கி நடப்பதை வெகுதூரத்தில் இருந்து ஒருவன் மட்டும் கூர்ந்து பார்த்துக் கொண்டேயிருந்தான்.

# 5

கல்யாணச் சீர் பொருட்கள் ஒரு கண்காட்சி போல அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. காபி டம்ளரிலிருந்து பித்தளை டேக்ஸா வரை பிரீமியர்குக்கரிலிருந்து கும்முட்டி அடுப்பு வரை ஒரு விஷயம் பாக்கி இல்லை. பாத்திரக் கடையில் இருந்து ஒரு பாதி, துணிக்கடையில் இருந்து ஒரு பாதி. அதன்பின் ஸ்டேஷனரி என்கிற பெயரில் டூத் பிரஷ்ஷிலிருந்து பேஸ்ட் வரை எல்லாமே டசன் டசனாக வைத்திருந்தார்கள்.

பெரிய கட்டில் பீரோவிலிருந்து தையல் மெஷினைக்கூட வைத்து பெண் வீட்டார் ஜமாய்த்திருந்தனர். அத்தனை சாமான் களுக்கும் நடுவில் வெள்ளிப் பாத்திரங்களும், தங்க நகைகளும் தனியாக ஒரு ஃபோகஸ் லைட் வெளிச்சத்தில் மின்னிக் கொண் டிருந்தது.

அறை முகப்பில் ஒரு பெண்.... ஒல்லியாய் சுருட்டைத் தலை முடியை கஷ்டப்பட்டு வாரிக் கட்டிய நிலையில் உட்கார்ந்திருந் தாள்.

அனேகமாக அவள்தான் அந்த அறைக்கு காவலாக இருக்க வேண்டும். யாராவது வந்தால் திறந்து காட்டிவிட்டு பிறகு அறையை பூட்டி இடுப்பில் சாவிக்கொத்தை செருகிக் கொள்வது மாய் இருந்தாள்.



நள்ளிரவைத் தாண்டியும் சிலர் வந்து ஆற அமர வந்து நின்று பார்த்துவிட்டு போய்க்கொண்டிருந்தனர். அப்போதெல்லாம் கூடவே இருந்தாள்.

பார்க்க வந்தவர்களில் யாராவது எதையாவது தொட்டு எடுத்துப் பார்த்துவிட்டு திரும்ப வைக்கத் தெரியாமல் வைத்தால் அதை அவள் திரும்ப சரியாக வைத்துவிட்டு அவர்களைப் பார்த்து சிரித்தாள்.

ஒருவகையில் அலுப்பாக இருந்தது. தூக்கமும் கண்ணில் தெரிந்தது. பிரபாகரை தூர இருந்து வெறித்த மனிதன் இப்போது அவளருகே வந்தவனாக அவளைப் பார்த்து சிரித்துக்கொண்டே "தூக்கம் வருதா?" என்று கேட்டான்.

"கண்ணு சொக்குது."

"அப்ப போய் படுக்க வேண்டியதுதானே?"

"அப்புறம் யார் முதலாளிகிட்ட பேச்சு வாங்கறது...."

"அப்ப இப்படியே காவக்காத்துகிட்டு உக்காந்துகிட்டிரு" என்று சில அடி நடந்தவன் திரும்பி வந்து 'சாப்பிட்டுடியா?' என்று கரிசனமாக கேட்டான்.

"எங்க? வேலைக்கார சென்மம் தானே?" அவளிடம் அலுப்பு பொங்கி வழிந்தது.

"எல்லோரும் படுத்திட்டாங்க. நீ சாப்பிடாம கொள்ளாம உக்காந்துகிட்டிருக்க போறியாக்கும்?"

"உக்காந்துதானே ஆவணும். உள்ளே அஞ்சு லட்ச ரூவா சாமான்ல இருக்குது?"

"நான் வேணா பாத்துக்கறேன். நீ போய் ஒரு வாய் சாப்பிட்டு வர்றீயா?"

"இந்த நேரத்துல என்ன இருக்கப் போகுது?"

"இருக்கும். நாலு வாழைப்பழத்தையாவது பிச்சு போட்டுகிட்டு வா... போ..."

"அது சரி நீங்க யாரு?"

"நான் மாப்ள ஊட்டுக்காரன்."

"வேணாம் சாமி. மாப்ள வீட்டுக்காரங்களையே உக்காத்தி வெச்சுட்டு போயிட்டியான்னு முதலாளி அப்புறம் வைவாரு"

"உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு."

அவன் அதற்குமேல் அவளை நச்சரிக்காமல் நகர்ந்தான்.

கல்யாண மண்டபத்திற்குள் வெளியில் புல்வெளி!

சீரியல் லைட் அணைக்கப்படாமல் சிமிட்டிக்கொண்டிருக்க அங்கே நல்ல வெளிச்சம்.

அந்த வெளிச்சத்தில் விஸ்ராந்தியாக உட்கார்ந்திருந்தார் கல்யாண சுந்தரம் அருகில் ஜனார்த்தனம்.

'சரி கல்யாணம் போய்படு. அதான் மனசுக்கு இப்ப ஒரு தெம்பு வந்துடுச்சுல்ல' ஜனார்த்தனம் எல்லாவற்றையும் சொல்லிமுடித்து விட்டார் என்பது அந்த முடிவான பேச்சிலேயே தெரிந்தது.

இல்ல ஜனா... என் தங்கமான மாப்ளையை பத்தி எந்த நாய் இப்படி எழுதினதுன்னு தெரிஞ்சிகிட்டே ஆவணும் அப்பதான் எனக்கு தூக்கம் வரும்." என்றார் கல்யாண சுந்தரம்.

"இதோபார்... இந்த விஷயத்தை இப்போதைக்கு அப்படியே ஆறப்போடு. மொட்டைக் கடுதாசி எழுதின நபர். நீ என்ன பண்றேன்னு பாத்துக்கிட்டே இருப்பான். ஒரு லெட்டருக்கு இரண்டு லெட்டர் கொடுத்தவன் மூணாவதா என்ன செய்வான்னு பார்ப்போம். ஒருவேளை இந்த கல்யாணத்துல குழப்பம் வந்து கல்யாணம் நடக்கக் கூடாதுன்னுகூட அவன் திட்டம் போட்டிருக் கலாம். அந்த திட்டப்படி மட்டும் எதுவும் நடந்துடக் கூடாது. நீ



எப்பவும் போல ஜாம்ஜாம்னு காரியங்களைப் பண்ணு நானும் நோட்டம் விட்டுக்கிட்டே இருக்கேன்.

"இந்த விஷயத்தை நாம என் பொண்டாட்டி, மச்சினன் கிட்டேயும் சொல்லிட்டா என்ன?"

"எதுக்கு... அவங்க அப்புறம் என்னவோ ஏதோன்னு கிடந்து அலைமோதவா?"

"அப்படி இல்லய்யா... எவனோ ஒருத்தன் குட்டி கலாட்டா பண்ணப்பாக்கறான். அவனை நாம கோழிய அமுக்கிற மாதிரி அமுக்கணும்கறதுக்காகதான் சொல்றேன். நீ ஒருத்தன் எப்படி போதும்? ஒருத்தருக்கு நாலுபேர் சூதானமா இருந்து நோட்டம் போட்டாதானே அந்த நாயி அகப்படுவான்."

"வேண்டாம். யாருக்கும் தெரிய வேண்டாம். இந்த மாதிரி விஷயத்துல பொறுமையும் விவேகமும் ரொம்ப முக்கியம். உன் மச்சினன் ஒரு ஓட்டவாயன். அவன் பாட்டும் யார்கிட்டையாவது போய் உளறி வெச்சா அப்புறம் ரசாபாசம் ஆயிடும். மொட்டைக் கடுதாசி போட்டவனும் அதைத்தான் எதிர்பார்த்துகிட்டு இருப்பான்."

"நீ சொல்றதும் சரியாதான் இருக்கும்."

"நான் சொல்றதுதான் சரி. நீ போ... போய் நிம்மதியா படு. நான் பார்த்துக்கறேன்."

"என்னவோ ஜனா... நீ இருந்தே நான் தப்பிச்சேன். இல்லாட்டி டென்ஷன்ல நெஜமா நெஞ்சு வெடிச்சு செத்தே போயிருப்பேன்."

"சரி போய் படு. நிம்மதியா தூங்கு. அதை அந்த மிஸ்டர் மொட்டைக் கடுதாசியும் பாக்கட்டும். அப்பதான் அடுத்த ஸ்டெப்புக்கு அவன் போவான். நானும் கவனிச்சு பிடிக்க முடியும்."

"என்னவோ போ... ஒரே பொண்ணு! இந்த கல்யாணத்த ஒரு குறையில்லாம நடத்திட்டு திருப்பதிக்கு போய் ஒரு மொட்டை

போட்டுக்கலாம்னு இருந்தேன். சண்டாளப்படுபாவி. இப்படி என்னை சலனப்படுத்திட்டான்..."

"அடப் புலம்பாம போய் படுப்பா. சொன்னா கேக்க மாட்டேங்கறியே கிளம்பு." ஜனார்த்தனம் பிடித்து தள்ளி விட்டார்.

கல்யாணசுந்தரமும் வேட்டியை இறுக்கி கட்டிக்கொண்டே நடந்தார்.

அங்கங்கே சிலர் படுத்திருந்தனர்.

சமையல் பிளாக்கில் மட்டும் பளிச்சென்று விளக்குகள் எரிந்து கொண்டு இருக்க சில பெண்கள் காய்களை நறுக்கிக் குவித்தபடி இருந்தார்கள்.

கல்யாண சுந்தரம் மாடிப் படியில் ஏறி சீர்வரிசை அறையை தாண்டி அவர்களுக்கான அறை நோக்கி நடந்தார்.

சீர் வரிசை அறை வாசலில் அந்த சுருட்டை முடிப்பெண் லேசாக கண் அயர்ந்திருந்தாள்.

அவளைப் பார்த்தவர் திரும்பி வந்தார்.

"ஏய் திலகம்..." எழுப்பினார்.

"முதலாளி..." அவளும் விருட்டென்று கண் விழித்தாள்.

"இங்க இப்படி உக்காந்துகிட்டு தூங்கறதுக்கு உள்ளே போய் கதவை தாழ்போட்டுகிட்டு தூங்கலாம்ல?"

"சரிங்க...."

"போ... ஜாக்கிரதை...."

"சரிங்க முதலாளி...."

-அவள் எழுந்து அந்த சீர் வரிசை அறைக்குள் நுழைந்து கதவை தாழ் போட்டுக்கொண்ட பின், கல்யாணசுந்தரமும் தன் அறையைத் திறந்துகொண்டு உள்ளே செல்ல சீர்வரிசை அறைக்கு வெளியே



நிழலாட்டம் ஒரு உருவம் வந்து நின்றுவிட்டு பின் திரும்பியும் சென்றது.

அறைக்குள் ஒரே கொரட்டைக் கச்சேரி.

காலை நீட்டிப் படுக்கவும் தோதாக இடமில்லை. அவர் மனைவி பார்வதியும், மைத்துனி சீதாவும் கட்டிக்கொண்டு படுத்திருந்தனர். மைத்துனன் ராஜவேலு மல்லாந்து படுத்தபடி வாயில் ஊசிப் பட்டாசு வெடித்துக்கொண்டிருந்தான். மணப்பெண் மஞ்சுளாவும் ஒரு மூலையில் கிடந்தாள்.

"இதுக்குத்தான் வீட்டுக்குப்போய் நிம்மதியாய் படுக்கலாம்னு சொன்னேன். கேட்டாதானே?" என்றபடியே கிடைத்த இடத்திற்கு உடம்பை நுழைத்தார்.

ஃபேன் சர்ரக் சர்ரக் என்று சப்தத்தோடு சுற்றிக்கொண்டிருந்ததும் சரியான காற்றில்லை. புழுங்கியது. சொகுசாக ஏ.சி.யில் படுத்தே பழகிவிட்டவருக்கு எரிச்சலாக வந்தது.

வீட்டுக்கே போய் ஒரு தூக்கம் போட்டுவிட்டு வந்து விடலாம் என்று தோன்றியது.

அதுதான் சரி.... என்று திரும்பவும் அறையைவிட்டு வெளியில் வந்தார். படிகளில் இறங்கி நடந்தார்.

"என்னண்ணா தூக்கம் வரலியாக்கும்?"

- பக்கவாட்டில் படிக்கு கீழ் இருந்துதான் அந்தக் குரல் ஒலித்தது. யார் என்று பார்த்தார். சமையல்கார ராமசாமிதான் அது.

"ஆமாய்யா... வீட்டுக்கே போய்ட்டு வந்துடலாம்னு பார்க்கறேன்..."

"பத்தும் பத்தும் இருபது மைல் போய்ட்டு வரப்போறீங்களாக்கும். அட்ஜஸ் பண்ணிக்கிட்டு படுங்கண்ணா. ஒருநாள்தானே?"

"அதுசரி... நீ என்ன வந்து படுத்துட்டே. கால டிபனுக்கு எல்லாம் ரெடியா?"

"அதெல்லாம் டாண்ணு ரெடியாயிடும். நான் செத்தக் கட்டையை சாய்ப்பேன். நாலு மணிக்கு நம்ம பய வந்து எழுப்புவான். போனா சரியா இருக்கும்."

கதைக் கேட்டுக்கொண்டே திரும்பி நடந்தார். சமையல்கார ராமசாமிக்கு தன் பேச்சை கல்யாணசுந்தரம். கேட்டதில் ஒரு அல்ப சந்தோஷம்!

கல்யாணசுந்தரத்துக்கு ஜனார்த்தனத்துடன் படுத்தால் தேவலை என்று தோன்றியது. மேலே ஏறியவர் அதற்காக இடப்பக்கமாய் திரும்பி நடந்தபோது மாப்பிள்ளை பிரபாகரின் நண்பர்களை தங்க வைத்திருந்த ஏ.சி. அறை கண்களில் பட உள்ளேயும் ஒரே சப்தம்.

இன்னுமா இவர்கள் தூங்கவில்லை?

ஜன்னல் வழியாக திருட்டுப் பார்வை பார்த்தான்.

உள்ளே பிரபாகர் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவனைச் சுற்றி சுந்தர், பாஸ்கர், விஸ்வநாதன் என்கிற நட்பு வட்டம்! சுந்தர் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான்.

"மாப்ள பிரபாகர் ஒரு தம் இழேன்." தனது எச்சில் சிகரெட்டை அவன் நீட்ட "த்தூ... தூரப் போட்றா அந்த சனியன... திருந்தவே மாட்டியா நீ..." என்று பிரபாகரும் திருப்பிக் கேட்க அந்த காட்சி கல்யாணசுந்தரத்துக்குள் பாலை வார்த்தது.

ரகசியமாக பார்த்தது தெரியாமல் நழுவினார்.

மனதுக்குள் சமையல்கார ராமசாமிக்கு நன்றியைச் சொல்லிக் கொண்டார்.

அந்த ஆள் மட்டும் "போய்ப்படுங்க" என்று திருப்பி அனுப்பாமல் இருந்திருந்தால் இந்த கண் கொள்ளாக் காட்சியை பார்த்திருக்க முடியுமா?



மாப்பிள்ளை சொக்கத் தங்கம்தான். சந்தேகமேயில்லை. மொட்டைக் கடிதம் எழுதினவன்தான் பாழாய்ப்போனவன்! தீர்மானங்களோடும் லேசான மனதோடும் போய் ஜனார்த்தனத்துக்கு ஒதுக்கியிருக்கும் அறைக்குள் நுழைந்தார்.

# 6

**ம**ணி ரெண்டு!

சுந்தரும், பாஸ்கரும் தண்ணிவேறு கவுத்திருந்ததால் தாக்குப் பிடிக்க முடியாமல் சுருண்டு படுத்திருந்தனர்.

ஏதேதோ, பேச்சுக்கள்... கல்யாண நாள் என்றாலே இப்படித் தான்...

இருந்தும் விஸ்வநாதனுக்கும் தூக்கம் வந்தது.

"சரி படுக்கலாமா?" பிரபாகரைப் பார்த்து கேட்டான்.

"ஒரு நிமிஷம்"

"என்னடா...."

"இந்த இரண்டு குரங்குப் பசங்களும் தூங்கிட்டாங்களா பார்..."

"இரண்டுபேரும் இப்ப கனவுல டுயட்கூட பாடிகிட்டு இருப்பாங்க."

"நல்லது. இதுக்குத்தான் காத்திருக்கேன். விச்சு உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

"அப்ப இவ்வளவு நேரம் பேசிக்கிட்டிருந்ததெல்லாம் என்னடா?"

"இல்லடா இது சீரியஸான விஷயம்?"

"சரி சொல்லு. மணி இப்பவே இரண்டாயிடுச்சு பார்."

"எவ்வளவு ஆனா என்ன... எனக்குத் தூக்கம் வரப்போற தில்லை."

"என்னடா ஒருமாதிரி பேசறே....?"

"இந்த லெட்டரைப் பார்...."

- பிரபாகர் நிதானமாக கடிதத்தை எடுத்து விஸ்வநாதன் எதிரில் நீட்டினான். அதைப்படித்த அவன் முகத்திலும் அதிர்வின் பரவல்.

"என்ன நினைக்கறே?"

"யார்.... யார்டா இதை எழுதினது?"

"என்னடா இது அபத்தமான கேள்வி. தெரிஞ்சா நான் உன்கிட்டையா பேசிக்கிட்டிருப்பேன்..."

"இல்ல... இது எப்படி உனக்கு வந்தது. இது விஷயம் உன் அப்பா அம்மாவுக்கு தெரியுமா?"

"யாருக்கும் தெரியாது இப்பத்தான் உன்கிட்ட மட்டும் காட்டியிருக்கேன்."

"சரி யார் கொடுத்தா?"

"நம்ம ஆபீஸா இருந்தா தபால்ல வரும். இங்க ஒரு பொடிப்பய கொண்டு வந்து கொடுத்தான்."

"அவன்கிட்ட ஆள் யார்னு கேட்டியா."

"அப்புறம் அவன் கண்ணுலப்பட்டா தானே..."

"சரி இப்ப என்ன பண்ணப்போறே..."

"தெரியல விச்சு. இதை குப்பையா நினைச்சு ஒத்துக்கறதா இல்லை. சீரியஸா எடுத்துக்கறதான்னே தெரியலை. நீயா இருந்தா என்ன செய்வே?"



"சங்கடமான கேள்விதான். புத்திப் பூர்வமா பார்த்தா இதை குப்பையா தூக்கி எரியறதுதான் சரி. ஆனா உணர்வு அதனால சமாதானமாகாதுன்னு எனக்குத் தெரியும்."

"இது உண்மையா இருக்கும்னு நம்பறியா?"

"இல்ல பிரபா... எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. ஆனா ஒரு விஷயத்துக்காக உன்னை பாராட்றேண்டா. நீ அமைதியா வெளிக்காட்டிக்காம இருக்கே பார்... கிரேட்."

"பாராட்ட விடு. இதுக்கு என்ன பண்ணலாம்?"

"என்ன பண்ணலாம்னா... எனக்கு சொல்லத் தெரியலடா."

"என்னால சமாதானமாவே போக முடியலடா... எப்படிப் பார்த்தாலும் இதை எழுதினவன் ஒரு அயோக்கியன்."

"எப்படி?"

"இது உண்மையா இருந்தா அதை நேர்ல வந்து சொல்லத் தெரியாத கோழை அவன். பொய்யா இருந்தா சந்தோஷமான ஒரு தருணத்துல மனசுல நெருப்ப அள்ளிப் போட்ட பாவி அவன்..."

"ரொம்ப உணர்ச்சி வசப்படாதே. நூத்துக்கு தொண்ணூத்தி ஒன்பது மொட்டைக் கடிதங்கள். பொய்யானதுதான்."

"ஒரு பர்சன்ட் பக்கம்தான் உன் மனசு சாயுதா?"

"விச்சு... இப்படி எல்லாம் என்னைக் கேட்டு சங்கடப்படுத்தாதே. என் சந்தோஷம் இப்ப உன் கைலதான் இருக்கு."

"என்னை என்ன பண்ணச் சொல்றே?"

"அந்த ஒரு பர்சன்ட்டும் பொய்யின்னு நீதான் நிரூபிக்கணும்."

"எப்படிடா....?"

"மஞ்சுளாவை நீ பார்த்தியா?"

"பார்த்தேன். அதுக்கென்ன இப்போ?"

"அவ தப்பு செய்திருப்பான்னு நீ நினைக்கறியா?"

"நான் ரிஷி இல்ல பிரபா... என்னால ஒருத்தரைப் பார்த்த மாத்திரத்துலல்லாம் எடைபோட முடியாது."

"யாராலையும் பெண்களை எடைபோட முடியாதுன்னு சொல்வாங்க."

"இதோ பார் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசு. இப்ப நான் என்ன பண்ணணும்?"

"தெரிஞ்சோ தெரியாமலோ ஒரு சலனம் ஏற்பட்டிருச்சு. அதை சாமர்த்தியமா சமாளிக்கணும். மஞ்சு 'பத்தி நீ விசாரிக்க முடியுமா?"

"அப்ப... விசாரிச்சு உண்மையை கண்டுபிடிக்கச் சொல்றியா?"

"ஆமா..."

"மணி இப்ப இரண்டரை. விடிஞ்சா பந்தல்ல உக்காரப் போறே நீ. எப்படிடா... எப்படி நான் விசாரிச்சு..."

"கொஞ்சம் புத்திசாலித்தனமா யோசிடா. ஏதாவது வழி கிடைக்கும்?"

"நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டியே..."

"என்ன?"

"இந்த கடிதம் உண்மையாவே இருந்துட்டு போகட்டும். மஞ்சுவை நீ மன்னிச்சு ஏத்துக்கறதா நினைச்சுக்கோயேன்."

"நானும் உனக்கு ஒரு விஷயம் சொல்லவா?"

"என்ன?"



"அவ கற்புக்கரசியா இல்லை கச்சடாவாங்கறது ஒண்ணும் எனக்கு முக்கியமில்ல. அவ எப்படிப்பட்டவளா இருந்தாலும் தாலிகட்ட நான் ரெடி. ஆனா உண்மை மட்டும் தெரிஞ்சா போதும்."

"ஆமா, ஏன் ஒரே கோணத்துல பாக்கறே. யாராவது பொறாமைப்பிடிச்சவங்க இந்த கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு கூட இப்படி எழுதியிருக்கலாம் இல்லையா?"

"அப்ப அதுதான் உண்மைன்னு தெரிஞ்சா கூட போதுமே..."

"எப்படிடா... எப்படி இதை கண்டுபிடிக்க முடியும்? அதுவும் இந்த அர்த்த ராத்திரியில... லுக் பிரபா... இந்த கடிதம் உனக்கு எப்ப கிடைச்சது?"

"பதினோறு மணி இருக்கும்."

"அப்ப நிச்சயமா பொறாமை பிடிச்ச எவனோதான் எழுதியிருக்கான்"

"எதை வெச்சு அப்படி சொல்றே?"

"பின்ன என்னடா.... உண்மையில உனக்கு உதவி செய்யணும்னு நினைக்கிறவன் முன்னாலேயே உனக்கு சொல்லியிருக்கலாமே. பத்திரிகை அடிச்சு எல்லோருக்கும் கொடுத்து கல்யாணம் நடக்கற இந்த ராத்திரியிலையா கொடுப்பான்."

"சரி... இதை எழுதினவனுக்கு உண்மையில நல்ல எண்ணம் கிடையாதுன்னு க்ளியரா தெரியுது. ஆமா இதை எந்த தைரியத்துல இப்ப கொடுத்திருப்பான்?"

"அதான் சொல்றேனே.... இது பொறாமை... பொறாமையால உன்னை புழுங்கவைக்கத்தான் இப்படிச் செய்திருப்பான். கொஞ்சம் இரு. யாரெல்லாம் இப்படி செய்வாங்கன்னு பட்டியல் போடுவோம் கொஞ்சம்."

-விஸ்வநாதன் விரல் விட, பிரபாகர் அதை கூர்ந்து கவனிக்க...

"மஞ்சுவை முதல் முதலாக பார்த்துவிட்டு இவ்வளவு அழகான பொண்ணுக்கு இவன் போய்ய மாப்ளையான்னு நினைக்கிறவன்... நீ கள் குடிச்ச குரங்கு மாதிரி மிதப்பா இருக்கறதப் பார்த்துட்டு மவனே உன்னை என்ன பண்றேன் பாருன்னு நினைக்கறவன், இல்லாட்டி இங்க கல்யாண வீட்டுக்கு வந்து, வந்த இடத்துல அவமானப்பட்டு இல்ல சரியா மதிக்கப்படாத யாரோதான்... இதை செய்திருக்கணும் ஆம் ஐ கரெக்ட்...?"

"ரைட்.... ஒத்துக்கறேன். இப்படி ஒரு நல்ல நாள்ல சேடிஸ்டா நடந்துகிட்ட அந்த நாயை நாம சும்மா விடலாமா?"

"யார்னு தெரியாம என்ன பண்ண முடியும்?"

"தெரியலேன்னா பரவால்ல. நான் ஒரு ஐடியா கொடுக்கவா?"

"கமான் சொல்லு...."

"இந்த மொட்டைக் கடுதாசி விஷயத்தை இன்னதுன்னு சொல்லாம ஜெனரலா போட்டு உடைச்சிட்டா...."

"எப்படி.... எப்படி?"

"ஒரு மொட்டைக் கடிதம் எனக்கு வந்தது. ஆனா நான் அதை சேர் பண்ணத்தயாரா இல்லை. அதை எழுதின மாவீரனை எச்சரிக்கிறேன். நல்ல காரியம் நடக்கற இடத்துல இனிமே இப்படி ஈனத்தனமா நடந்துக்காதீங்க. தைரியம் இருந்தா நேர்ல வாங்கன்னு பப்ளிக்கா போட்டு உடைச்சா...."

"நோ.... சிம்பிளா இதை இக்னோர் பண்ணு. அதுதான் உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் நல்லது. கல்யாணம் முடியட்டும். தானாகவே அந்த நபர் நொந்து நூலாயிடுவான்."

"குறைந்தபட்சம் இந்த கடிதம் பத்தி பொண்ணோட அப்பா அம்மாகிட்டையாவது பேசினா..."

"எதுக்குடா... அவங்களையும் டென்ஷன்ல போட்டு தாளிச்சு எடுக்கவா..." இப்பதான் பிரபா நீ ரொம்ப ஹானஸ்ட்டா நடந்து



கண்ணும். கல்யாணம் நடந்து முடிஞ்ச பிறகு உன் மனைவியா வரப் போறவகிட்ட இந்த லெட்டர் விஷயத்தைச் சொல்லிப்பார். அந்த நிமிஷம் லெட்டரை நம்பாம தாலி கட்டின உன்னை தெய்வமா பார்ப்பா...."

"அப்ப அப்படியே சைலண்ட்டா இருந்துடுங்கறே."

"நிச்சயமா... எதிரி ஜெயிக்க இடம் கொடுக்காதே. இதுக்காக நீ இவ்வளவு பேசி கவலைப்பட்டதே தப்பு. அவன் இந்த நிமிஷம் உன்னை வருத்தப்பட வெச்சு ஜெயிச்சுக்கிட்டிருக்கான்."

"சரி போ... போய்ப்படு. திரும்பவும் லெட்டர் நினைப்புல குரங்குத்தனமா யோசிக்காதே."

"நெவர்.... நெவர் உனக்கு நான் ஒண்ணு சொல்லிக்கறேன். எனக்கு வரப்போறவ சீதையா இருக்கணும், ராதையா இருக்கணும் னுல்லாம் நான் நினைக்கல. உடம்பால கெட்டுப்போறதுகூட ஒரு விஷயம் இல்லை. மனசாலதான் கெட்டுப் போயிருக்கக் கூடாது. அந்த பயம்தான். வேற ஒண்ணும் இல்ல."

"அலட்டிக்காதடா. நல்லவன் நீ. உனக்கு நல்லதுதான் நடக்கும். போடா போய்ப்படு. மறந்துகூட நீ லெட்டர் பத்தி பேசக்கூடாது. ஆமா!"

"ஓ.கே.டா... பை!"

"பை.... சிரிச்சுக்கிட்டே போடா..."

- ஒரு நீண்ட விவாதத்தின் முடிவாக பிரபாகரும் சிரித்தபடி வெளியே வர நடந்து வரும் வழியில் காரிடாரில் படுத்திருந்த பலரில் அந்த ஒருவன் மட்டும் மெல்ல நிமிர்ந்து பார்த்தான்.

பிரபாகரனின் புன்னகை அவனுக்குள் பிரச்சினையை பறக்க விட்டது! முகத்திலும் புதியதாக ஏதோ தீர்மானம்!

35848
5329462

# 7

மணி ஐந்தாகும் போதே கல்யாணம் மண்டபத்தில் பரபரப்பும் ஆரம்பமாகிவிட்டது. வரிசையாக உள்ள டாய்லெட்களுக்கு வெளியே பலர் காத்திருக்க, பாத்ரூம் முகப்பிலும், கைகழுவும் இடத்திலும் டூத் பிரஷ்களை வாயில் விட்டு உழற்றிக் கொண்டிருந்தனர் சிலர்.

இதில் முந்திக்கொண்டே ஒருவர் பாத்ரூமில் கிடைத்த அளவில் தண்ணீரை மொண்டு தலையில் கொட்டிக்கொண்டு குளித்து விட்டேனே என்கிற மாதிரியில் துவட்டலுடன் வெளியே வந்தார்.

கால்கள் நேராக சமையல் கட்டு முகப்புக்குத்தான் போய் நின்றன.

பாய்லர் அடுப்புக்குள் இட்லி அடுக்குகள் ஏறிக் கொண்டிருந்தன.

"என்ன இன்னும் காபி ரெடி ஆகலையா?"

"இதோ..... இரண்டு நிமிஷம்."

"சீக்கிரம் சீக்கிரம்..." பரபரத்த அவருக்கு மட்டும் தனியாக ஒரு டம்ளரில் காபியை நிரப்பி நீட்ட அவரும் மனிதன் பிறப்பெடுத்தே இப்படிக் காபி சாப்பிடத்தான் என்கிற மாதிரி அதை ஒரு ஓரமாய் நின்று சூப்ப....

"உம் ஆகட்டும்.. ஆகட்டும்.." என்கிற குரலோடு 'வித்யா அந்தத் துண்டை கொண்டுவாடி கண்ணு...'

'வாட்சு பத்திரம்...'

'டேய் இன்னுமா தூக்கம். எழுந்திரிடா..'

"ஆங்.... நான் அந்த கவுனத்தான் போட்டுப்பேன்..."



-என்று விதம் விதமான டயலாக்குகள் காதில் விழ நாதஸ்வரக் காரரும் தன் பங்குக்கு 'பீ... பீ' என்று சீவாளியை வாயில் வைத்து ஊதி 'டும்... டும்...' என்று தயாராகிவிட்டார்.

பிறகென்ன...?

கலகலப்பின் தோற்றமும், காபி பக்கெட் நடமாட்டமும், 'அக்கா ஒரு ஹேர்பின் கிடைக்குமா?' 'இந்த பிளவுஸ் சூப்பரா இருக்குதே...' என்கிற வேண்டல்கள். விமோச்சனங்கள் என்று கல்யாண வீட்டில் கலகலப்புக்கு ஒரு பழுதும் இல்லை.

சீர் வரிசை அறை முன் கல்யாண சுந்தரத்தின் மனைவி பார்வதி நின்றுகொண்டு தட்டிக்கொண்டிருந்தாள். கதவும் திறந்தது. அலி பாபா குகைபோல வாயைப் பிளந்தபடி திலகம் என்கிற வேலைக் காரப் பெண்...

"ஏண்டி... உன்னை யாருடி உள்ள படுக்கச் சொன்னது?"

"அய்யாதாம்மா...."

"எப்படீ சொன்னாரு... பொய் சொல்லாதே. நான் உன்னை எங்கல்லாம் தேட்றேன் தெரியுமா?"

"என்னம்மா விசயம்?"

"போய் ஒரு கப்புல காபி வாங்கிட்டு அப்படியே நாங்க இருக்கற ரூம்ல ஒரு கறுப்பு பை இருக்கும். அதுல சைட் ஜிப்பை திறந்தா மாத்திரை இருக்கும். எடுத்துக்கிட்டு வா... ஐய்யோ இப்பவே படபடன்னு வருதே... என்ன பண்ணுவேன்"

பார்வதி கையை உதறிக்கொண்டே சீர்வரிசையை ஒரு பார்வையும் பார்த்தாள்.

"பார்வதி... பிரமாதமா டிஸ்ப்ளே பண்ணிருக்கே. நிச்சயம் கண்ணு உழுவப்போகுது. சுத்திப் போடுடி."

-யாரோ ஒரு வாட்டி பேச்சோடு பேச்சாக பேசிக்கொண்டே போனது. கொஞ்சம் பெருமிதமாய் இருந்தாலும் பயமாகவும் இருந்த அந்த உணர்வு மாறியது.

"இப்படி எல்லாரும் கண்ணு வெச்சா அப்புறம் எதுவும் உருப் படாதே. அதுலையும் இந்தக் கிழவி கண்ணு கொள்ளிக் கண்ணு ஆச்சே?"

புலம்பிக்கொண்டே பார்வதி பெருமை பொங்க சீர்வரிசைகளை திரும்பத் திரும்பப் பார்த்தாள். பட்டுத் தலையணை மேல் ஒரு கரப்பான் பூச்சி வந்து உட்கார்ந்திருந்தது.

"அடச் சனியனே ஸ்ஆ... ஸ்ஆ?" விரட்டினாள். அந்த முயற்சியில் காலடியில் இருந்த சீர் பலகாரத்தட்டில் இருந்த லட்டுகள் பிரண்டு விழுந்து பந்துகணக்காய் குடுகுடுவென்று ஓடின.

"ஏ பார்வதி எங்க இருக்க நீ...? "கேள்வியோடு கல்யாண சுந்தரமும் வந்து நின்றார். இடுப்பில் வேட்டி கையில் சோப்பு டப்பா மார்பில் அரைக்கை பனியன்.

"என்ன இது... இன்னும் குளிக்கலையா நீங்க?"

"எங்கடி... பாத்ரூம் ஃபுல்லா இருக்குது."

"நம்ம ரூம்லையே ஒண்ணு இருக்குதே அங்க குளிக்க வேண்டியதுதானே?"

"அதுல தண்ணீர் வராதாம்லே. ஆமா நீ குளிச்சுட்டியா?"

"எல்லாம் ஆச்சு. நீங்க போய் குளிச்சிட்டு வாங்க. அந்த பெரிய பார்டர் பட்டு வேட்டியை இப்ப கட்டாதீங்க. சாயந்திரமா ரிசப்பஷனுக்கு வேணும்?"

"அதுதான்... எந்த பெட்டியல வைச்சிருக்கே?"

"கொண்டுகிட்டு வந்தது ஒரு பெட்டிதானே... எந்த பெட்டிய லைன்னா... நல்லா தேடுங்க...."



-அவள் துரத்த அவரும் விலக காபி தம்ளருடன் ஒரு கை அவர்முன் நீண்டது.

"வந்துட்டியா...." கேட்டபடி நிமிர்ந்தவளுக்கு ஆச்சரியம். இவள் வேறு யாரோ ஒரு புதிய பெண்.

"யாரும்மா நீ?"

"சமையல் உதவிக்கு வந்தவங்க. நீங்க காபி கேட்டீங்களாமே?"

"அதுசரி. எங்க அந்த திலகம்? அவகிட்டல்ல கேட்டிருந்தேன்."

"தெரியலீங்க... இத சமையல்கார அய்யாதான் கொடுத்து உட்டாரு."

"அப்படி வை. மாத்திரை வரட்டும். இவ எங்க போய்ட்டா. ஒண்ணும் சரியில்லை"

பார்வதி புலம்ப அந்தப் பெண் நின்று சீர் பொருட்களை ஒரு பார்வை பார்த்தாள். குறிப்பாய் அவ்வளவிற்கும் நடுவில் இருக்கும் சிகப்புக்கல் நெக்லஸ் வெளிச்சத்தை பீறிட்டுக்கொண்டிருந்தது.

"அங்க என்ன பார்வை, அதான் காபி கொடுத்துட்டேல்ல போ... போ..."

-பார்வதி கச்சிதமாக கத்தரி போட வெளியில் வந்தாள். நிமிர்ந் தாள் சில அடி தூரத்தில் சாரைப்பாம்பு சரிவாக பார்ப்பது போல் கூர்மையான பார்வையுடன் ஒருவன்.

அவள் அவனைப் பார்த்த நொடி மார்புக்கு மேலே கையைத் தூக்கி கட்டைவிரலை மட்டும் உயர்த்தி ஒருவிதமாய் சிக்னல். அவனும் மிகமிக நிதானமாக ஒரு சின்ன தலையாட்டல் புரிந்தான்.

நடுநடுவே பலரின் குறுக்கீடுகள்.

இதில் திலகம் வேறு காபி தம்ளருடன் வரவும் கொஞ்சம் கருக்கென்றது அவளுக்கு. சுதாரிக்கத் தொடங்கினாள் திலகத்தை வேகமாய் நெருங்கியவள் "காபி யாரு அம்மாவுக்குத்தானே?"

"ஆமாம்..."

"நான் கொடுத்திட்டேன். ஆமா மாத்திரை கேட்டாங்களே கொண்டு வந்தியா?"

"இதோ...."

"அதைக் கொடுத்திட்டு போய் அவங்களோடு ஹேண்ட் பேக்கை எடுத்துகிட்டு வருவியாம்."

"நீங்க யார்? அம்மா சொன்னாங்களா?"

"சொல்லாம சொல்வேனா... உம் சீக்கிரம்."

"திலகம் உடனே திரும்பினாள். அந்தப் பெண் கையில் மாத்திரை. அதை உற்றுப் பார்த்துக்கொண்டே அந்த சாரைப் பார்வைக்காரனை நெருங்கினாள்.

"என்னாச்சு...?"

"என்னய்யா கேள்வி. அந்த பொம்பள அசர மாட்டேங்கறா...."

"நேரமாகிகிட்டே இருக்குது பாரு. டூப்ளிக்கேட்ட வெச்சுட்டு ஒரிஜினலை எடுக்க இவ்வளவு நேரமா?"

"உனக்கென்ன மாட்டுனா மூணு வருஷம்ல... ஏற்கனவே எம்பேர்ல நாலு கேஸ் நடந்துகிட்டிருக்கு."

"அரைக்காதே... முகூர்த்தம் முடியறதுக்குள்ள காரியம் முடியணும்."

"எங்க கல்யாண ஊடே ஒரே ரகளைக்கு மாறிடும். எங்கப்பாரு வம்பு பேச்சா இருக்கும். நாம சுலபமாக காரியத்தை முடிச்சிடலாம்னே. இங்க என்னடான்னா இப்பத்தான் எல்லாரும் படு கிரிப்பா இருக்காங்க. ஆமா உன் தந்திரம் ஒண்ணும் வேலை செய்யல மாதிரி தெரியுதே"



"இதுவரை செய்யல. ஆனா இப்ப போடப்போற குண்டு பிரமாதமா வெடிக்கும். அப்புறம் பாரு. ஆளுக்கு ஆள் பரபரப்பா அதே பேச்சாதான் இருக்கும். அப்ப நீ உருப்படியை சுருட்டிடு."

"ஆமா... அந்த நெக்லசு எவ்வளவுய்யா இருக்கும்?"

"உனக்குத் தேவையில்லாத கேள்வி அது. சரி சரி நழுவு. நாம பேசறத ஒரு ஆள் உன்னிப்பா பார்த்தாலும் ஆபத்து" அவன் நழுவ, அவளும் வேறுபக்கம் நழுவ திலகம் ஹேண்ட் பேக்குடன் வந்து அந்த சீர்வரிசை அறைக்குள் நுழைந்தாள்.

"இந்தாங்கம்மா பேக்"

"இது எதுக்குடி...."

"நீங்கதான் கேட்டீங்கன்னு...."

"நான் கேட்டேனா. உன்கிட்ட மாத்திரை கேட்டேனா? இல்ல இந்த கண்றாவியை கேட்டேனாடி."

"கொடுத்தேனேம்மா...."

"எங்க யார்கிட்ட ஏதாவது கனவு கண்டியா?"

"இல்லம்மா... ஒரு அம்மாதான் நான் காபியோட வந்தப்போ வழி மறிச்சு நீங்க ஹேண்ட் பேக் கேட்டதா திருப்பி அனுப்பினாங்க. மாத்திரையையும் வாங்கிக்கிட்டாங்க...."

"அடக்கடவுளே.... யாருடி அவ? எங்க அவளைப் போய் முதல்ல கூட்டிக்கிட்டு வா... பாப்போம்..." திலகமும் உடனே திரும்ப....

"இருடி... இருடி... ஏண்டி யாராவது ஏதாவது சொன்னா யோசிக்க மாட்டியா. உன்னை நம்பி தாண்டி இந்த சீர் சாமானை ஒப்படைச்சிருக்கேன். நீ இப்படி இருந்தா எப்படிடி...?"

"நான் கவனமாதாம்மா பாத்துக்கிட்டிருக்கேன். நீங்க வேணா பாருங்கம்மா யாராவது எதையாவது எடுத்துட்டு சரியா வைக்காம போனாலும் நான் அதை சரியா வைக்கறேன்."

"போதுண்டி எதுத்து பேசாதே. இனி உன்னை இங்க உக்காத்தி வைக்கறது ஆபத்து. இங்க எது காணாம போனாலும் வாங்கிடலாம். ஆனால் அந்த சிகப்பு கல் நெக்லஸ் இருக்கே அத மட்டும் எந்தக் கடையிலையும் வாங்க முடியாது. தெரிஞ்சுக்க."

"அதைத் தாம்மா எல்லாரும் பார்த்துட்டு வாயைப் பொளக் கறாங்க..."

"பொளக்காம....? இன்னிக்கெல்லாம் அது இருபது லட்சம்டி ராணி மங்கம்மாள் காலத்து நகை. அவங்க போட்டு. அப்புறம் எங்க பரம்பரை, கொள்ளு எள்ளு பாட்டன் பாட்டிகள் போட்டு கைமாறி கைமாறி இப்ப என் மக போட்டுகிட்டு போகப்போறா."

-பார்வதி இப்படி பல தடவை சொல்லி விட்டாள். சராசரியாக ஒரு நாளைக்கு பத்து பதினைந்து தடவை சொல்லி மகிழும் ஒரே விஷயம் இதுதான். திலகத்துக்கும் காது புளித்தாலும் முகத்தில் காட்டக்கூடாதே. வேலைக்காரியாயிற்றே?

"சரிசரி.... நீ போய் நம்ம மனோகர் எங்க இருந்தாலும் அவனை இங்க கூட்டிக்கிட்டு வா..."

-பார்வதி விரட்ட திலகம் ஓடினாள்.

"அம்மா...." மணப்பெண் மஞ்சுவே அறை வாசலுக்கு வந்து கூப்பிட்டபடி நின்றாள்.

குளித்து முடித்துவிட்டாள் என்பது தலையில் சுற்றிய டவலில் தெரிந்தது. நெற்றியும் பளிச்சென்று காலியாக இருந்தது.

"என்ன கண்ணு குளிச்சிட்டியா... போ சீக்கிரமா ரெடியாகு. அலங்காரத்துக்கு உக்காந்தா ஒரு மணி நேரம் ஓடிப்போயிடும்டா..."

"அதுக்குத்தான் உன்னை கூப்பிட்டேன். கொஞ்சம் வா."



"நீ போ... நான் மனோகர் வந்த உடனே வர்றேன். இங்க நம்ம சீர் வரிசையை பார்த்து வாய் பிளக்காதவங்க இல்லை..."

"சரிசரி சீக்கிரம் வா..." - மஞ்சு அங்கிருந்து விலகி அறை நோக்கி நடந்தாள்.

அப்படியே பார்வையை சுழலவிட மேலே பிரபாகர் நின்று பேசிக்கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்த நொடி ஒரு பரவசம். ஆனால் அவன் பேசிக் கொண்டிருந்தது சசிகலாவிடம். அவள் மார்புச் சேலை நழுவு வதைப் பற்றிக்கூட கவலையே இல்லாமல் ஏதோ ஒரு ஜோக்கிற்காக சிரித்துக்கொண்டிருந்தாள்.

மஞ்சுளாவிற்கு அதுமட்டும் கொஞ்சம் உறுத்தியது. அதன் எதிரொலிகள் முகத்திலும் தெரியும்போது அவள் எதிரில் ஒரு பொடியன். அவன் கையில் ஒரு கடிதம். பார்வையோ வாங்கிக் கொள் என்றது.

"என்ன இது?"

"ஒரு அண்ணன் கொடுத்தாரு."

"யார்?" - கேட்டபடி கடிதத்தை அவள் வாங்க அவன் பதில் சொல்லாமல் திரும்பி ஓடினான்.

"டேய்... டேய்..." - மஞ்சுவின் குரலை நாதஸ்வர இன்னிசை அமுக்கியது. மேளக்காரர் வேறு தனியாக ஆவர்த்தனத்தில் நுழைந்திருந்தார்.

மஞ்சு கடிதத்தை திருப்பிப் திருப்பிப் பார்த்தாள்.

"யாராக இருக்கும்? பிரபாகர்தான் ஏதாவது செய்தி அனுப்பி யிருப்பானோ?"

அறைக்குள் நுழைந்தவள் ஆள் உயர கண்ணாடி முன் மேக்கப் டேபிள் அருகே போய் அமர்ந்து கடிதத்தை பிரித்தாள். அறையில் யாருமில்லை. கடிதத்தை பிரித்தவள் ஆவலாகத்தான் பார்த்தாள்.

"கல்யாணப் பெண்ணுக்கு!"

மனசு கேட்காமல் கடைசி நிமிடத்தில் எழுதும் கடிதம் இது. நீ திருமணம் செய்து கொள்ளப் போகும் பிரபாகருக்கும் அவன் ஆபீசில் வேலை பார்க்கும் பெண்ணுக்கும் கள்ள உறவிருக்கிறது. நீ சின்ன வீடுதான். எச்சரிக்கை. இப்படிக்கு உண்மைவிளம்பி."

- கடிதம் அடுத்து ஒரு கல்யாணப் பெண்ணுக்குள் என்னென்ன பூகம்பத்தை உருவாக்குமோ அதை எல்லாம் உருவாக்கியது. மேக்கப் நாற்காலியில் பொத்தென்று விழுந்தவள் பொலபொல வென்று அழ ஆரம்பித்தாள். உள்ளே நுழைந்துகொண்டிருந்த பார்வதி பார்த்துவிட்டு என்னடி.... என்னாச்சு?" என்று கேட்டு அருகில் வந்து மண்டியிட்டு அமர "அம்மா...." என்று கட்டிக் கொண்டாள்.

"என்னாச்சு?"

-கடிதத்தை நீட்டினாள். வாசித்த பார்வதிக்குள்ளும் அலை அடித்து புயல் வீசி நெஞ்சை வலித்தது.

"ஐய்யய்யோ என்னடி இது... யாருடி கொடுத்தா.... எப்பா கொடுத்தாங்க...?"

"இப்பதாம்மா... ஒரு சின்னப் பையன் வந்து கொடுத்தான்மா...."

"ஐய்யோ நான் இப்ப என்ன பண்ணுவேன். பாத்துப் பாத்து கல்யாணம் பண்றதா நினைச்சிட்டிருந்தேனே. அதுல இப்படி இடி விழுந்துடிச்சே..."

-பார்வதியின் புலம்பல் அறைக்கு வெளியேயும் கேட்டது. அது அவளது நாத்தியையும் அவள் மகளையும் இழுத்து வந்தது.

"அண்ணி... என்ன இங்க கலாட்டா..."



"கலாட்டாவா... என் தலைல இடி விழுந்திடிச்சுடி... எங்கடி உங்க அண்ணன்?"

"ஐய்யோ கூப்புட்றீ முதல் அவரை..."

"அம்மா பதட்டப்படாதேம்மா. இப்ப என்ன ஆயிடிச்சு. உனக்கு பி.பி வேற டென்ஷனாகாதே...."

"எப்படிடி டென்ஷனாகாம இருக்க முடியும். ஐய்யோ இந்த மனுஷனை வேற இப்ப பார்த்து காணலியே..."

-பார்வதி சாவு வீட்டு லெவலுக்கு புலம்ப ஆரம்பிக்க கச்சிதமாய் ஜனார்த்தனம் உள்ளே நுழைந்தார்.

"என்னம்மா என்ன சத்தம்."

"யாரு... ஜனா அண்ணனா... அண்ணே பாத்தீங்களா உங்க அருமை ஃபிரண்டு மாப்ள பார்த்த லட்சணத்த...?" - பார்வதியின் கை அந்த மொட்டைக் கடிதத்தோடு உயர்ந்தது.

அதைப் பார்த்த ஜனாவின் முகமும் மாறியது.

"பாஸ்டர்ட்.... அங்க தொட்டு இங்க தொட்டு இப்ப இங்கையும் ஒரு லெட்டர் கொடுத்திருக்கானா....?"

"என்னண்ணே சொல்றீங்க.... எனக்கு ஒண்ணும் புரியலை."

"பதட்டப்படாதம்மா. பதட்டப்படாதே... ஒரு விஷயம் முதல்ல ஞாபகத்துல வெச்சுக்கோ. மாப்பிள்ளை பையன் சொக்கத் தங்கம். இந்த கல்யாணம் நல்லவிதமா நடக்கக்கூடாதுன்னு யாரோதான் பிளான் பண்ணி இப்படி மொட்டைக் கடுதாசி போட்டிருக்காங்க. இது ஒண்ணும் இப்ப மட்டும் நடக்கல. நேத்து நைட்டே ஒரு லெட்டர் உன் புருஷனுக்கு வந்தாச்சு."

"என்னது... அவருக்கும் ஒரு கடிதமா..... அவர் சொல்லவே இல்லையே."

"கத்தாதே." -ஜனா அவளை அதட்டலாக அடக்கி விட்டு திரும்பிச் சென்று அறைக்கதவை மூடப் போனார். அப்படி மூடும் போது பார்ப்பது தெரியாமல் நிமிர்ந்து ஒரு பார்வை.

பிறகு உள்ளே வந்தார்.

"இதோ பார். திரும்பவும் சொல்றேன். பையன் பிரபாகர் ரொம்ப நல்ல பையன். நாங்க எல்லாம் விசாரிச்சுட்டோம்.

"அப்படியா... இதை ஏன் அவர் என்கிட்ட சொல்லலை...?"

"பைத்தியம்... மொட்டைக் கடிதாசிக்கெல்லாம் யாராவது மதிப்பு கொடுக்கலாமா? எதை எப்படி அணுகணும்னு இருக்கு. உன் உடம்பை பத்தியும். மனசைப் பத்தியும் உன் புருஷனுக்கு தெரியாதா என்ன?"

"அதுசரி.... பையனைப்பற்றி நல்லா விசாரிச்சீங்களா? எல்லாம் பொய்தானா.... எப்படி விசாரிச்சீங்க?"

"இதோ பார்.... அதை எல்லாம் இப்ப சொல்றதுக்கு நேரமில்லை. என் சக்திக்கு பிரச்சினை வராம என்னவெல்லாம் பண்ண முடியுமோ அவ்வளவும் பண்ணிட்டேன். அப்படி நான் செய்த அளவுல சொல்றேன். இது பொறாமைப் பிடிச்சவங்க பண்ற வேலை. இந்த கல்யாணத்துல கலாட்டா வரணும்னு யாரோ ஆசைப்பட்றாங்க அவங்களுக்கு துளிகூட இடம் கொடுக்கக்கூடாது.

"முதல் மஞ்சுவுக்கு அலங்காரத்தை பண்ணு. தாலிகட்டி முடிஞ்ச பிறகு எல்லாத்தையும் விவரமா பேசிக்கலாம்."

-ஜனா பேசி முடிக்க டொக் டொக் என்று கதவு தட்டப்பட போய் திறந்தார் வியர்க்க விறுவிறுக்க கல்யாணசுந்தரம்.

"என்ன ஜனா... பார்வதி ஏதோ கூச்சல் போட்டாலாமே... டாய்லெட்ல உட்கார்ந்திருந்த என் காதுல வி ழுந்து ஓடி வர்றேன்..."

"ஒண்ணுமில்ல ஒண்ணுமில்ல. நீ முதல்ல தைரியமா இரு. எல்லாம் அந்த மொட்டைக் கடிதம் பண்ற வேலை."



"ஐய்யய்யோ... இங்க இவங்களுக்கும் தெரிஞ்சு போச்சா?"

"இங்க ஒரு லெட்டர் தெரியாதாக்கும்? உனக்கு போட்ட லெட்டர் பிசுபிசுத்து போச்சுல்ல. அதான் அடுத்த லெட்டர் இங்க வந்துருக்குது. சும்மா சொல்லக் கூடாது. எவனோ இல்லை எவளோ இந்தக் கல்யாணத்தை நிறுத்தியே தீரணும்னு கடிதம் போட்டுட்டு வந்த மாதிரிதான் தெரியுது"

"அண்ணே என்னண்ணே இப்படி என்னன்னமோ சொல்லி பயமுறுத்தறீங்க. நாங்க யாருக்குண்ணே என்னண்ணே கெடுதல் செஞ்சோம்."

"அட நீ ஒண்ணும்மா... பொறாமை கண்ணுக்கு நீ ஏதாவது செய்தே செய்யலேங்கறதா கணக்கு? வயத்தெரிச்சல்னா இப்படித் தாம்மா. இதை எல்லாம் கண்டுக்கக் கூடாது."

"ஜய்யோ... மகமாயி. ஏன் இப்படி பண்றாங்க. ஒரு புழு பூச்சிக்கு நான் துரோகம் பண்ணதில்லையே...."

"ஜய்யோ... மகமாயி. ஏன் இப்படி பண்றாங்க. ஒரு புழு பூச்சிக்கு நான் துரோகம் பண்ணதில்லையே...."

"கொஞ்சம் வாயை மூடும்மா. வேலையைப் பாருங்க. யாராவது ஏதாவது கேட்டா ஒண்ணுமே நடக்காத மாதிரி காரியம் பாருங்க. மாப்ளை வீட்டுக்காரங்க காதுல விழுந்து அவங்க அப்புறம் வருத்தப்பட ஆரம்பிச்சா கைத கந்தல் ஆயிடும்."

- ஜனா சமாளித்து அமர்த்திவிட்டு கல்யாணசுந்தரத்தையும் இழுத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

"என்ன ஜனா இது.... கல்யாணத்தை நிறுத்தாம விடமாட்டாங்க போல இருக்குதே."

"இப்ப எதுவும் பேசாதே. போ. போய் அடுத்து ஆகவேண்டியதப் பார்.

"அதுசரி. யாருன்னு நான் கண்டுபிடிக்கிறேன்னு சொன்னியே ஏதாவது தெரிஞ்சிச்சா?"

"வேலை நடந்துகிட்டு இருக்கு. இப்ப எதுவும் பேசக்கூடாது. போ... போப்பா..."

- தள்ளிவிட்டார். நெஞ்சிலும் ஒருவித பாரம். மூச்சுக்காற்றில் நூத்திப் பத்து டிகிரி அனல். அப்படியே மீண்டும் ஒரு பார்வை. சீர் அறைக்கு வெளியே ஜன்னலை ஒட்டி நின்று யாரோடோ பேசிக் கொண்டிருந்தான் அந்த மர்ம ஆசாமி?

## 8

மணமேடையில் பிரபாகர், சடங்குகள் நடந்துகொண்டிருந்தன. ஹோம குண்டம் புகையை ஐய்யர் அதைச் சொல்லு; இதைச் சொல்லு என்று அவனை ட்ரில் வாங்கிக்கொண்டிருந்தார்.

புகைக்கும் விவஸ்தை இல்லை. எவ்வளவு விசிறியும் பிரபாகர் முகம் நோக்கியே பரவியது.

கண்ணுக்கு மை வைத்து நெற்றிக்கு நாமம் போட்டு கூத்தடித் திருந்தார்கள்.

பாவம்.

காலம் காலமாக கல்யாண மாப்பிள்ளைக்கு நிகழும் அதே கூத்து.

எதிரில் அமர்ந்திருந்த சுந்தரும் பாஸ்கரும் அதை ரசித்து புகைப் படம் எடுத்துக்கொண்டிருந்தனர். சுந்தர், "இந்த வருஷத்தோட சூப்பர் திருஷ்டிப்படம் இப்ப நான் எடுத்ததுதாண்டா" என்றான். அதுவரை வீரப்பன் போல தலைமறைவாயிருந்த சசிகலாவும் அங்கே வந்து கலந்து கொண்டாள். அதிசயமாக புடவை கட்டி யிருந்தாள்.



சுந்தர் அதைப் பார்த்து "சசி தயவு செய்து நீ புடவை கட்டி அதோட மதிப்பை கெடுக்காதே ப்ளீஸ்" என்று காதோரம் கிசுகிசுத் தது. "போடா இடியட். உன்னை மாதிரி ஜட்டியே போடாம பேண்ட் போட்ற பசங்களுக்கு அப்படித்தாண்டா தெரியும்" என்று அவள் விட்ட நோஸ்கட்டை வாங்கிக்கொண்டான்.

வழக்கமான சலசலப்புக்கு பஞ்சமேயில்லை.

இடைஞ்சலாக ஆபீஸ் மேனேஜர் வந்தார்.

அவர் வந்ததால் அவரைக் கூட்டிப்போய் டிபன் சாப்பிட வைத்து கூடவே இருந்து அழைத்து வந்து மணமேடைக்கு எதிரில் உள்ள விசேஷ நாற்காலியில் அமர்த்த வேண்டும் என்பது பாஸ்கருடைய அசைன்மெண்ட்.

"குண்டன் வந்துட்டானா.... தெலைஞ்சேன் நான்..." என்று ஓடினான். புலம்பியதற்கு நேர் எதிராக "வாங்க சார் நமஸ்காரம்" என்று பல்லைக்காட்டி முகத்திலும் உணர்ச்சிகளை மாற்றினான்.

பாலசந்தரோ பாரதிராஜாவோ பார்த்தால் உதவியாளரை கூப்பிட்டு "உடனே அவனை ஹீரோவா புக் பண்ணுப்பா" என்று சொல்லியே தீருவார்கள். அப்படி ஒரு நடிப்பு.

"வாங்க சார். வாங்க.... வாங்க வீட்ல வரலையா?" டைனிங் ஹால் நோக்கி நடந்தபடி என்கொயரி வேறு. அவரும் லிட்டர் கணக்கில் வழிந்தார்.

"அவளுக்கு நாலு நாளாவே ஒரே ஹெட்டேக். அதோட க்ளைமேட் வேற சரியில்லை இல்லையா?"

-அவர் சொல்வதற்கெல்லாம் தலையாட்டினான். அவர் கழு தையை குதிரை என்றால் ஆமாம் சார் அட்டகாசமான அரபிக் குதிரை என்று ஒப்புதல் கொடுத்திருந்த பழக்கம் நன்றாக கை கொடுத்தது.

அவரும் லஜ்ஜையின்றி டைனிங் டேபிளில் ஒரு பிடிபிடித்தார். அவன் பார்க்க ஒரு வழுக்கைத் தலையர் மூன்றாவது ரவுண்டில் கேசரியை நக்கிக்கொண்டிருந்தார். நெருங்கிப் போய் அந்த வழுக்கை மண்டையில் கற்பூரத்தை வைத்துக் கொளுத்த வேண்டும் போல தோன்றியது.

எல்லாம் சகஜமாகவே இருந்தது.

கல்யாண வீடு என்றாலே அது ஒரு சந்தோஷ சாம்ராஜ்யம் தானே? அதில் கஷ்டம் கவலைப்பற்றியெல்லாம் நினைக்க யாருக்கு மனசு வரும்.

எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் அதை உதறிவிட்டு, "டும்" "டும்" சப்தம் காதில் விழ. புடவை கண்காட்சியையும், நகை கண் காட்சியையும் பார்த்துவிட்டு அப்படியே சைட் அடிக்க கல்யாண வீடு போல ஒரு இடம் இந்த உலகில் வருமா என்ன?

பாஸ்கரும் மேனேஜருக்கு இலையில் அல்வா போடும்போது அவ்வப்போது மின்னல்போல் தோன்றி மறைந்த ஒரு கிழங்கான பெண்ணைப் பார்த்து பார்த்து செருமாந்தான்.

அவள் கழுத்துத் தாலியும், உடல்வாகும் அவளுக்கு திருமண மாகி குழந்தை இருப்பதை உணர்த்தினாலும் கண்ணுக்கென்னவோ அவள்தான் தேவதையாகத் தெரிந்தாள். அதன் எதிரொலிகளாய் மனதில் பயங்கரமான கற்பனைகள்.

அவள் கணவன் அவளை எட்டி உதைக்கிறான். தாலியையும் வெடுக்கென்று பறித்துக்கொண்டு ஸ்லோமோஷனில் நடந்து மறை கிறான். அவளோ விசும்பி அழுகிறாள். அப்போது அவள் தோளில் கை போடும் பாஸ்கர் "நான் இருக்கேம்மா... நான் இருக்கேன்" என்கிறான். அவன் உடனே அவனைக் கட்டிக் கொள்கிறாள். அவனுக்கு உடம்பெல்லாம் பிள்ளையார் எறும்பு ஊறுவது போல் மாறுகிறது.

கட்!



"போலாம் பாஸ்கர்." மேனேஜர் சாப்பிட்டு விட்டுவந்து அவனை அழைத்து அவனது கற்பனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

மகா மட்டமான கற்பனை

மனசுக்கும் நன்றாக தெரிகிறது.

ஆனால் கண்ணுக்கு அதெல்லாம் தெரியவே மாட்டேன் என்கிறது. பால்கோவா இடுப்புகளை தேடித் தேடிப் பார்க்கிறது. பப்பாளி மார்பை மூடி மறைக்கிறார்களே என்று கவலைப்படுகிறது.

கல்யாண வீடே நீ வாழ்க!

"சந்தேகமில்லை. இந்த இடம் ஒரு சந்தோஷ சாம்ராஜ்யமே!"

பாஸ்கர் மொட்டைக் கடிதப் புயலின் தாக்கம் தெரியாமல் மிதந்துகொண்டிருந்தான். மேனேஜர் துருப்பிடித்த ஆக்ஸாவால் பழைய இரும்பை அறுக்கிற மாதிரி அவனை அறுத்துக் கொண் டிருந்தார்.

காதை அவருக்கு கொடுத்துவிட்டு கண்ணால் சுற்றிச் சுற்றி வந்தான். அப்போதுதான் அந்த காட்சி அவன் கண்ணில் பட்டது. ஒரு பெண்ணின் கழுத்துச் சங்கிலியை ஒருவன் நைசாக லவட்டிக் கொண்டிருந்தான்.

"சைட் அடிப்பதில் இப்படிக்கூட ஒரு காட்சி கண்ணில் படுமா என்ன?"

சுதாரித்தவன் அவனையே உற்றுப் பார்த்தான். அப்படியே விஸ்வநாதனை நெருங்கி "விச்சு..... ஒரு 420 உள்ளே இருக் காண்டா. ஒரு சங்கிலியை அடிச்சுட்டான். நானும் பாத்துட்டேன்."

"எங்கடா..... எங்க....?"

"ஸ்ஸ்... கவனிக்கறது தெரியாம கவனி."

"போடா போய் கோழி அமுக்கற மாதிரி அமுக்கறத விட்டுட்டு..."

"இப்ப வேண்டாம். அந்த லேடியும் சங்கிலி போனது தெரியாம இன்னொருத்தி கழுத்து நகையையே பாத்துகிட்டிருக்கா பார்."

-இருவரும் பேசிக்கொண்டே அவன் மேல் வைத்த பார்வையை விலக்காமல் நைசாக நழுவி மண்டப வாசலுக்கு போய் நின்றனர்.

மணமேடையில் பிரபாகர் புகையோடு மல்லுகட்டிக் கொண்டிருந்தான். மஞ்சுளாவையும் வந்து உட்கார்த்தி வைத்து கண்ணை கசக்கவிட்டனர். ஐய்யரும் ஊதிஊதிப் பார்த்தார். சரியான ஈரச் சிராய்கள். புகையை பெருக்கின.

அந்த சூழலிலேயே மஞ்சுளா பிரபாகர் காதில் கிசுகிசுத்தாள்.

"தாலி கட்றதுக்கு முந்தி உங்ககூட கொஞ்சம் பேசணும்."

"என்ன விஷயம்?"

"பேசும் போது சொல்றேன்."

"நான் உன்கூட பேசணும்னு நினைச்சேன்."

"என்ன விஷயம்?"

"பேசும்போது சொல்றேன்."

"எங்க... நீங்க உங்க ரூமுக்கும், நான் என் ரூமுக்கும் போயிட்டா எப்படி பேசறது?"

"அப்ப இங்கேயே பேசு...."

"ஐய்யோ எல்லோரும் பாத்துகிட்டிருக்காங்க. லொக்... லொக்" - புகையால் வந்து இருமலோடு...

"பரவாயில்லை.... பேசு! லொக்.... லொக்......"

"உங்களைப் பத்தி தப்பு தப்பா ஒரு மொட்டைக் கடுதாசி..."

"மைகாட்... உனக்குமா...? லொக்... லொக்..."

"உனக்குமான்னா.... உங்களுக்குமா?"



"ஆமாம், நீ அபார்ஷன் ஆனவள்னு...."

"ஐய்யோ.... நீங்க ஆபீஸ் கிளார்க்கை வெளுத்துக் கட்றவர்னு எனக்கு தகவல்."

"யாரோ பொறாமைக்காரங்க பண்ற வேலைன்னு நினைக்கிறேன்."

"அதான். அதான்... நீங்க அந்த மாதிரியெல்லாம் இல்லையே....?"

"ஏன் நான் திருப்பிக் கேட்க மாட்டேனா?"

"நீங்க இந்த புகை மேல... ச்சீநெருப்பு மேல சத்தியம் பண்ணுங்க. நானும் சத்தியம் பண்றேன். நான் 22 காரட் கோல்ட் டவுன் பஸ்ல கூட என்னை யாரும் உரசினது கிடையாது."

"நானும் ஸ்ரீராமன். எனக்கு லுக் விடக்கூட தெரியாது."

"சத்யமா?"

"சத்யமா!"

"தேங்க்யூ பிரபா.... இப்பதான் நிம்மதியாச்சு."

"எனக்கும்தான். ஆமாம் பேர் சொல்லித்தான் கூப்பிடுவியா இனிமே..."

"ஏன்.... பிடிக்கலையா உங்களுக்கு?"

"சேச்சே.... அப்படியே கூப்பிடு. நல்லாயிருக்கு."

"வழியாதீங்க!"

மேடையில் புகை மூட்டம் நடுவிலேயே ஒரு விவாதத்தை இருவரும் குனிந்த தலையோடு கிசுகிசு பாணியிலேயே செய்து முடிக்க கல்யாணசுந்தரம் பேஸ்து மாதிரி பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அடிக்கடி அருகில் போய் ஜனா ஆறுதலாக "ஒரு கவலையும் படாதே.... அந்த லெட்டர் பார்ட்டியை கண்டு பிடிச்சுட்டேன். இங்க தாலி கட்டி முடியும்போது அங்க அவன் கையில் விலங்கைப் போட்டுடும் போலீஸ்."

"போலீஸா?"

"வேற வழியே இல்லை. அந்தப் பார்ட்டி ஒரு சூப்பர் கிரிமினல். ஒரு கூட்டத்தோட வந்துருக்கான். உங்களுக்குத்தான் ஒரு பொல்லாத வழக்கம் ஒண்ணு இருக்குதே... சீர் சாமான்களை ட்ஸ்ப்ளே பண்றதுன்னு... இது அதால வந்த வினை..."

"எல்லா கல்யாணத்துலயும் நடக்கறதுதானே ஜனா அது."

"இனி எந்த கல்யாணத்துலையும் நடக்காம இருக்கறதுதான் நல்லது. கல்யாணம்கறது ஒரு காலத்துல மனசும் மனசும் கூடிக் கலக்கற இடமா இருந்துச்சு. ஆனா அப்படியே மாறி புடவைக் கடை, நகைக்கடை, பஜாரா மாறி அப்புறமா பவிசைக் காட்டிக்கற இடமா இப்ப அது மாறிப்போச்சு! அது அப்படி மாறும்போது திருடன் உள்ள வரத்தானே செய்வான்?"

அதுலையும் நீங்க வெச்சிருக்கீங்களே, சிகப்புக்கல் நெக்லஸ். அது தூண்டில்போட்டு வரவெச்சிருக்குது அவனை..."

"அதுக்கும் மொட்டைக் கடிதத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"கூட்டத்துக்கும் கோஷத்துக்கும் என்ன சம்மந்தமோ அதுதான். புரியாம பேசறியே. மொட்டைக் கடிதம் உங்களை குழப்பி சலனப் படுத்தி கவனத்தை திசை திருப்ப, அடிக்கடி எல்லோரும் பேசும் போது நடுவுல இவங்க கை வரிசையை காட்டிடுவாங்க. புரியுதா?"

"கடவுளே... இதுல கூட இப்படி ஒரு தொழில் நுட்பமா?"

"அதுதான் இந்த ஹைடெக் யுகத்தோட வளர்ச்சி. பை த பை இன்னொரு விஷயம்?"



"என்ன...?"

"மாப்ள ஃபிரண்ட்சும் சுதாரிச்சுட்டாங்க. ஒருத்தனை பார்த்துட்டு அவனைப் பிடிக்க வாசப்பக்கம் போயிட்டாங்க. கெட்டிக்காரப் பசங்க. அவங்களுக்கு போய் புளுஃபிலிமை எல்லாம் போட்டுக் காட்டி நான்தான் கெடுக்கத் தெரிஞ்சேன்."

"சரிசரி.... தாலி கட்ற நேரம் வரப்போகுது. பாத்துப்பா. அதாவது ரசாபாசம் ஆயிடப்போகுது."

"கவலைப்படாதே. இந்தக் கல்யாணம் பல வகையில ஒரு முன்னுதாரணம். கல்யாணத்துக்கு முந்தியே யார் யார் எப்படின்னு தெரிஞ்சுக்க முடிஞ்சது அது எவ்வளவு பெரிய விஷயம்.?"

"ஆமாம் ஜனா.... எனக்கு இப்பத்தான் நிம்மதியா இருக்கு."

"அவசரப்படாதே, அந்த பெருச்சாளி மாட்டட்டும். முழுசா நிம்மதி வசப்படலாம். அதுக்கு இப்ப நீயும் ஒரு காரியம் பண்ணணும்."

"என்ன.....?"

"சீர் அறைக்கு காவல் போட்டுயிருக்கியே திலகம் அவளை இந்தப் பக்கம் தள்ளிக்கிட்டு வந்துடு. அப்பதான் வசதியா அந்த பார்ட்டி உள்ள நுழைவான்."

"ரிஸ்க் எடுக்காதே ஜனா. அது எங்க பரம்பரை நகை. தூக்கிட்டு ஓடிட்டா என்ன பண்ண?"

"எங்க ஓட.... ஒரு சப் இன்ஸ்பெக்டர், நாலு கான்ஸ்டபிள் மஃப்டியில மாறுவேஷத்துல உள்ள இருக்காங்க. தெரிஞ்சுக்கோ...."

"நிஜமாவா?" - ஜனா ஜமாய்த்தார்.

# 9

கல்யாண முகூர்த்த நேரம்.... 'கெட்டிமேளம் கெட்டிமேளம்' என்னும் சப்தம்.

சீர் அறைக்கதவு திறந்திருக்க திலகமும் ("வாடி வாடி வந்து அட்சதை போடு" என்கிற கல்யாணசுந்தரத்தின் அழைப்பிற்கேற்ப அந்த இடத்தை விட்டு ஓடினாள்.

கீழே பிரபாகர் மஞ்சுளா கழுத்தில் மூணு முடிச்சு போட மொத்த கூட்டமும் அட்சதையை வாரி இறைத்து அங்கேயே கவனமாக இருக்க நமது மர்ம ஆசாமியும், இதுதான் டைம் என்று சீர் அறைக்குள் பாய்ந்தார்.

நெக்லஸோடு, வெள்ளிப்பாத்திரங்களில் கை வைத்து அதை யும் அள்ளிக்கொண்டு வெளியில் வந்து ஒரு சாக்கில் போட்டுக் கட்டிக்கொண்டு புறப்படும்வரை ஒருவர்கூட அந்தப் பக்கம் செல்லவில்லை. ஜனா மட்டும் நளிந்த நிலையில் பார்த்துக் கொண்டே இருந்தார். அவனும் சாக்குப் பையுடன் பின் பக்கமாய் வேகமாக நகர்ந்தார் பின் வழியே ஓடியபோது சிரித்தபடியே எதிரில் வந்து நின்றது போலீஸ்! மேக்கப்பையும் கலைத்துவிட்டு நிமிர அந்த பார்ட்டி "சார் நீங்களா....?" என்று கை காலெல்லாம் உதற லெடுக்க மூட்டையை போட்டுவிட்டு திரும்பி ஓடினான்.

ஒன்றும் பருப்பு வேகவில்லை.

சுந்தரும் பாஸ்கரும் விஸ்வநாதனும் ஊரைக்கூட்டி வளைத் தனர். எல்லாம் ஜனா ஏற்பாடு.

அப்படியே உள்ளே வந்து சங்கிலியை அபேஸ் செய்தவனை யும் ஒரு அமுக்கு! அவ்வளவையும் ஓசைப்படாமல் செய்ததுதான் சாமர்த்தியம்.



அப்படியே மற்றவர்கள் கவனம் திரும்பவும். முன் படுவேகமாக அவர்களை தள்ளிக்கொண்டு ஸ்டேஷனுக்கு கிளம்பினார் ஜனார்த் தனம். நண்பர்களை கட்டிப்பிடித்து நன்றியும் சொன்னார்.

போகிற வழியில் செல்ஃபோனில் கல்யாணசுந்தரத்தைப் பிடித்தார்.

"ஜனா.... என்னாச்சு?"

"என்னப்பா கேள்வி இது? பார்ட்டிங்க மாட்டிட்டாங்க. ஸ்டேஷனுக்குத்தான் போய்க்கிட்டிருக்கேன். மஞ்சுவுக்கு நான் வாழ்த்து சொல்லணும். போனை கொஞ்சம் அவளுக்கு கொடு."

-கல்யாணசுந்தரமும் ஓடிச்சென்று பலரது கை குலுக்கல்களுக்கு நடுவில் செல்ஃபோனை மஞ்சுவிடம் தந்தார்.

மஞ்சுவும் காதைக் கொடுக்க.

"என்னோட நல்வாழ்த்துக்கள்டா குழந்தை. மொட்டைக் கடுதாசி கவலையெல்லாம் படாதே...."

"தேங்க்யூ அங்கிள். இங்க இருவருக்கும் ஒரு லெட்டர் வந் திருக்கு. ஆனா இவர் கேர் பண்ணலை."

"அப்படியா... மாப்ள கிரேட்தான் அவர்கிட்ட கொஞ்சம் போனைக் கொடு."

போன் கைமாறியது.

"மாப்ள சார்... நல்வாழ்த்துக்கள்!"

"தேங்க்யூ..."

"மொட்டைக் கடுதாசி பார்ட்டி, ஒரு திருடன் பொறி வெச்சு பிடிச்சுட்டேன். இருந்தாலும் பதட்டப்படாம அதை நம்பாமல் செயல்பட்ட உங்களுக்குத்தான் நன்றி சொல்லணும்."

"அப்படியா... ரொம்ப சந்தோஷம்."

-செல்ஃபோனை பிரபாகர் திரும்ப கல்யாணசுந்தரத்திடம் நீட்டினார்.

அவர் கண்கள் பனித்திருந்தன.

அட்சதைகள் விழுந்துகொண்டிருக்க சுற்றிலும் ஒரே வாழ்த்துக்கள் மயம்.

அதே சமயம் மேலே சீர் அறையிலிருந்து திலகத்திடம் புலம்பல். "ஐய்யய்யோ நகையை காணலியே."

"இவ ஒருத்தி.... விவரம் புரியாம...."

-என்று அவளை சமாதானப்படுத்த மாடிப்படி ஏறத் தொடங்கினார் கல்யாணசுந்தரம்!

முற்றும்

# அந்த ஒன்பது பேர்

## 1

'ஒன்றது சூரியன்
உற்றவரும் சூரியர்!
நற்றவர் இவரை
நாலும் தெரிந்தவர்
நாடியே தொழுதிடுவர்
அஷ்டமரும் இவர்
அடிதளைஎன்றும் பணிந்திடுவர்
மற்றவர்க்கும் இவர் உற்றவரே
முற்பிறப்பினில் ஒளிபோலே
இருளது நீக்கிய கருமத்தாலே
அருளொடு ஒன்றதில் உய்த்தாரே!

-நவநாயக சித்தர்

காசி ரயில் நிலையம்!

தேங்கி நின்ற ரயிலிலிருந்து அடைந்து கிடந்த பெட்டியை விட்டு உதிர்க்கப்பட்ட பாஸ்கரன் முதற்காரியமாய் 'அப்பாடா' என்று பெருமூச்சு தான் விட்டான். தோளில் ஒரு ஜோல்னாப் பை.

பெரிதாக அதில் ஒன்றுமில்லை. குற்றாலத்துண்டு ஒன்று, நாலு முழ வேட்டியும் சட்டையும் ஒரு ஜோடி... அரக்கு நிறத்தில் இரண்டு

ஜட்டிகள், அப்படியே நல்ல தடிமனான டைரி ஒன்றும் ரெனால்ட்ஸ் பேனா ஒன்றும் தான் உள்ளிருந்தன.

பிளாட் ஃபாரம் ஜனத்திரளில் பிதுங்கி வழிந்துகொண்டிருந்தது. பாவம் தொலைக்க வந்தவர்கள், தொலைத்து முடித்தவர்கள் என்று நல்ல கூட்டம். 'ஜே ஜே' என்று இருந்தது. ஆனால் மனதில் அவன் நினைத்து வைத்திருந்த மாதிரி ஒரு நேர்த்தி இல்லை.

'சாயா சாயா' என்று அலுமினிய ஜக்குகளோடு அலையும் டீ வெண்டர்கள், அவர்களோடு சேர்ந்து அலையும் நாட்டு நாய்கள், வேட்டியையே தலைப்பாகைக்கும் பயன்படுத்தி விட்டார்களோ என்று நினைக்க வைக்கும் மார்வாடி சேட்டுகள், இன்னமும் வழக்கத்தில் இருக்கும். ட்ரங்குப் பெட்டிகள் என்று காசி ரயில் நிலையமே அவன் நினைத்து வைத்திருந்ததற்கு நேர் எதிராக இருந்தது.

அவன் பாட்டி தான் அடிக்கடி காசி பற்றி பேசுவாள். "பொறந்தா அங்கு பொறக்கணும். செத்தாலும் அங்க சாகணும்..." என்று!

"ஏன் பாட்டி அப்படி? மத்த ஊர்கள்லாம் ஊர் இல்லையா?" - பாஸ்கரனும் கேட்பான்.

"அது சரி... எல்லா ஊரும் காசியாயிடுமா? இல்ல காசில ஓட்ற கங்கைதான் ஆயிடுமா?"

"கங்கை என்ன அவ்வளவு ஒசத்தி?"

"புண்ணிய நதியாச்சே... ஒரு முழுக்கு -ஒரே ஒரு முழுக்கு போட்டா போதுமே... பண்ண பாவம் பூரா போய்டுமே."

"அது எப்படி போகும்? பாவம்கறது என்ன உடம்புல ஒட்டியிருக்கிற அழுக்கா...? கங்கை ஆத்துல மூழ்கின உடனே கரைஞ்சு போறதுக்கு...?"



"ஏகடியம் பேசாதடா... இந்த மண்ணுல பொறந்த ஒவ்வொருத்தனும் சாகறதுக்குள்ள ஒருதடவை கங்கைல குளிச்சிடணும் தெரிஞ்சுக்க..."

"அது என்ன கட்டாயம்?"

"பாவம் தொலைய வேண்டாமா?"

"திரும்பத் திரும்ப பாவம் பாவம்னே பேசு... அதுல குளிச்சா பாவம் போயிடும்னா இந்தியாவுல பாவிகளே இல்லாமன்னா போய்டுவாங்க..."

"நீ விதண்டாவாதம் பண்றே... உன் வயசு அப்படி!" என்று அவனிடம் அதற்கு மேல் பேசாத பாட்டி திடீரென்று ஒரு நாள் "நான் காசிக்கு போறேன்... திரும்பி வரமாட்டேன். அங்கேயே என் கணக்கு முடிந்துவிடும் என்று ஜோசியர் ஒருவர் சொல்லியிருக்கிறார்..." என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

சொந்தங்கள் அவ்வளவு பேரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். விடாப்பிடியாக எல்லோரையும் ஏமாற்றிவிட்டு பாட்டி தனியாளாக ரயில் ஏறிவிட்டாள். அதன்பின் அவள் சொன்னது போல்தான் ஆயிற்று... அவள் திரும்பவே இல்லை!

அப்பா, பெரியப்பா, சித்தப்பா, அத்தை, மாமா என்று பாஸ்கரனின் சொந்தங்கள் மாசக் கணக்கில் பாட்டியை காசியில் தேடினார்கள்.

அவள் கிடைக்கவேயில்லை.

இறுதியில் ஒரு ஆசிரமத்துக்காரர் பாட்டியின் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு, "இந்தம்மா இறந்துவிட்டார்கள். சாகும்போது நான் உடன் இருந்தேன். உடம்பை கங்கையில் எறிந்துவிடச் சொன்னார்கள். நானும் அப்படியே செய்தேன். அவர்களின் பிணத்தின் வயிற்றின் மேல் மோட்ச தீபம் என்னும் அகல் விளக்கேற்றி ஆற்றில் இழுத்துவிட்டேன். நெடுந்தூரம் அது போகும் வரை பார்த்துக் கொண்டே இருந்தேன்..." என்றும் சொல்லி அதிர்ச்சியளித்தார்.

பாட்டிக்கு காசியின் மேலும், கங்கையின் மேலும் அப்படி ஒரு பிரியம்.

பாட்டிக்குப் பிறகு பேரன் இப்பொழுது காசிக்கு வந்திருக்கிறான். பாட்டி சொன்னதையும், சொன்னபடி செய்ததையும் வைத்துப் பார்க்கும்போது அது சொர்க்க பூமியாக எங்கு பார்த்தாலும் கோவிலாக இருக்கும் போலவும் ஒரு நினைப்பு அவனுக்குள் உருவாகிவிட்டிருந்தது.

ஆனால் இப்படி ஒரு அழுக்கு ஊராக- தேர்த்திருவிழா கூட்டம் போல ஒரே சலசலப்போடு இருக்கும் என்றெல்லாம் அவன் நினைத்திருக்கவில்லை.

முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். அவனுக்கும் அப்படித்தான் இருந்தது. ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்த ஏராளமாய் குதிரை வண்டிகள் அரதப்பழசாய்... பெயிண்ட் உதிர் ஆட்டோக்கள், சற்று பெரிய டப்பாக்கள்.

நசுக்கிப் பிடித்து அதில் ஏறி அமரும் ஜனக்கூட்டம்... அவனுக்கு வியர்த்தது. யாரைப் பார் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஓரளவு எல்லா பிரதேச மக்களையுமே பார்க்க முடிந்தது.

நாமம் போட்டிருக்கும் செட்டியாரிலிருந்து குடுமி வைத்திருக் கும் ஐயர், ஷெர்வானி உடுப்பு மராத்தியர், அழுக்கு கச்சம் உடுத்திய ராஜஸ்தானி என்று மொத்த இந்தியாவே அங்கே தெரிந்தது.

ஒரு டபடபா ஆட்டோவில் ஏறி அமர்ந்தான். ஐந்து ரூபாய் கொடுத்து பயணம் செய்து கங்கைக்கரை ஓரமாய் இறக்கி விடப் பட்டான்.

பாட்டி மிக நம்பிக்கையாய் வர்ணித்த கங்கை நதியைக் காணும் ஆவலும் கண்ணில் மின்னிக்கொண்டிருந்தது.

இமயத்தில் உற்பத்தியாகும் ஜீவநதி.



மீன்களோடு முதலைகளும் நீந்தும் ஒரு அதிசய நதி. தண்ணீர் கல்கண்டாய் இனிக்கும். காலை வைத்தாலும் பனித்துண்டம்போல் ஜில்லிட்டு உச்சி மண்டை வரை சிலிர்த்துப் போகும் என்றெல்லாம் கேள்விப்பட்டு வைத்திருந்த நதி.

அசைபோட்டபடியே நடந்தான்.

நிறைய பிச்சைக்காரர்கள் அவன் நடக்கையில் குறுக்கில் கை நீட்டினார்கள். கால் உள்ளவர், இல்லாதவர், தொழு நோய்க்காரர், கூன் விழுந்தவர் என்று பிச்சைக்காரர்களில் கூட ஆயிரம் ரகங்கள். பாவம் தொலைக்க வருபவர்கள் தர்மம் செய்தாகவேண்டும் என்பது ஒரு ஐதீகம் போலவும் அந்த தர்மத்தை பங்கு போட்டுக் கொள்ளவே இவ்வளவு பேர்களும் அங்கே திரண்டு விட்ட மாதிரியும் தோன்றியது. ஒரு ஹிந்தி சப்தம். 'பிதாஜி... மாதாஜி... பைய்யா' என்று விதவிதமாய்க் குரல்கள். கொஞ்சம் எரிச்சலாகவும் கொஞ்சம் சிரிப்பாயும் கூட இருந்தது.

தொலைவில் கங்கையும் அதன் கல்படித்துறைகளும் தெரிந்தன. அந்த படித்துறைகளை ஒட்டி கூம்பு கூம்பாய் கோவில்கள். அதில் காவிக்கொடி பறந்துகொண்டிருந்தது.

நிறைய பண்டாக்களை கையைப் பிடித்து இழுக்காத குறையாக தர்ப்பணத்திற்காகவும் திவச காரியத்துக்காகவும் வேட்டை நாய்கள் போல பாய்ந்துகொண்டிருந்தனர்.

எல்லாமே விநோதமாக இருந்தது.

தோளில் ஜோல்னா தொங்க படிகள் மேல் நின்றவன் ஓடிவந்த படி இருக்கும் கங்கையைப் பார்த்தான்.

காவிரியை, தாமிரபரணியை, வைகையைப் பார்க்கிற மாதிரி தான் இருந்தது. இதில் அவைகளைவிட இதை எதன் பொருட்டு ஒசத்தி என்று கூறி வைத்திருக்கிறார்கள்? -மனிதர்களில் ஜாதியை விதித்து உயர்வு தாழ்வு கற்பித்தவர்கள் தண்ணீரிலும் அதை விடவில்லை என்றுதான் தோன்றிற்று.

இப்படி சமூக சிந்தனையாளன் போல யோசிப்பதற்காகவா பாஸ்கரன் காசிக்கும் அங்குள்ள கங்கைக் கரைக்கும் வந்திருக்கிறான்?

இல்லை... முப்பது வயதிலேயே பக்தி முற்றிப்போய் கங்கையில் குளிக்கவேண்டும் என்பது அவன் ஆசையா?

நெடுநேரம் கல்படி மேல் நின்றுகொண்டு ஓடும் கங்கை ஆற்றையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அநேகம் பேர் ஆவலாதியோடு அவன் பார்க்க, மூழ்கி மூழ்கி எழுந்தபடி இருந்தனர்.

'சிவசிவா...' என்றும் 'ராம் ராம்' என்றும் கோஷம் போட்டபடி கைகளைக் கூப்பிக்கொண்டு மூழ்கி எழுந்தவர்களை எல்லாம் பார்க்கப் பார்க்க வேடிக்கையாகக் கூட இருந்தது.

இதில் தொப்புளைத் தொடும் தாடியோடு பல சாமியார்கள் வேறு. கையில் ஆளுயர சூலாயுதத்தைப் பிடித்துக்கொண்டு கேலண்டரில் பார்த்த பரமசிவனைப் போலவே திரிசடை, முப்புரி என்று விதம் விதமாய் தெரிந்தார்கள்.

நடுவில் வயிற்றின் மேல் மோட்ச தீபம் எரிய சில பிணங்களும் மிதந்துகொண்டு போயின. அதைப்பார்த்து யாரும் லஜ்ஜைப்பட்ட மாதிரியே தெரியவில்லை.

ஒதுங்கி வழிவிட்டுவிட்டு மீண்டும் மீண்டும் மூழ்கி எழுந்தார்கள்.

பாஸ்கரனுக்குள் அவனது கற்பனைகள் எல்லாம் அழிந்து கொஞ்சம் சுத்தமான கூவம் ஒன்று ஓடுகிற மாதிரித்தான் தோன்றியது.



'வாழப்பிடிக்கவில்லை; செத்துத் தொலைவோம்' என்று அவன் முடிவெடுத்தபோது காசியும் கங்கையும்தான் அவன் கண்ணில் விரிந்தன.

பாட்டி வேறு அவைகளைப் பற்றி சொல்லி மனதில் ஏராளமான பதியன்களைப் போட்டிருந்தது வசதியாகப்போயிற்று.

நடுநடுவே தற்கொலை செய்துகொள்பவர்கள் ஆவி, பேயாக அலையும் என்று கேள்விப்பட்டது வேறு கொஞ்சம் பல்லிடுக்குத் தேங்காயாக நிரடிற்று.

உயிரோடு இருக்கும் போதுதான் வெற்றி என்பதே வாழ்நாளில் இல்லாமல் போய்விட்டது. செத்தபிறகும் காலில்லாமல் அம்புலி மாமா புத்தக கதைகளில் வருகிற ஆவிபடம்போல ஒரு புகையாக அலையும்படியாகிவிட்டால் என்னாவது என்கிற பயம் வேறு அவனைக் கவ்விக்கொண்டதால் கங்கையில் மூழ்கிச் சாவதுதான் இதற்கெல்லாம் தீர்வு என்று தோன்றிற்று.

எந்த ஜென்மத்துப் பாவமோ இந்த ஜென்மத்தில் பாடாய்ப் படும்படி ஆகிவிட்டது. அதை கங்கையில் மூழ்கிக் கரைத்துவிட்டு அப்படியே வாழ்க்கையும் வேண்டாம் ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம் என்று செத்துவிட வேண்டும் என்பதுதான் அவனது தீர்மானம்.

ஆனால் அதற்காக வந்த இடத்தில் காசியும் கங்கையும் சராசரிக்கும் கீழே போய்விட்டது. இங்கே செத்து வைத்தால் தன் பாவம் போய் ஆவியாக அலையமாட்டோம் என்பதெல்லாமும் பொய்யாகிவிடும் என்றுதான் தோன்றியது.

'பார்த்தாயா.... பாவம் போக்கும் நதியின் அழுக்கை...? பாவம் போக்க வந்தவர்களின் அலட்சியத்தை....?' கரைகளில் நின்று கொண்டு சிலர் காசுக்காக அடிக்கும் கூத்துக்கள் கேள்விகளை அவனுக்குள் கொளுத்திப்போட்டன.

'என்னசெய்யலாம்?'

-கேள்விக்குள் அலை மோதத் தொடங்கிவிட்டான்.

## 2

இரண்டாவது இரவினில்
திரண்டிடும் சந்திரன்!
உருண்டது ஒளிகூட்டி, பின்
மருண்டது ஒளிநீக்கி
கூடிக்குறைந்து, குறைந்து பின் கூடி
ஓடித்திரியுமே வெளிவானில்,
கூடிதில் மனமதன் சக்திக்காதாரம்
சந்திரனே என்றும் சந்தோஷம்
இவனை உற்றவர் கற்பனைக் கொற்றவர்!
இவனே போல வற்றியே பெருகுவர்!
ஒன்றதைத் தொற்றிட உத்தமமாவர்
ஏழதும் நவமும் தோழமை யாமே!'

-நவநாயக சித்தர்.

சுளையாக ஐம்பதாயிரம்!

பேங்க் மேனேஜரே பாஸ்கரனைக் கூப்பிட்டு கேஷியரிடம் இருந்து வாங்கியும் கொடுத்தார்.

"இந்தாங்க.... உங்க பிசினஸ் முயற்சி எல்லாவகையிலையும் வெற்றி பெற என்னோட வாழ்த்துக்கள்." என்று பணத்தைத் தந்த கையோடு கையையும் குலுக்கினார்.

"தேங்யூ சார்... இந்த உதவியை நான் எப்பவும் மறக்க மாட்டேன்."



"நான் என்ன பெரிசா செய்துட்டேன். சொல்லப்போனா பிசினஸ் தொடங்க முன் வந்திருக்கற உங்களுக்கு நான்தான் நன்றி சொல்லணும்.

அப்ளிகேஷன் எழுதிப் போட்டு காசைக் கொடுத்தாவது வேலை வாங்கி ஒரு மேஜை நாற்காலில உக்காந்து என்னத்தையோ எழுதிட்டு ஒண்ணாந்தேதியானா சம்பளம் வாங்கணும்னு நினைக் கறவங்கதான் இன்னிக்கு அதிகம் இருக்காங்க.

அதனாலேயே ஒரு வேலைக்கு ஆயிரம் பேர் போட்டி போடுற கொடுமை. வேலை இல்லாத் திண்டாட்டமும் பார்த்தீனிய செடி மாதிரி பெருகிப் போச்சு. இதுக்கு ஒரே தீர்வு ஒவ்வொரு இளை ஞனும் அப்ளிகேஷன் எழுதிப்போட்டு வேலை தேடுறதையே கேவலமா நினைக்கணும். சுயமா தொழில் செய்து பிழைக்க முன் வரணும் உங்களைப் போல. அப்பதான் இந்தியா முன்னேறும்."

-மேனேஜர் ஒரு லெக்சரே கொடுத்துவிட்டார். பாஸ்கரனும் பணத்தோடும் புதிய தெம்போடும் பேங்கை விட்டு வெளியில் வந்தான். ஹேண்ட் பேக்கில் மேனேஜர் கொடுத்த ஐம்பதாயிரம். பாஸ்கரனின் வாழ்க்கைக்கே ஆதாரம்.

'தெண்டச்சோறு' என்று திட்டும் அண்ணி, 'உதவாக்கரை' என்று திட்டிக்கொண்டே செலவுக்கு காசு தரும் அண்ணன் 'போடா... போய் மூட்டை தூக்கு' என்று வார்த்தைக்கு வார்த்தை குத்திக்காட் டும் பென்ஷன் வாங்கும் அப்பா, 'மாசம் அஞ்சாயிரமாவது சம்பாதிச்சாதான் ஐ லவ் யூ.... இல்லாட்டா ஐ ஹேட் யூ' என்று சொல்லும் அத்தை பெண் பார்கவி என்று எல்லோருமே ஒரு நொடி அவன் மனக்கண்ணில் வலம் வந்தார்கள். இனி அவர்கள் என்ன சொல்வார்கள்?

'சபாஷ்... இருந்தா இப்படித்தான் இருக்கணும்' என்பார்களா? இல்லை 'ஐம்பதாயிரத்துல என்னத்தடா புடுங்கப்போறே? ஒரு

ஆட்டோ வாங்கணும்னாகூட எம்பதாயிரம் வேணும்' என்பார்களா?

கேள்விகளோடு நடந்தான் பாஸ்கரன்.

பணம் ஒருவகையில் இன்பமாகவும் இன்னொரு வகையில் பாரமாகவும் கனத்தது. எப்படியோ அவரைப் பிடித்து இவரைப் பிடித்து படித்து வாங்கிய சர்டிபிகேட்டுகளைக் காட்டி சின்னதாய் ஒரு ஃபாஸ்ட் ஃபுட் சென்டர் ஆரம்பிக்கப் போவதை அதற்கான ஒரு இருநூறு சதுர அடி கடை இடம் ஒன்றைக்காட்டி (மாச வாடகை 2000) மேனேஜர் காலில் விழுந்து (பாவம் ரொம்ப நல்ல மனுஷன்) நிஜமாலுமே கொஞ்சம் கண்ணீரும் விட்டு அழுது அவர் மனதைக் கரைத்து பெரிதாக ஜாமீன் என்று ஒன்றை அவர் கேட்காதபடி செய்து, அவரே அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி சொந்த ரிஸ்க்கில் பணத்தையும் வங்கியிடமிருந்து கடனாக வாங்கிக் கொடுத்துவிட்டார். இப்பொழுதெல்லாம் வங்கிகள் பெரிதாய் அலட்டிக்கொள்வதில்லை. தாராளமாய் கடனுதவிகள் செய்கின்றன. எல்லாம் மத்திய அரசும் ரிசர்வ் பேங்கும் செய்த வேலை. இருபது பர்சன்ட் வட்டி, ஊட்டிக்கும் கொடைக்கானலுக்கும் ட்ரிப் என்று ஆசைகாட்டிய ஃபைனான்ஸ் கம்பெனிகள் தண்ணி அடித்த குடிகாரன் கணக்காக கவிழ்ந்ததன் எதிரொலி. இன்று பணத்தை வைத்து பணம் பண்ண வழியே கிடையாது. அதைக் கொண்டு துணிந்து உழைத்தால்தான் துட்டு பார்க்கலாம் என்றாகிவிட்டது. இதனால் பாஸ்கரன் மாதிரி தொழி செய்கிறேன் என்று முன் வருபவர்களுக்கு முதலில் பணத்தைப் பிடி என்று வங்கிகள் வேகமாக உதவும் ஒரு நிலை.

எப்படியோ பணம் வந்துவிட்டது. இனி பிழைத்துக் காட்டி நாணயமாக அதை திருப்பிக்கட்ட வேண்டும். அதுவும் சொற்ப வட்டியோடு...

பஸ்கரனுக்குள் நிறையவே நம்பிக்கை.



"நீ பணத்தோட வா... எங்க பெரியம்மா சும்மாதான் இருக்காங்க. அவங்கள மாதிரி சமைக்க ஆளே கிடையாது. அவங்க உன் கடைக்கு என்ன தேவையோ அதை சமைச்சுத் தந்துடுவாங்க." என்று சொன்ன கணேஷ்தான் இப்பொழுது அவன் ஞாபகத்தில் முந்தினான்!

இரண்டு காஸ் அடுப்பு - அப்புறமாய் கிட்டத்தட்ட ஐந்தாயிரம் ரூபாய்க்கு பாத்திரங்கள். அதற்குப் பின் பத்து நாளைக்குத் தேவையான மளிகை அது ஒன்றும் பிரமாதமில்லை ஏழாயிரம் சில்லரை தான் வந்தது. ஒரு வரைபட போர்டு, சின்னதாய் ஒரு கல்லா மேஜை நாற்காலி, இது போக நான்கைந்து மரபெஞ்சுகள், மைக்கா ஒட்டிய டைனிங் மேஜைகள், எல்லாவற்றையும் கூட்டிக் கணக்குப் பார்த்த போது கிட்டத்தட்ட முப்பத்தி ஐந்து ஆயிரம் வந்துவிட்டது. மீதி பதினைந்தாயிரம் கையில்! இதை பேங்க்கில் போட்டு கையிருப்பாய் வைத்துக்கொண்டுவிடலாம். "தைரியமாக ஒரு நல்ல நாளில் ஸ்பீக்கர்செட் கட்டி தடபுடலாக ஒரு கணபதி ஹோமமும் செய்து வியாபாரத்தை ஆரம்பித்துவிடலாம்" என்று கணேஷ் அப்போதே சாமான்களை வாங்க கடைக்கும் கிளம்பிவிட்டான். "இரு கணேஷ் வீட்டுக்குப் போய் அப்பா, அண்ணன், அண்ணி, அப்புறமா பார்கவின்னு எல்லார்கிட்டையும் சொல்லிட்டு வந்துட்றேன். நாளைக்கு நம்ம பர்ச்சேஸை வைத்துக் கொள்ளலாம்" - என்று பாஸ்கரனும் கிளம்பினான்.

வீடு!

அண்ணி டி.வி.யில் மத்திய நேரத்து மெகா சோகத்தைப் பார்த்தபடி இருந்தாள். பாஸ்கரன் வருவது தெரிந்தும் தெரியாத மாதிரி டி.வி.யிலேயே கவனமாய் இருந்தாள்.

"அண்ணி...."

"......"

"அண்ணி உங்களத்தான்!"

"என்ன?"

"ஒரு முக்கியமான விஷயம்."

"எதுவா இருந்தாலும் மூனு மணிவரை பேசாதே...."

"ஒரு அஞ்சு நிமிஷம் அண்ணி. நீங்க கேட்டா சந்தோஷப் படுவீங்க."

"அப்படியெல்லாம் சந்தோஷப்பட்ற மாதிரி எல்லாம் பேசக்கூட உனக்குத் தெரியுமா?" டி.வி.யில் இருந்து பார்வையை விலக்காமலே அவள் பேசினாலும் பாஸ்கரன் அவளைவிடவில்லை. அவள் எதிரில் ரூபாய் நோட்டுக் கற்றையை எடுத்து ஒரு ஆட்டு ஆட்டினான். அதற்குத்தான் எத்தனை சக்தி! அவள் கவனம் உடனே திரும்பியது.

"என்னடா... எது இவ்வளவு பணம்?"

"பேங்க்ல லோன் போட்டேன் அண்ணி. அந்தப் பணம்."

"பேங்க் லோனா...? உன்னை நம்பி இவ்வளவு பணத்தை எந்த பேங்க்குல தந்தாங்க...?"

"அதுவா அண்ணி இப்ப விஷயம்... இது எதுக்குன்னு கேளுங்களேன்."

"எதுக்கு. வீட்டு மாடியில ஒரு ரூம்போடணும்னு உங்க அண்ணன் சொல்லிக்கிட்டிருந்தாரே அதுக்கா?"

"இல்ல அண்ணி நான் சொந்தமா பிஸினஸ் பண்ணப் போறேன். அதுக்குத்தான்!"

"பிஸினஸா...? நீயா?" -அண்ணி கேட்ட தொனியே சரி யில்லை. யாராவது ஒரு தொழுநோய் பிச்சைக்காரன் தன்னை ஒரு



கோடீஸ்வரன் என்று சொல்லும்போது நமக்குள் ஒரு ஆச்சரியமும் ஏளனமும் மூளுமே....? அப்படி இருந்தது அவள் கேள்வி.

"ஏண்ணி... நான் பிஸினஸ் பண்ணமாட்டேனா?"

"அதுசரி... என்ன பிசினஸ் பண்ணப்போறே?"

"ஃபாஸ்ட் ஃபுட் கடை வெக்கலாம்னு இருக்கேன்."

"அப்படின்னா...?"

"சின்னதா ஒரு ஹோட்டல் அண்ணி."

"ஹோட்டலா...? நீயா?" -மீண்டும் அண்ணியிடம் அதே இளக்காரம், பாஸ்கரனுக்குள் ஒரு கத்தி அவளைக் குத்துவது போல நிமிர்ந்தது. அடக்கிக்கொண்டு தொடர்ந்தான்...

"ஏண்ணி... அது என்னால முடியாதா?"

"ஆமா பெரிய நளன் பாரு. ஏண்டா... ஹோட்டல்னா என்ன உனக்கு விளையாட்டா இருக்குதா? ஒருத்தர்க்கு பத்து பேர் இருந்து பாத்துப்பாத்து செஞ்சாலே அது சொட்டை இது சொள்ளைன்னு சொல்லுவாங்க, உனக்கு என்ன தெரியும்னு நீ இதுல போய் இறங்கறேன்கறே?"

"என் நண்பன் கணேஷோட பெரியம்மா நல்லா சமைப்பாங்களாம். அவங்கதான் சமையல். நான் ஒண்ணும் உட்லண்ட்சுக்கும், உடுப்பி ஹோட்டலுக்கும் போட்டியா ஹோட்டல் நடத்தல அண்ணி. சின்னதா உப்புமா, பூரி, பொங்கல்னு ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்க்குதான் முதல்ல சரக்கு போடப்போறேன்."

-அவன் விளக்கத்தைக் கேட்டுக் கொண்டே அவன் அப்பா வந்தார். வந்தவர் வாயும் சும்மா இருக்கவில்லை.

"ஏண்டா... கடை கண்ணியெல்லாம் நமக்கு சரிப்பட்டு வருமாடா? நம்ம குடும்பத்துல எல்லாரும் வக்கீலு டாக்டர்னு வாழ்ந்த

வங்கடா. அந்த கௌரவத்தை ஹோட்டல் கடை வெச்சு கெடுத்துப் புடுவே போல இருக்குதே?"

"நல்லா கேளுங்க மாமா... புரியாம பேசறான். இவனைச் சொல்லிக்குத்தமில்லை. இவனால முடியும்னு பணம் கொடுத்த அந்த பேங்க் மேனேஜரைச் சொல்லணும்."

"அவங்க என்னம்மா பண்ணுவாங்க. இப்பல்லாம் அவங் களுக்கு பணம் செலவாகமாட்டேங்குது. வெச்சுக்கிட்டு என்ன பண்றதுன்னு தெரியலை. அதான் ஒவ்வொரு ஃபைனான்ஸ் கம்பெனிக்காரனாகவுந்தடிச்சு ஓடி ஒளிஞ்சுட்டானுங்களே, அதனால எல்லாரும் பேங்க்குலதான் பணத்தை போட்டாகணும், போட்ட காசுக்கு என்னத்தையோ அரையணா வட்டியாச்சும் தரணுமில்ல? அதான் இவனுக்கெல்லாம் பணம் கிடைச்சிருக்கு.

எலேய்... ஒழுங்கா இதை வெச்சு வேற ஏதாவது பண்ற வழியப் பாரு. ஹோட்டல் கீட்டல்னு போனே அழிஞ்சுதான் போவே..."

-அப்பா பொருளாதார சிந்தனை மிகுந்தவர் போல ஆக்ரோஷ மாய் ஒரு புலம்பு புலம்ப...

"சரிப்பா... வேற என்ன தொழில்பா பண்ணலாம்?"

"அம்பதாயிரத்துக்கு என்னத்த பண்ண... ஒரு மெக்கானிக் ஷெட் கூட வைக்க முடியாது...."

- அவர் வழியையும் சொல்லவில்லை.

அவன் செய்ய நினைப்பதையும் சரி என்று சொல்லவில்லை. இறுதியாக அண்ணன் சுற்று வந்தது.

ஆபீசில் இருந்து வந்த அவன் அந்த பணத்தை அப்படியே தன்னிடம் தந்துவிடச் சொன்னான்.

"அண்ணே... உங்ககிட்ட கொடுத்துட்டா அப்புறம் பிசினஸ்?"



"பெரிய புடலங்கா பிசினஸ். என் ஆபீஸ்ல ஒரு க்ளார்க் வேலை காலியாகப் போவுது. இந்த பணத்தை லஞ்சமா கொடுத்து அதை நான் உனக்கு வாங்கித் தந்துட்றேன். நீ பிசனஸ்லாம் பண்ணி ஒண்ணும் கிழிக்க வேண்டாம்."

"இல்லண்ணே... மேனேஜர் அப்புறம் திட்டுவாரு. மாசா மாசம் பணம் கட்டணும்."

"எல்லாம் எனக்கும் தெரியும். பணம் கட்டலேன்னாதானே அவர் கேள்வி கேட்பாரு. எல்லாம் நான் பாத்துக்கறேன். ஃபாஸ்ட் ஃபுட், ஸ்லோஃபுட்னு குடும்பப் பேரைக் கெடுத்து வைக்காதே..."

அண்ணனும் அதிரடியாகத்தான் பேசினான். தப்பித்து பணத் துடன் வீட்டை விட்டு வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

ஆனால் அப்படி வந்ததுதான் தப்பாகிவிட்டது.

வரும் வழியில் எப்படித்தான் அப்படி ஆனதோ?

ஐம்பதாயிரமும் அபேஸ்!

## 3

**மூன்றது உத்தமக் குருவாகும்**
**நற்றவதவத்தின் உருவாகும்!**
**முற்றைப் பிறப்பில் அருளைச் சேமித்தவர்**
**இற்றைப் பிறப்பில் குருவை நேர் நோக்குவர்**
**நேர்நிறை நோக்கிது மற்றையோர்**
**போர்க்குணத்தாக்கினையும் பொட்டென வீழ்த்தும்.**
**ஆர்த்த நிறைச் சூரியனாய் அன்றாடம் காத்திடும்!**
**மூன்றது உற்றவர் கருமத்தாய் நற்றவர்....**

**-நவநாயகச்சித்தர்.**

மீண்டும் காசி!

காக்கை பறக்காத கங்கை மயானக் கரைவெளி..

பாஸ்கரன் காசியின் மயானக் கரைவெளி பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கிறான்.

சுற்று வட்டாரங்களில் இறந்தவர்களின் பிணங்கள் இங்கே எரியூட்டப்பட வரிசையில் காத்திருக்குமாம். அரிச்சந்திரன் மயான ஊழியம் புரிந்ததாகக் கருதப்படும் 'அரிச்சந்திரா காட்' என்னும் இந்த மயானத்தில் நம் கதை முடிய நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பார்கள்.

பிணம் எரிக்க வந்த கூட்டம் ஒருபுறம், பால் தெளிக்க வந்த கூட்டம் மறுபுறம், சாம்பலை அள்ளிக்கொண்டு கங்கைக் கரைக்குப் போய் அந்த அஸ்தியைக்கரைக்கும் கூட்டம் ஒருபுறம் என்று மயானம் அதற்குரிய அமைதியில் இல்லாமல் சற்று கூட்டத்துடன் தான் இருந்தது.

மனிதன் எப்பொழுதுமே பேராசை பிடித்தவன். இறந்து குப்பை யான பிறகும் அந்த குப்பைகூட புண்ணியம் தேடவேண்டும் என்கிற ஆசையோடுதான் அவன் செத்து வைக்கிறான்.

மயானக் கரை வெளியில் நின்று சர்வத்தையும் பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கரனுக்கு ஒரு புறம் சிரிப்பாக வந்தது. சுடுகாட்டு வெட்டியானில் இருந்து கர்மகாரியங்கள் செய்யும் பண்டாக்கள் வரை காசைக் கறப்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

போதாதற்கு கறுப்பு நிறத்தில் பிணங்களை அள்ளி வந்து போடும் மார்ச்சுவரி வேன்கள் - கார்கள் என்று இந்த காலத்திற்கேற்ப புதிதாக உருவாகிவிட்ட ஒரு கூட்டம்.

அப்பொழுதுதான் ஒரு மார்வடியின் பருத்த சடலம் ஒரு மார்ச்சுவரி வேனை விட்டு இறங்கிக்கொண்டிருந்தது. உறவுக்காரர் களில் சிலர் விசும்பிக்கொண்டிருந்தாலும் கார் டிரைவரும் அவரது



உதவியாளனும் கொழுத்த ஹேண்ட் பேக்கோடும் தலையில் ஒரு குல்லாவோடும் தெரியும் ஒருவரிடம் பீறாய்ந்து கொண்டிருந்தனர்.

பிணம் வேனுக்கு வெளியில்ஒரு ஸ்ட்ரெச்சரில் கிடக்க தலை மாட்டில் 'எனக்கு கட்டுப்படியாகாது. போட்டுக்கொடு' என்னும் பேரம்!

பேரம் நடக்கும்போது பண்டா ஒருவரும், நாவிதன் ஒருவனும் வந்து விட்டார்கள். பண்டாவும் இதைச் செய்ய அவ்வளவு, அதைச் செய்ய இவ்வளவு என்று பட்டியல் போட நாவிதன் பலகையைப் போட்டு அமர்ந்துகொண்டு கத்தியை எடுத்து தீட்டத் தொடங்கி விட்டான்.

பிணத்தின் தாடி மீசையை சிரைப்பதாக இருந்தால் ஒரு ரேட், கர்மம் செய்பவரை சிரைப்பதாக இருந்தால் அதற்கு தனியாக ஒரு ரேட் என்று அவரிடமும் பேரம் ஒரு க்ஷணம் பாஸ்கரனுக்கு திருப்பதி ஞாபகம் வந்தது. அங்கே மொட்டைபோட இலவசம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் கையில் காசை வைத்த பிறகு தான் நாவிதர் கத்தியையே எடுத்தார். அதிலும் காசுக்குத் தகுந்த மாதிரி அவர் அந்த கத்தியில் வித்தை காட்டினார். ஐம்பது ரூபாய் தந்த ஒருவருக்கு அத்தனை லாவகமாய் முடியை எடுத்து தலையில் ஒரு புதிய சூரியனையே பார்க்க முடிந்த மாதிரி செய்தார். ஐந்தும் பத்தும் தருபவர்களுக்கெல்லாம் அங்கங்கே துக்குத்துக்காய் முடி இருந்தது. கத்தியும் எக்ஸ்பிரஸ் வேகத்தில் சுழன்று தலைக்கு மேல் ஒரு கந்தக பூமி இருப்பதாக உணர்த்தியது.

இத்தனைக்கும் திருப்பதி ஒரு புண்ணிய பூமி. அங்கேயே பணத்தின் ஆதிக்கம்தான்.

'ஒருவேளை புண்ணிய பூமிகள் எல்லாமே இப்படித்தானோ?'

அவனுக்குள் கேள்வி.

'இங்கே வந்து செத்துப் போவதால் மோட்சம் கிடைக்கும் என்று நினைப்பதெல்லாம் எத்தனை முட்டாள் தனமான ஒரு எண்ணம்.'

பாஸ்கரனுக்குள் அவனது தற்கொலை நினைப்பு சற்று தள்ளிப் போய் நின்றுகொண்டது. நிச்சயமாய் இப்படிப்பட்ட காசு ஆசை பிடித்த பூமியில் வாழ்வதில் அர்த்தமேயில்லை. செத்துப் போய் விடுவதுதான் உத்தமம். அப்படி சாக வந்த இடம்கூட காசாசையின் பிடியிலேயே இருந்தால் என்னதான் செய்வது?

மெல்லிசான கங்கைக் கரைவெளி காற்று அவன் முகத்தில் அறைந்தது. சிலீரென்று இருந்தது. கங்கையிலும் சாம்பல் கரைவு கள், பிண ஓடங்கள். உடல் அழுக்கைக் கரைத்துவிடும் மனிதக் கூட்டங்கள். பனிமலை உச்சியில் இருந்து பரிசுத்தமான நீரோட்ட மாய் ஜனித்த கங்கையை இப்படி அழுக்காக்கி அசுத்தப்படுத்தி விட்டு 'கங்காமாதாகீஜே' என்று போலித்தனமாய் வணங்குவது எந்த வகையில் நியாயம்?

வந்ததில் இருந்தே பாஸ்கரனும் இன்னும் கங்கையில் கால்கூட வைக்கவில்லை.

'பளிங்கு நிறத்தில் அலை புரண்டு வரும் அந்த கங்கைக் கரைவெளியில் நிறைய சாது சந்நியாசிகள் குளித்தபடி இருப்பார் கள். பார்க்கவே மகாரம்யமாக இருக்கும். அவர்கள் கையில் சந்நியாசதண்டம் இருக்கும்.' என்று நினைத்ததெல்லாம் பொய்யாகி விட்டது.

கங்கையும் அவனைப் பார்த்து 'என்ன அழுக்காக்கி பழுது படுத்துபவனுக்கு முக்தி இல்லை. இந்த க்ஷணம் என்னில் கால் கூடக் கழுவாத ஒருவனையே நான் முழு மனிதனாகப் பார்க்கிறேன்' என்று அது சொல்வதாகக்கூட தோன்றியது.

நீச்சல் தெரியாத நிலையில் கங்கையில் இறங்கி அப்படியே மூழ்கி ஜலசமாதி ஆகி இந்த உலகவாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைத்துவிடலாம் என்றுதான் வந்தான். ஆனால்



இப்போது அந்த எண்ணம் மெல்ல மாறிக்கொண்டிருக்கிறது. இந்த பூமியில் நினைத்தபடி சாவதுகூட அத்தனை சுலபமில்லை என்பதா கவே அவனுக்குத் தோன்றுகிறது.

இந்த க்ஷணத்தில் அவனைப் படைத்த கடவுள் மேல் கோபமான கோபம் வந்தது அவனுக்கு. எவ்வளவு நேரம்தான் இப்படி நின்று கொண்டே சிந்திப்பது...? கால்கள் கடுத்து போய் ஒரு இடமாகப் பார்த்து உட்கார்ந்தான். சற்று சுகமாக இருந்தது. உடம்புக்குத்தான் சுகமாக இருந்தது. மனதென்னவோ கடவுளின் மேலான கோபத்திலேயே இருந்தது.

அவன் பிறந்த உடனேயே அவன் அம்மா இறந்துவிட்டாள். அவள் விதி முடிந்துவிட்டது. போய்விட்டாள். ஆனால் அவன்தான் அம்மாவை 'விழுங்கிவிட்டதாக' எல்லோரும் சொன்னார்கள்.

இந்த எல்லோரும் வேறு யாரோ அல்ல...

அவன் அப்பாவில் இருந்து அத்தை, அக்காள், அண்ணன், அண்ணி என்கிற நெருங்கின உறவுவீட்டார்கள்தான். வளரும் போதே இப்படி ஒரு குற்றச்சாட்டு அவன் மேல்.... அதனால் அவன்மேல் பெரிதாக பாசம் காட்ட நடுநெற்றியில் முத்தம் தந்து அன்பைப்பொழிய என்று ஒருவர்கூட இல்லாமல் போய் விட்டார்கள்.

அவனுக்கான தாய்ப்பாலைக்கூட எவளோ ஒரு செவிலிதான் தந்ததாக பின்னாளில் கேள்விப்பட்டான். அவளுக்கு கொஞ்சம் திருட்டு புத்தி இருந்ததாம். வீட்டில் வேலை பார்க்கும் சமயங்களில் அரிசி பருப்பு திருடினவளாம். அதனால் இவனுக்கும் அந்த புத்தி இருக்கும் என்று ஒரு கருத்தும் எல்லோருக்கும் உருவாகிவிட்டது.

ஆனால் உள்ளபடியே ஒரு எள்ளுருண்டையைக் கூட பாஸ்கரன் இத்தனை நாளில் திருடியதில்லை. இப்படி எல்லாம் அபிப்ராயங் கள்.

அவன் மேல் உருவாகி இருந்தாலும் பாட்டியின் அன்பு அவனுக்கு கிடைத்ததால் எப்படியோ அவர்களுக்கு நடுவில் அவனையும் ஒரு குடும்ப உறுப்பினனாக மதித்து படிக்க வைத்து ஆளாக்கியும்விட்டாள் அவள்.

அவனுக்காக அவள்தான் குடும்பத்தவருடன் சண்டை போட்டாள்.

"டேய் இவனை பாவி பாவின்னு சொல்லி நீங்க ஏண்டா பாவம் பாண்றீக? நீங்க செய்றது கொஞ்சம்கூட நல்லா இல்லடா..." என்று அவள்தான் கத்துவாள். அவள் தான் அவனை கோவிலுக்கும் அழைத்துக் கொண்டு போய் ஆஞ்சனேயரையும் பிள்ளையாரை யும் அறிமுகப்படுத்தி வைத்தாள். அப்படியே "இவங்கள நீ கெட் டியா பிடிச்சுக்கோ. உனக்கு இவங்கதான் வழிகாட்டி" என்றாள்.

அழகழகாய் முருகன், கிருஷ்ணன், ராமன், நாராயணன், வெங்க டேசன், மீனாட்சி, காமாட்சி என்று எவ்வளவோ தெய்வங்கள் இருக்க பாட்டி எதனால் பிள்ளையாரையும், ஆஞ்சனேயரையும் பிடித்துக்கொள்ளச் சொன்னாள்...? என்பது அவனுக்குப் புரியவே யில்லை.

இந்த இரண்டு சாமிகளுமே மனித ஜாதியோடு சேர்த்தி இல்லை. ஒன்றுக்கு யானை முகம்; இன்னொன்றுக்கு குரங்கு முகம்.

இந்து மதம் ஒன்றுதான் மனித பிறப்புக்கு அப்பால் மிருகங்களை யும் வணங்குவதற்கு இப்படி சில ஏற்பாடுகளை செய்து தந்திருக்கிறது.

கொத்த வரும் பாம்பிலிருந்து, பறக்கும் கருடன் வரை கும்பிட அது வழி செய்திருக்கிறது. ஆடு மாடு, குதிரை, நாய், சிங்கம், புலி என்று பல மிருகங்களும் கடவுளர்களின் வாகனங்களாகி மனிதர்களின் சிநேகத்திற்கும் வணக்கத்திற்கும் உள்ளாகிவிட்டனர்.



ஒரு பொட்டுப் பூச்சியான சிலந்திக்குகூட அந்த ஈசன் கருணை செய்திருக்கும் கதைகள்தான் நம்மிடம் நிறைய உண்டே.

ஆனால் இதை எல்லாம் உணர்ந்தும் புரிந்தும் பாஸ்கரன் பக்தி செலுத்தவில்லை. பாட்டி சொன்னாள் என்றுதான் பிள்ளையாரை யும் ஆஞ்சனேயரையும் இறுகப் பிடித்துக் கொண்டான்.

நாள் தவறாமல் அவர்கள் கோவிலுக்குப் போய் அவர்களை வணங்கத் தவறியதே கிடையாது. என்ன பிரயோஜனம்?

அவனை அவர்கள் கூட கைவிட்டு விட்டனர். ஆசை ஆசையாக படாதபாடு பட்டு வாங்கிய கடன் பணமான ஐம்பது ஆயிரமும் போய்விட்டது. எப்படிப்போனது...? யார் திருடினார்கள்...? என்பது கூட தெரியவில்லை.

வீட்டில் எல்லோரும் அதைச் செய்யாதே இதைச் செய்யாதே என்று எதிர்ப்புக் குரல் கொடுக்க அவர்களை எல்லாம் மீறிக் கொண்டு வெளியே சென்றது வரைதான் ஞாபகம் இருக்கிறது.

அதன்பின் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. யாரோ ஒருவன் "ஏங்க கே.கே.நகருக்கு எப்படி போகணும்?" என்று கேட்ட படி அருகில் வந்தான். அவனுக்கு பதில் சொன்னதுகூட ஞாபகத்தில் இல்லை.

'நான் பாஸ்கரன்' என்கிற உணர்வு ஏற்பட்டபோது தூங்கி எழுந்திருந்த மாதிரி ஒரு உணர்வு. ஆனால் கையில் வைத்திருந்த பணப் பையைக் காணவில்லை!

அந்த நிமிஷம்தான் அவன் வாழ்க்கையிலேயே இதயம் என்பதுகூட எவ்வளவு பாரமான ஒரு விஷயம் என்பதை உணர்த்திய நிமிடமாகும்.

அது இரும்பு போல பாரமாகி அவன் காது அடைபட்டுப் போகும் அளவு துடித்தது. கண்களில் கண்ணீர். யாரோ கண்ணுக்கு பின்னால் உட்கார்ந்துகொண்டு டம்ளர் டம்ளராய் தண்ணீரை

மொண்டு ஊற்றுகிறாற் போல கண்ணீரைச் சுரந்து கொட்டியது. கை கால்கள் எல்லாம் கரண்ட்டில்லாத துண்டு வயர் போல சக்தி இழந்துவிட்டன.

அதன்பின் அவன் எப்படி நடந்தான்... எப்படி நண்பன் கணேஷின் வீட்டிற்கு போனான் என்றே தெரியவில்லை.

கணேஷும் பணம் திருட்டுபோனது தெரிந்து அதிர்ந்து போய் "என்னடா பாஸ்கரா இப்படியா கேர்லெஸ்ஸா இருப்பே?" என்று கேட்டு நோகடித்துவிட்டான்.

"கணேசா... நான் கவனமில்லாம தொலைக்கலடா. எப்படி திருட்டுபோயிச்சுன்னே தெரியலடா. என்ன நம்புடா...." என்று கதறினான் பாஸ்கரனும்.

"அது எப்படிடா உனக்குத் தெரியுமா பணம் திருட்டு போகும்...?"

"அதுதாண்டா எனக்கும் தெரியலை...." என்றபோது கணேசனின் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் வந்து. "எல்லாம் சொக்குப் பொடியோட வேலையா இருக்கும்..." என்று ஆரம்பித்தார்.

"சொக்குப் பொடியா?"

"ஆமாம்.... நீங்க கேள்விப்பட்டதில்லையா...? ஒரு சிட்டிகை போதும். நம்ம மூக்குக்கு நேரா தூவுவாங்க. அப்புறமா நமக்கு நம்ம ஞாபகமே இல்லாம போயிடும். பிறகென்ன.... சுருட்டிக்கிட்டு போயிடுவாங்க..."

"என்ன சார் இது.... நாம எந்த காலத்துல இருக்கோம்... நீங்க போய் சொக்குப் பொடி கொக்குப் பொடின்னு கிட்டு...."

"எந்த காலத்துல இருந்தா என்னப்பா? அதை எல்லாம் நீ அனுபவிச்சாதான் ஒத்துக்குவே."

"அது என்ன குளோரோஃபாம் மாதிரி எதாவது கெமிக்கலா?"



"உம்... அப்படிக்கூட சொல்லலாம். எத்தனை பஸ் ஸ்டாண்டுல இந்த மாதிரி சொக்குப் பொடியால மயங்கி பெண்கள் தங்களோட கழுத்துச் சங்கிலியை இழந்திருக்காங்க தெரியுமா?"

"நம்பவே முடியலையே சார்....!"

"அதுக்கென்ன பண்ண... உன்ஃப்ரெண்டுக்கு கெட்ட நேரம்!"

"அட போங்க சார்... மனுஷங்கள்லதான் நல்லவங்க கெட்டவங்கன்னா... நேரத்துலையுமா?"

"நேரம் தான்ப்பா எல்லாத்துக்குமே காரணம்."

"இதெல்லாம் உளறல். நல்ல நடந்தா நல்லநேரம்.... கெட்டது நடந்தா கெட்டநேரமா?"

"இல்லையா பின்னே....?"

"பேத்தல் சார்... நேரம்னா பகல்நேரம் இரவு நேரம் அதுல காலை மதியம் மாலைன்னு டயத்துக்கு தகுந்த மாதிரி பொழுதுகள். அவ்வளவுதான். தேமேன்னு இருக்கற காலத்தையும் நேரத்தையும் ஏன் சார் வம்புக்கு இழுக்கறீங்க...?"

-அன்று இப்படி எல்லாம் வாக்குவாதங்கள் அவர்களுக்கு நடுவில் நடந்து முடிந்தது.

வீடு திரும்பியபோது அண்ணனும் அப்பாவும்கூட பின்னி எடுத்து விட்டார்கள்.

"உனக்கெல்லாம் எதுக்குடா உசுரு? போடா போய் எங்கையாவது விழுந்து செத்துவையுடா" - என்று அண்ணனும்.

"துப்பு கெட்டவனே... நீயெல்லாம் தொழில் செய்யலைன்னு யார் அழுதா...? நீதான் ஒரு துரதிர்ஷ்டம் பிடிச்சவங்கறது எல்லாருக்கும் தெரியுமே...!" என்று அப்பாவுமே கூட பேசக்கூடாத பேச்செல்லாம் பேசிவிட்டனர்.

இவ்வளவுக்கும் பிறகு யாரால்தான் எதிர்த்து நின்று செயல்படமுடியும்.

"இதோ பார்.... எங்கையாவது கண்காணாத இடத்துக்கு கொஞ்ச நாள் போய்டு பேங்குல இருந்து இங்கதான் தேடி வருவாங்க. கேட்டா எங்களுக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்லிட்றோம்"- என்று அண்ணிவேறு அந்த கடனுக்கான கவலையோடு பேசவும் பாஸ்கரனுக்கு உயிர் இருந்தும் இல்லாமல் போய்விட்டது.

வீட்டிலும் இடம் இல்லை. வெளியிலும் நடமாட முடியாது. எங்காவது போய் பிச்சை எடுக்கலாம்... இல்லாவிட்டால் லாட்டரி விற்பது. பீச்சில் சுண்டல், வடை விற்பது என்று எதாவது கூலித் தொழில் செய்யலாம். இதில் ஏதோ ஒருவேளை வயிற்றைக் கழுவ லாம். ஆனால் பேங்க் கடனுக்கு கழுத்தில் கத்தியை வைப்பானே...? என்ன செய்வது?

அப்பொழுதுதான் தற்கொலை நினைப்பு துளிர்விட்டது.

நன்றியே இல்லாத சுயநலம் மிகுந்த மனிதர்கள் வாழும் நாட்டில் வாழ்வதைவிட பிறப்பே வேண்டாம் என்று சாவதில் ஒரு தவறும் இல்லை என்று தோன்றியது.

இருப்பது ஒரு உயிர்.

அதுவும் ஒருமுறைதான் போகப் போகிறது.

வாழும் நாளில்தான் எல்லாவிதத்திலும் அவஸ்தை பட்டாகி விட்டது. மிக குறைந்தபட்சம் சாகும் போதாவது நிம்மதியாக நல்ல விதமாக செத்து வைத்தால் என்ன என்று தோன்றியது.

தூக்கில் தொங்கினாலும், விஷம் சாப்பிட்டாலும் உடம்பை ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கொண்டு போய் கூறு போட்டு விடுவார்கள்.

புதைப்பது எரிப்பது என்று சொந்தங்களுக்கும் செலவு வைத்தாக வேண்டும்.



எப்படிப் பார்த்தாலும் தற்கொலைக்குப் பின் உடம்பு யார் கைக்கும் கிடைக்கக்கூடாது. அதற்காக எங்கோ போய் அநாதைப் பிணமாக விழுந்தாலும் அதிலும் ஆபத்துதான்.

ஒரு அநாதைப் பிணத்தை போட்டுக்கொண்டு சிலர் காசு பண்ணியதை பாஸ்கரனும் பார்த்திருப்பதால் உடம்பே யாருக்கும் கிடைக்காதபடி தற்கொலை செய்துகொள்வது எப்படி என்று யோசித்தபோது தான் பாட்டி சொன்ன கங்கையின் ஞாபகம் வந்தது.

அதில் போய் மூழ்கி முடிந்து போனால் உடம்புச் சிக்கலும் ஒழிந்து போகும். கங்கை மீன்களுக்கும், முதலைகளுக்கும் உடம்பே பசிக்கான ஆகாரமாகிவிடும்.

ஒரு விதத்தில் அடுத்தவருக்கும் சிரமமில்லை. இன்னொரு விதத்தில் ஐதீகப்படி மோட்ச கதிக்கான சாவும்கூட!

அப்பாடா... எப்படியோ இந்த உலகைவிட்டுப் போய்ச்சேர ஒரு வழி கிடைத்துவிட்டது; என்று அவனுக்கும் சற்று நிம்மதியாகியது.

கிளம்பிவிட்டான்.

ஆனால் வந்த இடத்தில் புத்தி இப்படி கோணலாகவா திரும்ப வேண்டும்?

கங்கையும், காசியும் இப்படியா அவனை 'நாங்களும் அழுக்கு தான்' என்று யோசிக்க வைக்கவேண்டும்?

# 4

**'நான்கது ராகு, ஞாலம்**
**அறிவதில் ஞானப்பாகு!**
**தீங்கது புரிவோர்க்கு**
**தீபோல் தெரிவதிதன்வாகு.**
**இல்லறக்கூட்டிற்கு இவனேகாரகன்**

நல்லறம் புரிந்தாலே நஞ்சிடாதவன்
கற்பினை பூசிப்பார்க்கு நற்பவி இவன்
அற்பருக்கெல்லாம் கொடும்பாவி!
சூரியச் சனியோடு வீரிய இணக்கமும்
சந்திரச் செவ்வாய்க்கு சற்றே பிணக்கமும்
குரு முதல் சுக்கிர புதனார்க்கு வணக்கமும் புரிவான்!

-நவநாயக சித்தர்.

புத்தியைப் பற்றிச் சொல்லும்போது அதை ஒரு குரங்கு என்பார்கள். குரங்குதான் சதா குதிக்கும். தாவும், பாயும், பரிகசிக்கும், அபகரிக்கும்.

சரியாகத்தான் அதை மனதோடு தொடர்புபடுத்திச் சொல்லியுள்ளார்கள்.

ஒரு மனிதன் எடுக்கும் மிக மோசமான முடிவு என்பது மரணமாகத்தான் இருக்க முடியும். செத்த பிறகு என்னாவோம் என்பது யாருக்கும் தெரியாது.

ஆவியாவது, ஆன்மா கடைத்தேறுவது, சொர்க்கம் நரகம் எல்லாமே நம்பிக்கை சார்ந்தவைகள்தான். இதில் எது உண்மை என்பதை செத்தாலன்றி அறிதல் ஆகாது. அப்படிச்சாவது என்று ஒரு முடிவெடுத்த பிறகு அதில் நேர்த்தியாகச்சாவது என்று ஆசைப் பட்டதையும் அப்படி ஆசைப்பட்டபடிகூட சாகமுடியாதபடி இப்போது மனம் தடுப்பதையும் நினைத்தபோது பாஸ்கரனுக்குச் சிரிப்பாய் வந்தது.

'துரதிர்ஷ்டக்கட்டையான தனக்குள் இப்படி சாவு விஷயத்தில் கூட ஆசாபாசங்கள் இருப்பது பைத்தியக்காரத்தனமாய் தோன்றியது.

கங்கை எப்படி இருந்தாலென்ன....? அழுக்கு மனிதர்கள் வாழும் பூமியில் எதுதான் தூய்மையாக இருந்துவிட முடியும்?



சுத்தமான ஸ்படிக நீரில்தான் சாவேன் என்று ஆசைப் படுவதைப்போல ஒரு அபத்தம் இருக்க முடியுமா?

செத்த பிறகு என்னாவோம் என்பதே தெரியாத நிலையில் பாவம் போகும்.... மோட்சம் கிடைக்கும் என்பதெல்லாம் எவ்வளவு மடத்தனமான கற்பனை?

இப்படி பித்துக்குளித்தனமாக சிந்திப்பதால்தான் சாகவேண்டும் என்பதில் கூட குழப்பம் வந்து கூத்தாடிக்கொண்டிருக்கிறது.

ச்சே.... என்ன ஒரு மனது இது?

பைத்தியக்கார அபத்தக்களஞ்சியம் நான்! உயிரோடு இருக்கும் வரை இப்படித்தான் எதையாவது ஆசாபாசங்களோடு எடை போட்டுக்கொண்டே இருப்பேன். செத்தால்தான் இதற்கெல்லாம் ஒரு முடிவு கிட்டும்.

இனியும் தாமதம் கூடாது!

-பாஸ்கரன் மனோ நினைப்புகளுக்கெல்லாம் ஒரு முடிவைக் கொடுத்தவனாய் எழுந்தான். கங்கைக்கரை ஓரமாய் நடந்தான். மீண்டும் நினைப்பு.

'மனிதர்கள் தலை தெரியாத இடமாகப் பார்த்து ஆற்றில் இறங்கிவிட வேண்டியது தான்! அதற்கு அதிகமாய் இன்னும் பத்துப் பதினைந்து நிமிடங்கள் தேவைப்படலாம்.

நல்ல ஆழமான இடமாய் பார்த்து விழுந்துவிட வேண்டும்.

அதன்பின்... அதன்பின்... அதன்பின் என்ன ஆனால் என்ன? நிச்சயம் அதன்பின் பிறக்கும் போதே தாயின் உயிரைக் குடித்த பாஸ்கரன் என்று ஒருவன் இல்லை. அவன் முடிந்து போய் விட்டான்.

வாழும்போது தான் அவன் ஒரு துரதிர்ஷ்டப் பிறவி. செத்த பிறகு சில மீன்களுக்காவது அவன் சாப்பாடாகப் பயன்படுவான்.

36848
632946

அதுபோதும்...

'அழுக்கு கங்கையே இதோ வந்துவிட்டேன்' என்று நினைவின்படியே நடந்தான்.

மேஜை முழுக்க டெஸ்ட் பேப்பர்கள்! அதில் எக்ஸ்ரே படங்களும், ஸ்கேன் ரிப்போர்ட்டுகளும் பிரதானமாக இருந்தன. டாக்டர் ராமச்சந்திரனும் தன் கோல்ட்ஸ் பெக்ஸ் கண்ணாடி வழியாக கூர்மையாகப் பார்த்துவிட்டு சற்றே முகம் சுளித்தார். பின் கனிசமான பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

எதிரில் தமிழ்ப் பேராசிரியர் சாமிநாதன்.

"மன்னிச்சுக்குங்கோ சாமிநாதன்.... இந்த ரிசல்ட் பேப்பர்ஸோட நீங்க என்னைப் பார்க்க வந்திருக்கவே வேண்டாம்."

"ஏன் டாக்டர்?"

"டாக்டர் குரியன் சொன்னது அவ்வளவு ரொம்ப சரி. இது ஒரு பெக்கூலியர் டிசீஸ். பத்தாயிரத்துல ஒருத்தர்க்கு வரும். இங்கிலீஷ்ல இந்த டிசீஸோட பேரைச் சொன்னா உங்களால திருப்பிக்கூட சொல்ல முடியாது..."

"அதெல்லாம் எதுக்கு.... கனகம் பொழைப்பாளா, வழி இருக்கா...? அது தெரிஞ்சா போதும்."

"வெரிசாரி... நூத்துக்கு நூத்துப் பத்து சதம் நோசான்ஸ். இன்னும் ஒரு மாசம்... அதுகூட அதிகம். உங்க மனைவியை இந்த நிமிஷத்துல இருந்து எவ்வளவு சந்தோஷமா வெச்சுக்க முடியுமோ அவ்வளவு சந்தோஷமா வெச்சுக்குங்க. அவங்களுக்கு இந்த ரிசல்ட் பத்தி ஏதாவது தெரியுமா?"

"தெரியாது டாக்டர்."



"வேண்டாம். தெரியவேண்டாம். தெரிஞ்சா அவங்க தெரிஞ்ச நிமிஷமே செத்துட வாய்ப்பு அதிகம். ஒரு பத்து நாளாவது அவங்க நிம்மதியா சந்தோஷமா இருந்துட்டு போகட்டுமே....!"

"இதுதான் முடிவான பதிலா...?"

"மெடிக்கல் சயின்ஸ் சொல்ற சத்தியமான நிஜம் இதுதான்."

"ஒருத்தர்கூடவா தப்பிப் பிழைச்சதில்ல..."

"ரத்தத்துல ஒரே ஒரு செல் நல்ல விதமா இருந்தாலும் அதைப் பிடிச்சு வளர்த்து ஒண்ணை பத்தாக்கி, பத்தை நூறு ஆயிரமாக்கி நோயைக் குறுக்கி குணப்படுத்திடுவோமே.... இன்ஃபாக்ட் மூளையை மாத்தி இதயத்தை மாத்தி, நுரையீரலை மாத்தி, கண்ணை மாத்தி... எந்த சாதனையைத்தான் மெடிக்கல் சயின்ஸ் சாதிக்கலை? வழியிருந்தா விடுவோமா...?"

-டாக்டர் ராமச்சந்திரனின் ஒளிவு மறைவே இல்லாத விளக்கம் பேராசிரியர் சாமிநாதனை கலங்கவைத்தாலும் சுதாரித்தபடி "தேங்க்யூ டாக்டர்..." என்று எழுந்தார்.

"பை த பை.... அவங்களுக்கு ஒண்ணுமில்லைன்னு சொல்லுங்க ஒரு மாசம் கழிச்சு ஆபரேஷன் ஒண்ணு பண்ணினா பரிபூரணம குணமாகும்னு சொல்லுங்க. அதுக்கு தகுந்த மாதிரி ஒரு டூப்ளிகேட் ரிப்போர்ட்டை நான் ப்ரிபேர் பண்ணித்தரேன். அதை அவங்களும் பார்க்கட்டும். அப்பதான் மனோ தைரியத்தோட அவங்க பத்து நாளாவது நல்லவிதமா இருப்பாங்க."

"தேங்க்யூ டாக்டர்...."

-சாமிநாதன் நன்றி சொல்ல டாக்டர் ராமச்சந்திரனும் டூப்ளிகேட் ரிப்போர்ட் ஒன்றைத் தயார் செய்து ஒரு கவரில் போட்டுத்தந்தார்.

அதை வாங்கும்போது சாமிநாதனுக்கு இதயம் கனத்தது.

"வெரி சாரி... எல்லாம் காலத்தோட விளையாட்டு நாம என்ன பண்ண முடியும்?" என்று ஆறுதலாக தட்டிக் கொடுத்தார்.

அறையை விட்டு வெளியே வந்த சாமிநாதனை அவரது நண்பர் சுப்ரமணியன் நம்பிக்கையோடு பார்த்து கேட்டார்.

"என்ன சொன்னார் இந்த டாக்டர்...? பிழைக்க வழி இருக்காமா?"

"ப்ச்ச்ச்..."

"அப்ப டாக்டர் சூரியன் சொன்னதுதான் சரியா?"

"ஆமாம் சுப்பு..."

"மைகாட்... இவர் நம்பிக்கை தருவார்னு நினைச்சது வீண்போச்சே..."

"பரவால்ல. தப்பான நம்பிக்கையை தராம கனகத்தை பத்து பதினைஞ்சு நாளைக்காவது சந்தோஷமா வெச்சுக்கச் சொல்லியிருக்காரே. அந்த மட்டுல சந்தோஷப்பட்டுக்க வேண்டியதுதான்..."

"அப்ப பத்து பதினைஞ்சு நாள்தான் கனகம் உயிரோடு இருப்பாளாமா?"

"ஆமாம் சுப்பு... இனிமே கவலைப்படறதுல அர்த்தமில்ல. அவர் சொல்ற மாதிரி நடந்துப்போம். அதுதான் எனக்கும் சரியாப்படுது. நீயும் கனகத்தைப் பார்த்தா, நீ பொழைச்சிப்பே. ஒரு ஆபத்தும் இல்லை'ன்னு சொல். இந்த டூப்ளிகேட் ரிப்போர்ட்டும் அதுதான் சொல்லுது. என்ன?"

-சாமிநாதன் கேட்க சுப்ரமணியன் புருவத்தில் ஒரு அரிவாள் வளைசல்.,

"என்ன சுப்பு யோசிக்கறே?"



"இல்ல.... எனக்குத் தெரிஞ்சு ஒரு அஸ்ட்ராலஜர் இருக்கார். அவரைப்பத்தித்தான் யோசிக்கறேன்."

"வேண்டாம்ப்பா... இந்த ஜாதகம் ஜோசியம்னு எதையும் இப்ப பேசாதே. இதெல்லாமே புளுகு மூட்டைங்க. கனகத்துக்கு இதுல எல்லாம் நம்பிக்கை உண்டு. ஆனா எனக்கு சுத்தமா கிடையாது.

அதோட இப்ப போய் எந்த அஸ்ட்ராலஜரைப் பார்த்து என்ன பிரயோஜனம்?"

"நீ அவசரப்பட்டுறே சாமிநாதா... நான் அஸ்ட்ராலஜர்னுதான் சொன்னேன். ஆனா எப்படிப்பட்டவர்னு சொல்லலை."

"அஸ்ட்ராலஜர்னாலே போதுமே... அவர் பேண்ட் போட்டிருந்தா என்ன, இல்ல குடுமிவெச்சிருந்தா எனக்கென்ன...?"

"தப்பு.... நான் சொல்ல வந்ததையே நீ சரியா புரிஞ்சுக்கல அஸ்ட்ராலஜர் ஆதிகேசவன்கறவர் ஒரு ஆராய்ச்சியாளர். குறிப்பா இந்த மாதிரி மரணம் ஊர்ஜிதமாயிட்ட கேஸ்களையா தேடிப் பிடிச்சு ஜாதகத்துல அதுக்கு இண்டிகேஷன் இருக்கான்னு செக் பண்றவர். ஜோதிட சாஸ்த்திரத்தை அவர் விஞ்ஞான முறைல அணுகறார்."

"சரி இப்ப என்ன பண்ணச் சொல்றே?"

"ஒரு பரிசோதனை முயற்சியா அவர் என்ன சொல்றார்னு பார்ப்போம்...."

"அ'யம் சாரி.... நான் வரலை. எனக்கு இனி ஒவ்வொரு நொடியும் என் கனகத்தோடதான் கழியணும். நாப்பது வருஷம் அவளோட வாழ்ந்துட்டேன். நூறு வருஷம் வாழப்போறேன்னு நினைச்சேன். ஆனா இன்னும் பத்து நாளோ பதினைஞ்சு நாளோன்னு காலம் சொல்லும்போது அதை ஜோசியம் பார்த்தும் ஊர்க்கதை பேசியும் கழிக்க விரும்பலை. நீ வேணும்னா போய்ப்பார்..."

"அதுவும் சரிதான். கனகம் ஜாதகம் இருக்கா..."

"பிறந்த தேதி நேரம் சொன்னாதான் கம்ப்யூட்டரே தடதடன்னு பிரிண்ட் போட்டுக் கொடுத்துடுதே. நான் எதுக்கு?"

"அந்த நேரத்தையும் தேதியையும் நீ சொல்ல வேண்டாமா?"

-சாமிநாதனும் அதைக் கேட்டு அரை மனதாகச் சொன்னார். சுப்ரமணியனும் குறித்துக்கொண்டு தோளைத் தட்டிக் கொடுத்து விட்டு நகர்ந்தார்.

டேபிள் மேல் நூறு வருஷத்து பஞ்சாங்கம்!

பக்கமாய் கண்ணாடிச் சட்டம் பொருத்திய மரபீரோ.... அதில் கட்டுக்கட்டாய் பனை ஓலைச் சுவடிகள்.

அப்புறமாய் பழுப்பேறிவிட்ட அந்தக் காலத்தில புத்தகங்கள். காலப்ரகாஸிகா, ஜாதகரத்னா, நவரத்தின சாராவளி, சூரிய குடும்பம், நவக்கிரக மாளிகை, ரத்னோபாயம் என்று அவைகளுக் கும் விதவிதமாய்ப் பெயர்கள், சமஸ்கிருதம், க்ரந்தம், ஹிந்தி, வங்காளம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்று எல்லா மொழியிலும் கால நேரங்கள் பற்றி கடந்த கால மனிதக்கூட்டம் நிகழ்த்திய கண்டுபிடிப்புகள்... ஆராய்ச்சிகள்!

டாக்டர் ஆதிகேசவன் அவ்வளவையும் எங்கேதான் கண்டு பிடித்தாரோ....? இல்லை எப்படித்தான் கண்டு பிடித்தாரோ?

அவ்வளவையும் அள்ளிப்போட்டுக்கொண்டு எதையோ எழுதிக்கொண்டிருந்தார் டாக்டர் ஆதிகேசவன். உள்ளே நுழைந்த சுப்ரமணியத்தைப் பார்த்தவர் முகத்தில் ஒரு மெல்லிசான புன்னகை.

"வாங்க சுப்பிரமணியன்!"

"என்ன டாக்டர் ஆராய்ச்சியெல்லாம் பலமா இருக்குதே!"

"ஆமாம்.... உக்காருங்க எங்க இவ்வளவு தூரம்?"



"உங்க ஆராய்ச்சி பத்திதான் தெரியுமே. அதான் உங்களுக்கு ஒரு உதவி செய்யலாம்னு வந்திருக்கேன்."

"ரொம்ப சந்தோஷம். எனக்கு எப்படி உதவி பண்ணப் போறீங்க...? சொல்லுங்களேன் பார்ப்போம்."

"முதல்ல இந்த ஜாதகத்தைப் பிடியுங்க." சுப்ரமணியன் கனகத்தின் ஜாதகத்தை ஆதிகேசவன் எதிரில் நீட்டினார்.

"என்ன... இதைப் பார்த்து நான் எதாவது தெரிஞ்சுக்கணுமா?"

"ஆமாம்..... இந்த ஜாதகத்துக்குரிய பெண்ணுக்கு அதிகபட்சம் ஒரு மாசம்தான் ஆயுள்னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க. இண்டி கேஷன் இருந்தா உங்க ஆராய்ச்சிக்கு அது உதவிதானே?"

"ஓ! கொடுங்க... கொடுங்க..." ஆதிகேசவன் ஆர்வமாய் வாங்கிக்கொண்டார். மேலோட்டமாய் ஒரு பார்வை.

"இது என் நண்பரோட மனைவி ஜாதகம்!"

"அப்படியா...?"

"ஆமாம்... நான்தான் உங்க ஞாபகம் வந்து வாங்கிக்கிட்டு வந்திருக்கேன்."

"ரொம்ப நன்றி... ஏன் உங்க நண்பர் வரலை?"

"இதுல அவருக்கு ஒரு பர்சண்ட் கூட நம்பிக்கை இல்லே, அதோட அவங்க சாகப்போறது தெரிஞ்சு நீங்களும் ஆமாம்னு ரொம்ப சுலபமா விடையை சொல்லிடுவீங்கற எண்ணம்."

-சுப்ரமணியன் பேச்சு ஆதிகேசவனை நெற்றி சுருங்க வைத்தது.

"இந்த ஜாதகத்தை இப்பவே பாத்து உங்களால எதாவது சொல்ல முடியுமா?"

"யூ மீன்... நீங்க கேக்கறத பார்த்தா உங்களுக்கு நான் வேற மாதிரி நல்ல பதில் சொல்வேன்னு ஒரு நப்பாசை இருக்கற மாதிரி தெரியுதே...."

"ஆமாம்... நப்பாசைதான். எனக்கும் இந்த ஜாதகம் ஜோசியத்துல எல்லாம் நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் ஒரு நப்பாசை. நீங்க விதி விலக்கா எதாவது சொல்லி, அது நடந்துட்டா... நினைச்சுப் பார்க்கவே எவ்வளவு நல்லா இருக்கு தெரியுமா?"

"தன்னை ஒரு திடமான நாத்திகன்னு சொல்லிக்கறவங்களுக்கு கூட இந்த மாதிரி எதிர்பார்ப்பு உண்டு. அதுதான் மனசோட இயல்பு."

"நீங்க எப்படி....? இந்த ஜோதிட சாஸ்திரம்கறது உண்மையான சமாச்சாரமா... இல்லை கப்ஸா புளுகா?"

"என்னோட ஆரம்பமே ரொம்ப பெக்கூலியர். இதெல்லாம் பொய்யுன்னு நிரூபிக்கறேன்னு தான் நான் இதுல இறங்கினேன். ஆனா நான் இப்ப கொஞ்சம் மாறிட்டேன்னு தான் சொல்லணும்."

"அப்படியா?"

"ஆமாம். ஒரு தூக்கு தண்டனை கைதியோட ஜாதகத்தை ஜாதக சாஸ்த்திரப்படி ஆராய்ச்சி செய்தேன். அவனுக்கு ஆயுள் நிறையவே இருந்தது. இன்ஃபாக்ட் தூக்குல போடறதுக்கு முதல் நாள் மிராகிளா அவன் விடுதலை ஆயிட்டான். விடுதலை ஆவான்னு ஜாதகம் இண்டிகேட் பண்ணிச்சு. அப்படித்தான் நடந்தது."

"ஏன் காக்கா உக்கார பனம் பழம் விழுந்த கதையா இப்படி நடந்திருக்கக் கூடாது?"

"இந்த காக்கா பனம் பழம் கேசெல்லாம் ஒரு தடவைதான் நடக்கும். ஆனா இதுவரை 12 கேஸ்ல என் கணிப்புப்படியே



நடந்திருக்கும் போது என்னால எப்படி அவைகளை தற்செயல் நிகழ்வுகளா எடுத்துக்க முடியும்?"

"அப்ப ஜாதக சாஸ்திரம் ஒரு உண்மை?"

"நிச்சயமாகவும், சத்தியமாவும் அப்படித்தான் சொல்வேன். அதே சமயம் என் உள் மனசோட ஆசை என்ன தெரியுமா?"

"என்ன?"

"ஒவ்வொரு ஜாதகத்தை ஆராய்ச்சிக்கு எடுக்கும் போதும் ஜாதக சாஸ்த்திரம் பொய்யாயிடணும்னு ஆசைப்பட்டேன்."

"விசித்திரமா இருக்குதே உங்க ஆசை?"

"இருக்கலாம். நம்ம வாழ்க்கையை நம்மால தீர்மானிக்க முடியலையே? கடுமையா உழைக்கற சிலரால முன்னுக்கு வரவே முடியறதில்ல.... உக்காந்த இடத்துல சிலர் லட்ச லட்சமா சம்பாதிக்கறாங்க. ரொம்ப நல்லவன் அநியாயமா ஒரு விபத்துல செத்துப் போறான். ரொம்ப மோசமானவன் தூக்கு தண்டனைல இருந்து கூட பணத்தால தப்பிச்சுட்றான்... நல்லது செஞ்சா நல்லது நடக்கும்னு சொல்றோம். ஆனா பலர் வாழ்க்கைல அவங்க எவ்வளவு நல்லது செய்தாலும் நல்லது நடக்கறதே இல்லை. இந்த குளறுபடியான நிலைப்பாடுகளுக்கு எது காரணம்? ஒன்பது கிரகங்கள்னு ஜோதிட சாஸ்த்திரம் சொல்லுது. இவங்க ஏன் நம்மேல ஆதிக்கம் செலுத்தறாங்க? இவங்களுக்கு வேற வேலை இல்லையா...? இவங்களை நம்மால வெல்ல முடியாதா?

அந்த வழி தெரிஞ்சா எவ்வளவு நல்லா இருக்கும்...? ஒருவேளை இந்த ஒன்பது கிரகங்கள் இதோட ஆதிக்கம் எல்லாமே நம்ம கற்பனைன்னும் முடிவு செய்தாலும் வாழ்க்கைல நடக்கற நடப்புகள் அப்படி இல்லைன்னுதான் சொல்லுது."

"அதாவது நம் வாழ்க்கை நம் கைல இல்லை. இந்த ஒன்பது பேர் கைலன்னு சொல்றீங்க. அப்படித்தானே?"

"அப்படித்தான் ஜோதிட சாஸ்திரம் சொல்லுது. அதை இப்ப ஆராய்ச்சி அடிப்படையில நானும் சொல்றேன்."

"இப்படி சொல்ற நீங்களே இதெல்லாம் பொய்யா இருக்கக் கூடாதான்னு ஆசைப்பட்றது எப்படி....? இது உண்மைன்னா உங்க ஆசை தப்பாச்சே..."

"என் ஆசை தப்பு மட்டுமா....? அது ஒரு அழகான கற்பனை.... இந்த கற்பனை உண்மையானா நல்லா இருக்குமே...! நம்ம வாழ்க்கையை நாம தீர்மானிக்கலாமேங்கறதுதான் என் விருப்பம்?"

"விசித்திரமான விருப்பம்தான். சரி..... இந்த ஜாதகம் என்ன சொல்லுதுன்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்க..."

-ஆதிகேசவனும் தற்காலிகமாய் தங்கள் உரையாடலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஜாதகத்தைக் கையில் எடுத்தார்.

கிட்டதட்ட இரண்டு மணி நேரம்!

அவரது பேனா பல கணக்குகளை ஒரு தாளில் கூட்டியும் கழித்தும் போட்டுப் பார்த்துவிட்டு, ஆச்சரியமான ஆச்சரியத்துக்கு மாறத் தொடங்கியது.

"என்ன டாக்டர்.... என்ன சொல்லுது இந்த ஜாதகம்?"

"இப்ப இந்த ஜாதகருக்கு வயது ஐம்பத்தி எட்டு. இவங்களுக்கு ஜாதக சாஸ்த்திரப்படி தொண்ணூறு வயசு அதாவது இவங்க இன்னும் 32 வருஷம் உயிரோட இருந்தாகணும்!

-ஆதிகேசவன் சொல்ல சுப்பிரமணியனுக்குதான் எதிர்பார்த்தது நடக்கப்போகின்ற மகிழ்ச்சி. துள்ளிக்கொண்டு எழுந்தார்.

"என்ன சுப்பிரமணியன்...? இது சந்தோஷ துள்ளலா இல்லை நம்பமுடியாத அதிர்ச்சித்துள்ளலா?"

"இரண்டும்தான்...! ஒரு சில சந்தேகங்கள் இருக்கு. கேட்கலாமா?"



"என்ன... டாக்டர்ஸ் ரிப்போர்ட் எப்படி பொய்யாகும்னா?"

"ஆமாம்.... எனக்குத் தெரிஞ்சு என் நண்பன் சாமிநாதன் தன் மனைவி கனகத்தை காப்பாத்த சிங்கப்பூர் டாக்டர்கள்ல இருந்து, U.S.ல எம்.ஜி.ஆருக்கு வைத்தியம் பார்த்த புரூக்ளின் ஹாஸ்பிட்டல் வரை போய்ப் பார்த்துட்டான். சுருக்கமா சொன்னா கனகம் கேஸ் இந்திய டாக்டர்கள் கைவிட்ட கேஸ் இல்லை. உலக டாக்டர்களே கைவிட்ட கேஸ். அப்படி இருக்க எப்படி அவங்க உயிர் பிழைக்க முடியும்?"

"நல்ல கேள்விதான் நீங்க கேட்டிருக்கீங்க. பொதுவுல ஒரு ஜாதகத்துல நோய்க்கு காரணமான கிரகம் எப்படி இருக்குன்னு தான் முதல்ல பார்ப்போம். அந்த வகைல இவங்களுக்கு ரோகஸ்தானம் மிகக் கடுமையா பாதிக்கப்பட்டிருக்கு. அதுவும் செவ்வாயால... ஆனா ஔஷதகாரகன் ஒரு வாரமா குரு பார்வைக்கு உள்ளாகி பலப்படத் தொடங்கியிருக்கான். ஆயுள் பாவமும் ரொம்ப சிறப்பா இருக்கு. கேது இவங்களுக்கு பிறப்புல இருந்தே ஒரு பலமான கிரகமா இருந்து வந்துருக்கு. எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சுப் பார்க்கும்போது ரோகம் வந்தாலும் அது குணமாகியே தீரும்."

"எனக்கு எதுக்கு இவ்வளவு டீடெய்ல்ஸ்....? கண்ணுக்கு தெரியற மனிதர்களையே நம்மால சரியா புரிஞ்சுக்க முடியல. அப்படியிருக்க கண்ணுக்கு தெரியாத நிலைல ஆகாயத்துல இருக்கறதா கருதப்படற இந்த கிரகங்கள் பத்தி நீங்க எவ்வளவு சொன்னாலும் எனக்கு புரியாது.

என்னோட கேள்வி இதுதான்!

இவங்களுக்கு ஆயுள் நல்லா இருக்குன்னா வியாதி குணமாகணும். வியாதி குணமாக இந்த நொடி மருந்து இல்லை. அந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்காங்க. அப்படி இருக்க எப்படி குணமாக முடியும்?

மருந்தாலையா... இல்லை தானாவே சரியாயிடுமா...? மருந்தால குணமாக வழியில்லை. ஏன்னா மருந்தே இல்லை. தானா சரியானா தான் உண்டு. தானா எப்படி ஒரு வியாதி சரியாக முடியும்?"

-சுப்பிரமணியன் சரியாகத்தான் கேட்டார். ஆதிகேசவன் பதிலுக்கு சிரித்தார்.

"சிரிச்சா எப்படி?"

"இது கேலிச் சிரிப்போ இல்லை விரக்திச் சிரிப்போ இல்லை சுப்ரமணியன். இது ஆச்சரியச் சிரிப்பு. என் அனுபவத்துல நான் புரிஞ்சுக்கிட்டதை சொல்றேன். நாம பிறக்கறதுக்கு முந்தியும் இந்த உலகம் இருந்தது. நாம இறந்த பின்பும் இது இருக்கும். இடைப்பட்ட காலத்துல நாம எங்க எப்படி பிறக்கிறோமோ அதற்கு ஏற்ப வளர்ந்து ஆளாகறோம். இந்த உடம்போட டிசைன்கூட நம்முடையது கிடையாது. மூக்கு கோணலா இருந்தாலோ, தலைல முடி முளைக் கலேன்னாலோ, குட்டையா இருந்தாலோ எதையும் சரி செய்துக்கற ஆற்றல் நமக்கு இல்லை. அமைஞ்சதை ஏத்துக்கிட்டு படிச்ச படிப்புக் கும், பாக்கற உலகத்துக்கும் ஏற்பசிந்திக்கிறோம். அந்த வகைல உங்களுக்கும் எனக்கும் ஆங்கிலமும் தமிழும் தெரியும். இதுவும் கூட நாம பிறந்த இந்த சொஸைட்டி நமக்கு கத்துக்கொடுத்ததால தான். நமக்குத் தெரிந்த இந்த மொழியோட உதவியோட பேசிக் கறோம். படிச்ச புத்தகங்கள் அளவுக்கு சிந்திக்கறோம். இது எல்லாமே ரொம்ப ரொம்ப சின்ன அளவு சுப்ரமணி.

நம்ம அறிவால சக்கரம் கண்டுபிடிச்சு தூரத்தை ஜெயிச்சோம். தராசு கண்டுபிடிச்சு பொருட்களை எடைபோட்டோம், லிட்டர் அளவுல திரவப் பொருட்களையும், மீட்டர் அளவுல துணிமணி களையும் அளந்தோம்.

எல்லாமே நம்ம சௌகர்யத்துக்காக நாம நமக்காக உருவாக்கிக்கிட்ட புத்திசாலித்தனமான விஷயங்கள்.



இந்த புத்திசாலித்தனத்தோட உச்சமா இன்னிக்கு செல்போன், டி.வி.ன்னு விரிவடைஞ்சிருக்கோம். அவ்வளவுதான் ஆனா..."

-ஆதிகேசவன் அழகாகச் சொல்லிக்கொண்டே வந்து ஆனா என்று இழுக்கவும் சுப்ரமணியனுக்கு அதற்கு பிறகுதான் ஒரு பெரிய ரகசியத்தையே அவர் சொல்லப் போகிற மாதிரி தோன்றியது.

"என்ன ஆனா...? கமான்... சீக்கிரமா சொல்லுங்க!"

"ஒண்ணுமில்ல! இதெல்லாம் எதுவுமே பெரிசே இல்லை. இதெல்லாம் ரொம்ப சின்ன விஷயங்கள்."

"அப்ப எது பெரிய விஷயம் ஆதிகேசவன்?"

"நிறைய இருக்கு நாம் நம்முடைய கண்ட்ரோல்ல இல்லாம இயக்கப்படறதே ஒரு பெரிய விஷயம்தானே?"

"நீங்க ஆன்மிகம் பேசாதீங்க. நம்பிக்கை சார்ந்த விஷயங்களைச் சொல்லி என்னைக் கட்டிப்போடவும் முயற்சிக்காதீங்க. என் கேள்வி 'மருந்தே இல்லாத ஒரு வியாதி எப்படி குணமாகும்?' அதுதான்!"

"உங்ககிட்ட அதாவது இந்த உலகத்துல நீங்க சந்திச்ச டாக்டர் களுக்கு அந்த மருந்து வசப்படாம இருக்கலாம். ஆனா மருந்து இருக்கு."

"அப்ப அந்த மருந்து என்னதுன்னு இனிமே தெரியவருமா?"

"ஜாதகம் அப்படித்தான் சொல்லுது."

"ரொம்ப ஆச்சரியமான ஒரு பதில் இது. புதுச புதுசா மருந்து களை விஞ்ஞானிகள் கண்டுபிடிச்சுக்கிட்டுதான் இருக்காங்க. ஆனா கனகம் சாகறதுக்கு கெடு விதிச்சிருக்கற பத்து பதினைஞ்சு நாள்ல அது கண்டு பிடிக்கப்பட்டு அதை கனகத்துக்கும் தந்து அவங்களை குணப்படுத்த முடியும்கறது எனக்கென்னவோ துளிகூட நடக்கக் கூடிய ஒரு விஷயமாவே தெரியல."

"அப்ப எது உங்களுக்கு நடக்கக்கூடிய விஷயம்?"

"கனகம் விஷயத்துல மனித சக்திக்கு உட்பட்ட எல்லாம் முடிஞ்சு போச்சு. கற்பனைல நாம சொல்ற மாயா ஜாலத்தாலையோ, இல்லை கடவுளே நேர்ல வந்து எதாவது செய்தோதான் கனகம் பிழைக்க முடியும்.

நடக்கக்கூடியது அதுதான்..."

"இப்படித்தான் நீங்க சொல்வீங்க சுப்ரமணி. திரும்பவும் சொல்றேன். நாம பாக்கற, நாம கேள்விப்பட்ற, நமக்குத் தெரிஞ்ச, நமக்கு புரிஞ்ச விஷயங்களை மட்டுமே வெச்சுக்கிட்டு யோசிக்கறதும், அதற்கேற்ப முடிவுகள் எடுக்கறதுமே நமக்கு வழக்கமா போச்சு. நம்ம ஐம்புலனுக்கு வசப்படாத, நம்மால யோசிக்க முடியாத அளவுக்கான விஷயங்களும் இந்த உலகத்துல இருக்கு. அதுல சில விஷயங்கள் நம்ம உடம்புக்குள்ளயும் இருக்கு. அந்த விஷயங்கள்லதான் இதுக்கு விடை இருக்கு."

"நம்ம உடம்புல அப்படி என்ன இருக்கு?"

"உடம்புல ரத்தம் இருக்கு, எலும்பு இருக்கு, சதை இருக்கு, நரம்பு இருக்கு. இதயம், ஈரல், குடல்னு உறுப்புகள் இருக்குன்னு உங்களுக்கு தெரிஞ்ச விஷயங்களைச் சொல்லலை. இதைக் கடந்த பல விஷயங்கள் உடம்புல இருக்கு."

"இருக்குன்னு சொல்லத் தெரியுது... எது என்னன்னு சொல்லத் தெரியலையா?"

"இப்படி ஒரு கேள்வியைத்தான் நான் இன்னொருத்தர்கிட்ட கேட்டேன். அவர் சொன்னதையே உங்களுக்கும் சொல்றேன்.

ஆப்பிள் மரத்துல இருந்து கீழே விழுந்ததுலதானே புவி ஈர்ப்பு விசை பத்தி நாம தெரிஞ்சுக்க முடிஞ்சது?"

"நிச்சயமா...?"



"அதோட பொருள் என்ன?"

"இந்த உலகத்துல எதை மேல எறிஞ்சாலும் அது விசை தத்துவப்படி, எறிகிற வேகத்துக்கு ஏற்ப கீழே விழுந்தே தீரும்."

"பாரமான ஒண்ணு அப்ப பூமியில மிதக்க முடியாது. அப்படித்தானே?"

"நிச்சயமா... அதுக்காக விமானம் ஏன் விழலைன்னு கேட்காதீங்க. அது விசையை எதிர்த்து செயல்பட்டு தற்காலிகமா மிதக்குது. அதுக்கு பின்னால விஞ்ஞானம் இருக்கு. சரியான காரண காரியம் இருக்கு."

"நான் அந்த மாதிரியெல்லாம் கேட்க மாட்டேன். கவலைப்படாதீங்க. உங்களால மிதக்க முடியும்னு நான் சொன்னா நம்புவீங்களா?"

"க்ளைடர்ங்கற கருவி மூலமா பறக்க முடியும். அது எப்படி மிதக்க முடியும்?"

"முடியும்... இதை என்கிட்ட சொன்ன மனிதரே செய்தும் காட்டினார்."

"இது என்ன மாயாஜாலம்?"

"ஒரு விஷயத்தை புரிஞ்சுக்கிட்டா விஞ்ஞானம். புரிஞ்சுக்க முடியலைன்னா அது மாயாஜாலம்னு பேசக்கூடாது. இப்பவும் சீனாவுல பல புத்த விகாரங்கள்ல பல புத்தசந்நியாசிகள் ஒரு வித யோகாசனத்துல உட்கார்ந்த நிலையில் அப்படியே அந்தரத்துல எழும்பி எந்த ஆதாரமும், பிடிமானமும் இல்லாம மிதக்கறாங்க. பல விஞ்ஞானிகளே இதைப் பார்த்து வாயைப் பிளந்துருக்காங்க."

"அப்ப இந்த சாகஸத்தை என்னன்னு சொல்றாங்க?"

"ஒரே வார்த்தைதான். யோகம்! யோகத்துக்குள்ள நாம உடம்பை புகுத்தும்போது என்னென்னவோ நடக்குது. குறிப்பா எதுவுமே

சாப்பிடாம காற்றை மட்டுமே சுவாசிச்சுக்கிட்டு ஜீவிக்க முடியறதுல இருந்து நெடுந்தூரத்துல இருக்கிறவங்களோட எந்த சாட்லைட் தொடர்பும் இன்றிப் பேச முடியறது வரை..."

"அப்ப அப்படித்தான் கனகத்துக்கும் எதாவது நடந்து அவங்க பிழைக்கப் போறாங்களா?"

"இப்படி எதுவேணும்னாலும் நடந்து அவங்க பிழைக்கலாம்."

-ஆதிகேசவன் அழுத்தமாய் சொல்லி முடித்தார்.

"ரொம்ப சந்தோஷம்... வாழ்க்கையை புரிஞ்சுக்க கிடைச்ச ஒரு வாய்ப்பா நான் இந்த சம்பவத்தை எடுத்துக்கப் போறேன். என் நண்பர் சாமிநாதனும் இதைக் கேட்டா ரொம்பவும் சந்தோஷப் படுவார்."

"நல்லது... என் ஆராய்ச்சிக்கு இவங்க விஷயமும் ஒரு விதத்துல உதவி செய்யும். செய்யட்டும்."

-ஆதிகேசவன் சொன்ன கையோடு கைகளைக் கூப்பினார். பதிலுக்கு சுப்பிரமணியமும் கைகளைக் கூப்பி நமஸ்கரித்துவிட்டு கிளம்பினார்.

# 5

**பஞ்சமம் இது நவத்தின் மையம்!**
**விண்ணுலகில் கிரகமாகிய புதம்.**
**மையமே விசாலம்! அறிவதன் சாரம்.**
**இயங்கி இயக்கும் இது ஓர் கணித வலி.**
**இசைந்ததில் பிறப்பவர் கணிப்பிலே புலி.**
**பஞ்சமம் உற்றவர் பல்கலை நற்றவர்.**



**முற்கருமம் தாக்கிடினும், பரிகாரம் புரிந்தே**
**நற்கருமம் விளைத்திடுவர்!**

**-நவநாயக சித்தர்.**

கண் திறந்து பார்த்த பாஸ்கரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தான் ஒரு படுக்கையில் கிடப்பதும், கிடக்குமிடம் ஒரு ஓலைக் குடிசையாக இருப்பதையும் உணர்ந்து மலங்க மலங்க விழித்தபடி எழுந்து அமர்ந்தான்.

குடிசைக்கு வெளியே பசுமாடு ஒன்று கத்தும் குரல் கேட்டு எழுந்து வந்து பார்த்தான்.

அந்தக் கால தியாகராஜ பாகவதர் போல கிராப்புத் தலையுள்ள ஒருவர் இடுப்பிலே வேட்டியுடனும் மார்பின் மேல் போர்த்திய துண்டுடனும் பால் கறந்துகொண்டிருந்தார்.

அவரை நெருங்கிய பாஸ்கரனை அவரும் ஆர்வத்துடன் பார்த்தார்.

"என்ன தம்பி... தூங்கி எழுந்திருச்சிட்டியா?" -அதிசயமாக தமிழும் பேசினார்.

"நீங்க யார்... நான் எப்படி இங்க?"

"எமனுக்கு உன்னை கூட்டிக்கிட்டு போக இஷ்டம் இல்லப்பா. அதான் கரையோரமா கங்கை உன்னை ஒதுக்கிடிச்சு. உனக்கு உதவி செய்யற கணக்கு எனக்கு இருக்கு போல... அதான் கங்கைக்கு குளிக்கப் போன நான் உன்னைப் பார்த்தேன். தூக்கிட்டு வந்து என் குடிசைல படுக்க வெச்சு நீ அளவுக்கதிகமாக குடிச்சு வெச்ச தண்ணியை வெளிய எடுத்து உன்னை படுக்க வெச்சேன். இப்ப நீயும் எழுந்து வந்து என்கூட பேசிக்கிட்டிருக்கே!"

-அவர் அவன் அதிகம் கேள்விகள் கேட்க இடமில்லாதபடி மளமளவென்று சொல்லி முடித்தார். பாஸ்கரன் அவரை தொடர்ந்து வெறித்தான். பின் தலையைக் கோதியபடி சுற்றிலும் பார்த்தான்.

ஓரளவு பசுமையான தோட்டச் சூழ்நிலை. மூங்கில் படப்பில் வேலி. அந்த வேலிமேல் ஊதா நிறத்தில் பூக்கள் பூத்த கொடிகள்.

கொடிக்கு அந்தப் பக்கம் சற்றே வெட்டவெளி. வெளிக்கும் அப்பால் கங்கையின் ஓட்டம். அவன் வெறுப்போடு கங்கையைப் பார்த்தான்.

"என்னப்பா... சாக முடியலையேன்னு வருத்தமா இருக்கா?" -அவன்தான். கை நிறைய கறந்த பாலுடன் நின்றபடி மிக ஏளனமான குரலோடு கேட்டார். அவனிடம் பதிலில்லை. ஆனால் அவரோ தொடர்ந்தார்.

"என்பேர் ஞானப் பிரகாசம். திருநெல்வேலிக்காரன் நான். கிட்டத்தட்ட உன் மாதிரி தான். வாழ்க்கை வெறுத்துப் போய் இந்த காசிக்கு வந்தேன். சாகவும் ஆசைப்பட்டேன். ஆனா நான் கொஞ்சம் புண்ணியமும் செய்திருக்கிறதால நவநாயகச் சித்தர்ங்கற பேர்ல ஒருத்தரை சந்திக்கும்படியா அமைஞ்சது. அவர் என் வாழ்க்கையையே மாத்திட்டார். இப்ப நான் இந்த கங்கைக் கரையில ஒரு வித்தியாசமான சந்நியாசி. எனக்கு எந்தக் கவலையும் கிடையாது. பழசையெல்லாம் நினைச்சா மட்டும் அப்பப்ப சிரிப்பா வரும்."

-அவன் கேட்காமலே அவர் தொடர்ந்துகொண்டே போனார்.

"நான் தற்கொலை செய்துக்கத்தான் கங்கைல இறங்கினேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?" -அவனும் அவரைக் கிளறத் தொடங்க மீண்டும் அவரிடம் சிரிப்பு. பால் சொம்புடன் உள்ளே சென்றவர் திரும்பி வரும்போது பாஸ்கரனின் ஜோல்னா பையுடன் வந்தார். கையில் அவனது டைரி. கங்கையில் மூழ்கியும் பாலிதீன் தாளில் இருந்ததால் நனைந்து அழிந்துவிடாதபடி இருந்த டைரியில் அவனது புலம்பல்கள்! அவனுக்கும் புரிந்துவிட்டது.

"என் டைரியைப் படிச்சீங்களா?"



"ஆமாம் தம்பி. உன்னை தெரிஞ்சுக்க எனக்கு வேற வழி ஏது?"

"தப்பில்லையா?"

"தற்கொலைகூட தப்புதான். அத நீ செய்யலாம். நான் டைரி தான் படிக்கக்கூடாதா?"

"சரி... அத கொடுங்க..." -அவன் கையை நீட்டினான். அவரும் டைரியைத் தந்தார். மௌனமாக ஜோல்னா பையையும் வாங்கிக் கொண்டு அங்கிருந்து புறப்படத் தொடங்கினான்.

"எங்க... திரும்ப சாகப் போறியா?" -அவர்தான். அவன் திரும்பிப் பார்த்தான். பதில் சொல்லாமல் நடந்தான்.

"உன்னால சாக முடியாது. எவ்வளவு முயற்சி செய்தாலும் உன் உயிர் போகாது."

-அதைக் கேட்ட அவன் திரும்பி வந்தான்.

"நீங்க யார் இதைச் சொல்ல...?" -இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்.

"உன்னைப் போல ஒரு சக மனுஷன்..."

"அவ்வளவுதானே... அந்த ஆண்டவனில்லையே?"

"அப்ப ஆண்டவன் சொன்னாதான் நம்புவியா?"

"ஆண்டவனே சொன்னாலும் நான் கேட்க மாட்டேன். நான் ஒரு துரதிர்ஷ்டம் பிடிச்சவன்... அதான் சாக முயற்சி செஞ்சா அதுகூட பலிக்கமாட்டேன்னுடிச்சு. ஆனா நான் விட்றதா இல்ல."

"நெருப்புலையே போய் விழு. நீ விழற நேரம் மழை பெஞ்சு அந்த நெருப்பு அணைஞ்சு போயிடும்."

-ஞானப்பிரகாசம் என்னும் அந்த மனிதர் சொன்னது நறுக்கென்று ஒரு ஊசிபோல் குத்திற்று. அப்படியே அழுகையும் பொங்கியபடி வந்தது.

"அழறவனுக்குப் பேர் என்ன தெரியுமா?"

"தெரியும். கையாலாகாதவன், கோழை, பூஞ்சை மனசுக்காரன், இன்னும் என்னென்னமோ... என்ன வேணும்னா சொல்லிக்கோ. யார் எது சொன்னாலும் எனக்கு கவலையில்லை."

"எதுக்கு இவ்வளவு விரக்தி. அப்படி ஏன் வாழ்க்கை மேல வெறுப்பு?"

"இதுக்கு என்னால பதில் சொல்ல முடியாது. அந்த கடவுள்தான் பதில் சொல்லணும்."

"உனக்காக நான் சாப்ட்டா உன் பசி ஆறிடுமா... என்னப்பா பதில் இது?"

"போதும்... என்னை எதுவும் கேக்காதீங்க. சுருக்கமா சொல்றேன். நான் ஒரு துரதிர்ஷ்டம் பிடிச்சவன். எனக்கு யாராவது உதவி செய்ய ஆசைப்பட்டா அவங்களுக்குகூட கஷ்டம் வந்துடுது. நான் சித்திரவதை அனுபவிக்கணும்கறது அந்த கடவுளோட விருப்பம். ஆனா நான் இந்த விஷயத்துல அந்த கடவுளை சும்மா விட்றதா இல்லை. என்கிட்ட அவர் தோற்கத்தான் போறார்."

"பரவால்ல... உன்னைப் போல விரக்தியடைஞ்சவங்க இரண்டு விதமாத்தான் நடந்துக்குவாங்க. ஒண்ணு இந்த சமுதாயத்தையே பழி வாங்கறேன்னு சமூக விரோதியா கொலையும், கொள்ளையும் செய்யற ஒரு மனிதனா மாறிப் போவாங்க. இல்லேன்னா 'கடவுளே கிடையாது. எல்லாம் கற்பனை'ன்னு கடவுளைத் திட்டுவாங்க. நீ இந்த இரண்டு ரகத்துலையும் சேராம கடவுளை நம்பிப் பேசறே அதுக்காக உன்னை பாராட்டறேன்."

"போதும்... நான் கிளம்பறேன்."

"நில்லு. உனக்கு என்ன பிரச்சினைன்னு சொல்லு. நான் உதவி செய்யறேன்."



"எனக்கு யாராலையும் உதவ முடியாது. தெரியாத்தனமா ஒரு பேங்க் மேனேஜர் உதவி செய்தார். ஆனா இப்ப அவர் அதுக்காக வருத்தப்பட்டுக்கிட்டு இருப்பார். பாவம் அவர் எனக்கு கடனா கொடுத்த ஐம்பதாயிரத்தை அவர் சம்பளத்துல பிடிக்கப் போறாங்க. இப்ப நீங்க உதவி செய்யறதா சொல்றீங்க. உங்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்துடப் போவுது. உங்களை கஷ்டப்படுத்த நான் விரும்பலை. வரேன்..."

"சரி போ... ஆனா ஒண்ணு. உன்னால சாக முடியாது. உனக்கு ஆயுள் கெட்டி. ஞாபகத்துல வெச்சுக்கோ..."

-ஞானப்பிரகாசம் ஒரு முடிவோடுதான் அப்படிச் சொன்னார்.

"அப்படியா... இப்படி சொல்றவங்க எதிர்லேயே நான் இறந்து வெச்சா..." -பாஸ்கரனும் தீர்க்கமாக அவரை எதிர்கொண்டான். ஞானப்பிரகாசம் மௌனமாகப் பார்த்துவிட்டு, "இந்த வைராக்கியத்தை வாழ்ந்து காட்றதுல நீ காட்டக்கூடாதா?" என்றார் நிதானமாக.

"எப்படி வாழுவேன்? ஒரு வேலையும் கிடைக்கல. சுயமா தொழில் செய்யணும்னாலும் கொஞ்சமாவது பணம் வேணும். அதுக்கும் வழி இல்லை. வேணும்னா இந்த காசி கங்கைக்கரைல நான் பிச்சை எடுக்கலாம். ஆனா என்னைப் பாக்கறவங்க 'காலும் கையும் நல்லாத்தானே இருக்கு. பிச்சை எடுக்கறியே'ம்பாங்க. மூட்டை தூக்கலாம். ஆனா அங்க கூட போட்டி..."

"அந்த போட்டியை எதிர்கொண்டாதானே வெற்றி பெற முடியும்?"

"அதுக்குகூட இப்ப எனக்கு வழி கிடையாது. போலீஸ்காரங்க பார்த்தா பேங்க் கடன் கட்டாம தலைமறைவாயிட்ட ஒருத்தன்னு என்னை உள்ள தூக்கிப் போட்ருவாங்க. ஜெயிலுக்குப் போய் கம்பி எண்றதுக்கு மானத்தோட சாகறது மேல் இல்லையா?"

"உனக்கு உதவி செய்தவரை கஷ்டப்படுத்திட்டு சாகறது மட்டும் கௌரவமான செயலா?"

"சும்மா வளைச்சு வளைச்சு கேள்வி கேட்காதீங்க. நான் வாழ்க்கையை ஜெயிக்கணும். அதுக்கு வழி இருக்கா? உங்களால அதுக்கு உதவ முடியுமா?"

"இந்தக் கேள்வியை நீ என்னைப் பார்த்த நிமிஷமே ஏன் கேட்கலை?"

"என் மேல அக்கறையா இதுவரை யாருமே இப்படி கேள்வி கேட்டதில்லை. உங்களையும் நான் அந்த லிஸ்டுல வெச்சிருந்ததால கேட்கத் தோணலை."

"பரவால்ல... மனசுல பட்டதை ஒளிவு மறைவு இல்லாம பேசறே. உன்னைப் பாராட்றேன். கவலைப்படாதே. உன்னைப் பெரிய வெற்றியாளனா ஆக்கறேன். சந்தோஷமா?"

பாஸ்கரனுக்கு அந்த பதில் நிஜமாலுமே இன்ப அதிர்வளித்தது. கூடவே ஒரு சந்தேகமும் தோன்றியது.

"என்ன யோசிக்கறே... நானே ஒரு பக்கிரி. குடிசைல இருக்கற ஒருத்தன். நான் எப்படி உதவ முடியும்னா?"

"ஆமாம்."

"உதவி செய்யத் தேவை பணம் இல்ல தம்பி. மனசுதான்."

"சரி... உங்களுக்கு எனக்கு உதவணும்கற மனசு இருக்கு. ஒத்துக்கறேன். உங்க மனசால எனக்கு அட்வைஸ் பண்ண முடியும். கஷ்டப்பட்டு உழைச்சா முன்னுக்கு வரலாம்னு சொல்ல முடியும். இதுக்குமேல என்ன செய்ய முடியும்?"

"இதுவே ஒரு உதவிதானே?"



"இதை நான் உதவியா நினைக்கல. இந்த உலகத்துல ரொம்ப சுலபமான ஒரு வேலை எதுன்னா அட்வைஸ் பண்றது தான். நான் அட்வைஸ்ங்களைக் கேட்டுக் கேட்டு புளிச்சுப் போயிட்ட ஒருவன்."

"சரியான அட்வைஸை நீ கேட்டிருக்க மாட்டே அதான் இப்படிச் சொல்றே?"

"அட்வைஸ்ல சரியான அட்வைஸ்னும், தப்பான அட்வைஸ்னும் இருக்குதா என்ன?"

"நிச்சயமா..."

"எனக்கு நம்பிக்கை இல்லை. எது சரியான அட்வைஸ்."

"இனி நான் உனக்கு சொல்லப்போற எல்லாமே..."

"முதல்ல ஒண்ணு சொல்லுங்க. அதுல எனக்கு நம்பிக்கை ஏற்பட்டா தொடர்ந்து கேட்கறேன்."

"அப்படி வா வழிக்கு... சாக ஆசைப்பட்ட நீ உன் ஊர்ல சாகாம எதுக்கு இந்த காசிக்கு வந்தே?"

"என் செத்த உடம்பால யாருக்கும் சின்ன சிரமமும் வரக் கூடாதுன்னுதான்..."

"பாத்தியா... உன் விதி உன்னை எவ்வளவு அழகா இப்படி நினைக்க வெச்சு காசிக்கு தள்ளி விட்டதை? சரி... இங்க உன் எண்ணப்படி சாக முடிஞ்சதா?"

"இந்த நிமிஷம் உங்களால எல்லாம் கெட்டதுதான் மிச்சம்..."

"இல்ல தம்பி... கங்கைல மூழ்கினா உன் துன்பம் தீரணும்கறது ஒரு கணக்கு. அதுதான் உன்னை அப்படி நினைக்க வெச்சு இங்க தள்ளிக்கிட்டு வந்தது. நீயும் மூழ்கினே. உன் துன்பக் கணக்கும் முடிஞ்சு போச்சு. இப்ப நீ வெற்றிக்கான வழிகளை என் மூலமா தெரிஞ்சுக்கத்தான் நான் உன்னை காப்பாத்தியிருக்கேன்."

"இதெல்லாம் புத்திசாலித்தனமான சமாதானங்கள். எது வெற்றிக்கான வழி? அதை முதல்ல சொல்லுங்க."

"இப்படி கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கே பாரு.... அதுதான்!"

"நான் இப்படிக் கேள்வி கேட்கறது இன்னிக்கு நேத்திக்கு இல்ல. பிறந்தப்ப இருந்தே அது தொடருது. இது ஒண்ணும் புதுசு இல்ல."

"இருக்கலாம்... ஆனா யார்கிட்டே கேட்கறேங்கறது ரொம்ப முக்கியமாச்சே?"

-ஞானப்பிரகாசம் சொன்ன பதிலில் அவனுக்கு சற்று திகைப்பு. தொடர்ந்து அதற்கு பதில் சொல்லத் தெரியாமல் சற்று தவித்தவன் பின்பு சுதாரித்து "நீங்க நல்லா பேசறீங்க... ஆனா அதால என் துரதிர்ஷ்டம் எப்படி விலகும்கறதுதான் எனக்கு தெரியமாட்டேங் குது." என்றான்.

"நீ எதை அதிர்ஷ்டம்னு நினைக்கறே?"

"இப்படிக் கேட்டா என்னத்த சொல்ல... நினைச்சது நடக்கணும். கேட்டது கிடைக்கணும். இது போதும். அந்த நபர் அதிர்ஷ்டசாலி."

"சரி... உனக்கு இப்ப நீ நினைக்கற எது நடக்கல?"

"நான் ஒரு தொழில் தொடங்க ஆசைப்பட்டேன். ஆனா அது நடக்கலை. என் பணம் திருட்டு போயிடிச்சு."

"அது எதனாலன்னு கேட்டுக்கிட்டியா?"

"இந்த நாட்டுல திருடங்க அதிகம். அதனால..."

-பட்டென்கிற பதில் பாஸ்கரனிடம்.

"இல்ல தம்பி... உனக்கு கவனம் போதாதுங்கறதுதான் உண்மை யான காரணம்னு நான் சொல்றேன்."



"புடலங்கா... என்னை ஒரு மூலிகைப் பொடியால மயங்கி விழவெச்சு பணத்தை திருடிட்டு போயிருக்காங்க. அதுக்கு எப்படி என் கவனக்குறைவு காரணமாக முடியும்?"

"கவனம்கறது எப்படி நீ திருட்டு கொடுத்தேங்கறதுல மட்டும் கிடையாது. அது பல விஷயங்கள் சார்ந்தது..."

"என்ன அந்த பல விஷயங்கள்?"

"இந்த உலகத்துல பல கோடி பேர் இருக்காங்க. ஒருத்தரைப் போல ஒருத்தர் இருக்கறது இல்லைதானே?"

"ஆமா..."

"ஒருத்தர் ஓவியம் வரைஞ்சா, ஒருத்தர் நல்லா கணக்கு போட்றார், ஒருத்தர் நல்லா பாட்றார், இன்னொருத்தர் நல்லா ஆட்றார், ஒருத்தர் நல்லா நடிக்கிறார், ஆனா எல்லாரும் எல்லா விஷயத்துலயும் வல்லவர்களா இருக்கறது கிடையாதுதானே?"

"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாதுங்கறே...?"

"எதுல இண்ட்ரஸ்ட் இருக்கோ அதுதானே நல்லா வரும்?"

"அப்ப மத்த விஷயங்கள்லாம்..."

"வந்தா வரும். அவ்வளவுதான்..."

"ஓவியம் வரையறவனும் மனிதன்தான். கணக்கு போட்றவனும் மனிதன்தான். அப்ப எல்லாமே எல்லாருக்கும் வந்தாகணுமே."

"நான் கேட்ட கேள்விக்கு சம்மந்தமில்லாம நீங்க இப்படி பதில் கேள்வி கேட்டா என்ன அர்த்தம்?"

"அவசரப்பட்டு சம்மந்தமில்லேன்னு நீ நினைக்கறே... இப்படி யோசிக்காம பதில் சொன்னா என்ன அர்த்தம்?"

"நான் யோசிச்சுதான் பதில் சொல்றேன். கவனமா இருக்கறத பத்தி கேள்வி கேட்டுட்டு நீங்கதான் பேச்சை எங்கெங்கியோ கொண்டு போறீங்க..."

"இந்த பதில் ஒண்ணு போதும், உனக்கு எதுலையும் தீவிரமான ஆழமான கவனம் கிடையாதுங்கறதுக்கு..."

"இல்லே... உங்க பேச்சை தீவிரமா கவனிக்கறதாலதான் நீங்க சப்ஜெக்ட் மாறி பேசினத வெச்சு நான் கேள்வி கேட்டேன்."

"நான் சப்ஜெக்ட் மாறி கேள்வி கேட்கல தம்பி. உனக்கு சில விஷயங்களை புரிய வைக்கறதுக்காக சில கேள்வி கேட்டேன். அதுல ஒண்ணுதான் எல்லோருக்கும் எல்லா விஷயமும் வசப் பட்டுடாதுங்கறது."

"சரி... அதுக்கும் எனக்கு கவனமில்லேங்கறதுக்கும் என்ன தொடர்பு இருக்கு?"

"நிறைய இருக்கு. வாழ்க்கையை, அதில் வாழும் மனிதர்களை நீ கூர்ந்து பார்த்திருந்தால் உனக்கொரு கேள்வி தோணியிருக்கும்.

ஏன் எல்லாராலையும் எல்லா விஷயங்கள்ளையும் சாதனை களை செய்ய முடியலைங்கறதுதான் அந்த கேள்வி."

"இதுக்கு எனக்கு பதில் நல்லாவே தெரியுமே. ஒரு மனுஷனால ஒரு விஷயத்துலதான் கவனம் செலுத்த முடியும். 'ஒன்றே செய்க-அதை நன்றே செய்க'ன்னுதான் பெரியவங்களும் சொல்லியிருக் காங்க..."

"ரொம்ப சரி... அந்த ஒரு விஷயம் எதுன்னு எப்படி தீர்மானிக் கறாங்க?"

"மனசு சுலபம்னு எதை நினைக்குதோ அதை வெச்சுத்தான்..."

"எப்படி... எப்படி?"



"இப்ப எனக்கு சயின்ஸ் சப்ஜெக்ட்னா ரொம்ப இஷ்டம். அப்ப அதுல நான் தீவிர கவனம் செலுத்தினா அதுல நான் சுலபமா நிறைய மார்க்கு வாங்கலாம் இல்லையா?"

"அப்ப மனசுக்கு பிடிச்ச விஷயத்துல ஈடுபட்டா வெற்றி சுலபம். இல்லேன்னா கஷ்டம் அப்படித்தானே?"

"அதுல என்ன சந்தேகம்?"

"இப்பதான் நீ விஷயத்துக்குள்ற வந்துருக்கே... வாழ்க்கைல நீ ரொம்ப கவனமா இருக்கறதா சொன்னியே, அப்படின்னா நீ உனக்கு ரொம்ப பிடிச்ச விஞ்ஞானத்துலதான் தொழில் முயற்சியை செய்தியா?" ஞானப்பிரகாசம் அவனை மடக்குகிற மாதிரியும் சப்ஜெக்ட்டுக்கு ஏற்ப கேள்வி கேட்கிற மாதிரியும்தான் அந்த க்ஷணம் பாஸ்கரனுக்கும் தோன்றியது.

'இல்லை' என்கிற மாதிரி தலையை ஆட்டினான்.

"ஏன் பிடிச்ச விஷயத்துல போகலை?"

"அது முடியாது..."

"முடியாதா?"

"ஆமாம்... விஞ்ஞானம் படிச்சதனால நான் விஞ்ஞானத்துல போகலாம்தான். ஆனா அந்த படிப்புல எனக்கு காலேஜ்ல இடம் கிடைக்கல."

"எதனால...?"

"மார்க் கம்மி..."

"பிடிச்ச சப்ஜெக்ட்லையே மார்க் கம்மியா?"

"இல்ல... மத்த சப்ஜெக்ட் கால வாரிவிட்டுடிச்சு."

"அப்ப உன் வரைல பிடிச்சதுக்கு வலு குறைவு. பிடிக்காத விஷயங்களுக்கு வலு அதிகம்னு சொல்லலாமா?"

-இந்தக் கேள்விக்கு மட்டும் நெடுநேரம் வரை யோசித்துவிட்டு பின் அரை மனதாய் 'ஆமாம்' என்கிற மாதிரி தலையை ஆட்டினான்.

"சரி இப்ப நான் வேற விதமா கேக்கறேன். உனக்கு பிடிச்ச விஷயத்துக்குள்ள போகமற்ற விஷயங்கள் உனக்கு அனுமதி தரலை. அந்த மற்ற விஷயங்களை அதாவது மற்ற சப்ஜெக்ட்டு களை ஜெயிக்க நீ ஏதாவது செய்தியா?"

"இல்ல... அவைகளோட நான் போராடலை..."

"ஏன்...?"

"வெறுப்புதான்..."

"கைவராத விஷயங்கள் வெறுப்படைய வைக்கறது சகஜம் தானே. அந்த வெறுப்புக்கு ஆளாகாம அவைகளை நீ எதிர்த் திருந்தா நீ விரும்பின விஷயம் உனக்கு கிடைச்சிருக்கும் தானே?"

"நிச்சயமா..."

"அந்த கவனம் உனக்கு இருந்ததா?"

-அவர் எங்கே வருகிறார் என்பது மெல்லிசாக புரியத் தொடங்கியது. அவன் தலை மறுப்பாக ஆடியது.

"நான் ரொம்ப கவனமாதான் இருந்தேன்னு நீ சொன்னது அப்ப எந்த வகைல சரி...?"

-அவனுக்கு அதற்கு எந்த பதில் சொல்வது என்று தெரியவில்லை.

"படிக்க வாய்ப்பே கிடைக்கலைன்னா உனக்காக பரிதாபப்பட லாம். கிடைச்ச வாய்ப்புல சரியா கவனம் செலுத்தாம அதனால





பிடிச்ச விஷயத்துலையும் ஈடுபட முடியாம போய் நீ கஷ்டப்பட நேர்ந்ததுக்கு எது காரணம்னு நினைக்கறே?"

-மீண்டும் அவனிடம் மௌனம். இறுக்கம். "நீன்னு இல்ல... இந்த உலகத்துல நூத்துக்கு தொண்ணூறு பேர் இப்படித்தான்! தங்கள் போக்கு. தங்களோட சிந்தனை, தங்களோட செயல்பாடுகள் பற்றி எந்த கவனமும் இல்லாதவங்கதான் அவ்வளவு பேரும். வாழ்க்கை போற போக்குல போக வேண்டியது. எதிர்த்து செயல்பட முயற்சிக் கறதே கிடையாது. மீறி முயற்சி செய்தா தப்புத்தப்பா முயற்சி செய்வீங்க. இதனால பிரச்சினையும் அதிகமாகும். அப்புறம் எப்படி தீர்வு கிடைக்கும்?"

"அப்ப படிக்கற காலத்துல நான் கவனமா இல்லாததுதான் இன்றைய என் நிலைக்கு காரணமா?"

"அது ஒரு முக்கியமான காலம் தம்பி. கவனம்கறது எப்பவும் இருக்கணும். ஒவ்வொரு விஷயத்துலையும் இருக்கணும். ஏன் எதற்கு எப்படிங்கற கேள்விகள் கேட்டபடி இருக்கணும்."

"நானும் கேட்டவன்தானே?"

"அப்படின்னா இதற்கு நீ பதில் சொல்லு. எல்லாரும் மனுஷங்க தான். ஏன் எல்லாருக்கும் ஆற்றல் ஒன்று போல இல்லை?"

"அது... அது..."

"எது...?"

"அது... எனக்கு சொல்லத் தெரியலை."

"சரி இந்தக் கேள்விக்காவது பதில் தெரியுதா பார்? ஏன் ஒருத்தன் கறுப்பா பிறக்கறான். ஏன் ஒருத்தன் சிகப்பா பிறக்கறான், ஏன் ஒருத்தன் ஏழையா, ஏன் ஒருத்தன் பிறக்கும்போதே பணக்காரனா பிறக்கறான்?"

"தெரியல..."

"இதை எல்லாம் யோசிச்சு பார்த்து இங்க அந்த 'ஏன், எதற்கு, எப்படி'யைக் கேட்டுகிட்டதில்லையா?"

-பாஸ்கரன் முழித்தான்.

"என்னப்பா... இந்த மாதிரி கேள்விகள்லாம் தோன்றினதே இல்லையா?"

"இல்ல... சுருக்கமா தலை எழுத்துன்னு சொல்வாங்க."

"தலை எழுத்தா?"

"ஆமாம்... அப்படித்தான் சொல்வாங்க."

"அப்ப அதை எழுதினது யார்?"

"கடவுள்தான்..."

"ஒவ்வொருத்தர் தலையா பிடிச்சு எழுதறதுதான் அவர் வேலையா?"

"அப்படித்தானே பெரியவங்க சொல்றாங்க."

"அப்ப யார் எது சொன்னாலும் அதை அப்படியே கேட்டு நம்பறவன்தானா நீ?"

"இல்ல... எனக்கு சமயத்துல கடவுள்மேலையே சந்தேகம் உண்டு."

"எப்படி...? அவர் இருக்காரோ இல்லையோங்கற மாதிரியா?"

"ஆமாம்..."

"ஆகக்கூடி கவனம் இல்லாத- தெளிவும் இல்லாத சந்தேகங்கள் கொண்ட ஒரு சராசரி மனிதன்தான் நீ. அப்படித்தானே?"

-பாஸ்கரன் மௌனித்தான். இல்லையில்லை. ஸ்தம்பித்தான்!



"என்ன பேசமாட்டேங்கறே? ஒரு சாதாரண கேள்விக்கும் பதில் சொல்லத் தெரியாத நீ ஒரு வகைல சாக நினைச்சது சரிதான்... ஆனா அதனால ஏதாவது பலனுண்டா?"

"இல்லதான்... சரி இந்த கேள்விகளுக்கெல்லாம் நீங்க பதில் சொல்லுங்க. இப்பவாவது தெரிஞ்சுக்கறேன்."

"அப்படி வா. இப்பதான் நீ புத்திசாலித்தனமா இரண்டாவது படி ஏறியிருக்கே...

மனிதனுக்கு உறுப்புகள் பொதுவா இருந்தாலும் உணர்வுகள் வேறுபட பல காரணங்கள் இருக்கு. ஆசைகள், ஆற்றல்கள் வேறுபடவும் பல காரணங்கள் இருக்கு. எல்லா காரணத்துக்கும் அடிப்படை கருத்தரிக்கிற நேரமும் அதன் பின் வளர்ந்து பிறக்கிற நேரமும் தான்."

"எப்படி?"

"நீ எப்ப பிறந்தே?"

"ஆகஸ்ட் மாசம் நாலாம் தேதி..."

"நாலாம் நம்பர்காரனா நீ... சரிதான். அதுதான் அந்த ராகு போல விஷமும் வீர்யமும் கலந்தவனாவே இருக்கே..."

"அது யார் ராகு?"

"நீதான்."

"நான்... நான் பாஸ்கரன்!"

"அது உனக்கு உன் பெற்றோர் வெச்ச பேர். ஆனா காலத்தோட பிடில உனக்கான அடையாளப் பேர் ராகு."

"ஏன் இப்படிக் குழப்பறீங்க?"

"தெளியறதுக்காக குழம்பறதுல தப்பே இல்ல தம்பி."

"நீங்க பேசறதுல விஷயம் இருக்கற மாதிரியும் இருக்கு. இல்லாத மாதிரியும் இருக்கு."

-ஞானப்பிரகாசம் அதைக் கேட்டு சிரித்தார்.

"சிரிக்காதீங்க... என் வெற்றிக்கு வழி சொல்லுங்க."

"ரொம்ப சுலபம் தம்பி. உன்னை முதல்ல புரிஞ்சுக்கோ. இந்த உலகத்துல நீ யாருங்கறத தெரிஞ்சுக்க..."

"நான் தண்டபாணிங்கறவர் மகன், ராமசாமிங்கறவர் பேரன்."

"இது புற அடையாளம். அக அடையாளம்னு ஒண்ணு இருக்கு."

"அது என்ன அக அடையாளம்?"

"ஒரு ரேடியோ வாங்கினாலோ, இல்லை மோட்டார் பைக் வாங்கினாலோ மேன்யுவல்னு ஒண்ணு தருவாங்க தெரியுமா?"

"ஆமாம்... அந்த ரேடியோவுக்குள்ள என்ன இருக்குங்கறது அதைப் பார்த்தாதானே தெரியும்?"

"உனக்கும் ஒரு மேன்யுவல் இருக்கு..."

"எனக்கு மேன்யுவலா?"

"ஆமாம்... அதுதான் உன் ஜாதகம். நீ பிறந்த நிமிஷம் எந்த கிரகம் எங்க இருந்தது, அதுல உனக்கு நட்பு யார், பகை யார்னு சொல்றது தான் ஜாதகம்."

"அதெல்லாம் கப்ஸா. அதை நம்பினா முன்னேற முடியாது. மூட நம்பிக்கைன்னு சொல்றாங்களே."

"பல ஆயிரம் மைலுக்கு அப்பால இருக்கிற கிரகங்கள இந்த மண் மேல இருந்துக்கிட்டு துல்லியமா கணிச்சு இந்த தேதியில இந்த நிமிஷம் கிரகணம் ஏற்படும்னும், இன்னிக்கு பௌர்ணமி, இன்னிக்கு அமாவாஸைன்னும் துல்லியமா சொல்றவங்க முட்டாள்களா...? அவங்க சொல்றது மூட நம்பிக்கை சார்ந்ததா?"



"அது எப்படி இங்க இருந்துக்கிட்டு ஆகாயத்துல இருக்கறத எடை போட முடியும்?"

"உனக்கு என்ன வயசு இப்போ?"

"இருபத்தி ஏழு..."

"இந்தக் கேள்வியை இப்பவாவது கேட்கணும்னு தோணிச்சே... நான் சொல்றத நல்லா கேட்டுக்கோ. சாப்பிடாம உயிர் வாழலாம், கூடுவிட்டு கூடு பாயலாம், இரும்பைத் தங்கமாக்கலாம். தண்ணியில நடக்கலாம், எந்த ஆதாரமுமில்லாம ஆகாயத்துல மிதக்கலாம்."

"இதெல்லாம் சித்து வேலைன்னுல்ல சொல்வாங்க!"

"எந்த பேர் வெச்சு சொன்னா என்ன...? இதை எல்லாமும் ஒரு மனிதன் மனசு வெச்சா செய்யலாம். அதை முதல்ல புரிஞ்சுக்கோ."

"எப்படி...? எப்படி?"

"எல்லா கேள்வியையும் இப்ப கேள்... இவ்வளவு நாள் ஏன் இதை கேட்டுக்க தோணலை?"

"இந்த மாதிரி சப்ஜெக்ட்டெல்லாமே கற்பனையானதுன்னு நினைச்சதால கேட்டுக்க பிரியமில்லாம போயிடிச்சு."

"இதெல்லாம் கற்பனையா...? எதை வெச்சு முடிவுக்கு வந்தே?"

"மனித சக்திக்கு அப்பாற்பட்ட, நான் இதுவரை யார்கிட்டேயும் பார்த்திராத எல்லாம் கற்பனையாதானே இருக்க முடியும்?"

"அப்ப கிரகணம் பற்றியும், சூரிய சந்திர கிரகங்கள் பற்றியும் சொன்னதெல்லாமும் கற்பனையா?"

"அது எப்படி கற்பனையாகும்... அதான் நிலாவுக்கே மனுஷன் போய்ட்டு வந்துட்டானே?"

"அது இப்போ... ஆனா பல ஆயிரம் வருஷத்துக்கு முந்தியே இந்த தேதியில இந்த விஷயம் ஆகாயத்துல நடக்கும்னு நம்ம ரிஷிகள் எழுதி வெச்சிருந்திருக்காங்களே அது எப்படி கற்பனை யாகும்?"

-மடக்கினார் ஞானப்பிரகாசம்.

மடங்கினான் பாஸ்கரனும்.

"போதும்... நீ யோசிக்க ஆரம்பிச்சுட்டே. இனி பேச்சு கூடாது. அனுபவம்தான் உனக்கு மற்ற விஷயங்களைப் புரிய வைக்கணும். புரியவும் வைக்கும்."

"நான் ஜெயிக்கணும். அதுக்கு என்ன வழி?"

"உன் பேர் என்ன சொன்னே?"

"பாஸ்கரன்!"

"பேரை மாத்திக்கோ... இந்த பேரோட ஆதிக்கம் எண் எட்டைச் சேர்ந்தது. எண் எட்டுங்கறது சனி. சனி எப்பவும் கஷ்டப்படுத்தி சுகம் தருபவன். அது உன் வரையில உண்மையாயிடிச்சு. நீ நாலாம் எண் காரன். பேர்ல இருக்கற சூரியனோட ஆதிக்கத்துக்கு உன்னை மாத்திக்கோ. இந்த நிமிஷம் உன்பேர் பாஸ்கர்ராஜ். எட்டிலிருந்து விடுபட்டு ஒண்ணுக்கு மாறு. இனி பாரு..."

-அவர் சொல்ல அடுத்த நொடியே பாஸ்கரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்ன தம்பி... படிச்ச படிப்பு, கேட்ட கேள்விகள், செய்த முயற்சிகள், இது எல்லாம் வராத மாற்றமும் அதிர்ஷ்டமும் இந்த சின்ன மாற்றத்தால் எப்படிடா வரமுடியும்னு யோசிக்கிறியா?"

"நிச்சயமா... லாட்ஜ்ல உக்காந்துகிட்டு நம்பர்களை வெச்சுக் கிட்டு பம்மாத்து பண்ணி பொழைக்கறவங்க மாதிரியே நீங்க பேசினா நான் என்ன பண்ண முடியும்! எனக்கு பெரிசா பண உதவி



செய்யப் போறீங்கன்னுதான் நினைச்சேன். இப்படி பேரை மாத்து. அதிர்ஷ்டம் அடிக்கும்னா என்னங்க அர்த்தம்?"

"பேரை மாத்தறதுங்கறது சப்தத்தை மாத்துறது தம்பி. புல்லாங் குழல் சப்தத்துக்கும், வயலின் சப்தத்துக்கும் வித்தியாசம் இருக் குல்ல..."

"இருக்கு... என் வரைல சப்தம் மாறினா எப்படிங்க எல்லாம் மாறும்?"

"அது மாறும்போதுதானே தெரிய வரும்..."

"மாறலேன்னா...?"

"கடல்ல இறங்காம எப்படி ஆழத்தை தெரிஞ்சுக்க முடியும்? மாத்திக்காம எப்படி அதோட சக்திய புரிஞ்சுக்க முடியும்."

"இப்படி ஒரு சுலபமான வழி இருக்குன்னா எல்லாரும் பேரை மாத்தி வெச்சுக்கிட்டு கஷ்டத்துல இருந்து தப்பிச்சுடுவாங்களே...?"

"சுலபமான வழி ஆயிரமாயிரம் வருஷமா இருக்கு தம்பி. ஆனா அது வழியே கிடையாதுன்னு நினைச்சியே அங்கதான் இருக்கு உன் கர்மாவோட சக்தி. எதுவும் கழியற நேரம் வந்தாதான் புரியும்."

"இதெல்லாம் சாமர்த்தியப் பேச்சு. எந்த ஒரு வெற்றி தோல்வி யையும் இப்படி நம்ம புத்திசாலித்தனத்தால நாம எதையாவது சொல்லி சமாளிச்சுடலாம்."

"அதே புத்திசாலித்தனத்தால வாழ்ந்து சாமர்த்தியமா பிழைச்சுக் காட்டியிருக்க வேண்டியதுதானே? எதுக்காக சாக நினைச்சே...? சரி சாக நினைச்சியே அதை ஏன் நீ வாழ்ந்த மண்ணுலயே செய்துக் கல? எது உன்னை காசி வரை தள்ளிகிட்டு வந்தது? போகட்டும். இங்க வந்தியே... சாக முடிஞ்சதா? என்னால காப்பாத்தப்பட்டு இப்ப இவ்வளவு கேள்வி கேட்கறியே உனக்கும் எனக்குமான இந்த சந்திப்பு ஏன் இதுக்கு முந்தியே நடக்கல?

என்னோட இந்த கேள்விக்கெல்லாம் சரியான பதில் உன்னால சொல்ல முடியுமா?"

-ஞானப்பிரகாசம் பியத்து உதற பாஸ்கரன் முகம் வெளிறிப் போனது.

"என்ன தம்பி... உன் எண்ணப்படி ஒரே ஒரு விஷயத்தை உன்னால செய்துக்க முடிஞ்சதா? உன் வயிறு உன் பேச்சைக் கேட்டு பசிக்காம இருக்குமா? உன் தலை முடி உன்னைக் கேட்டுகிட்டு நரைக்காம இருக்குமா?

உன் ஒரு எண்ணமாவது ஈடேறிச்சா? நான்- என்னதுன்னு பேசறியே, உன் கட்டுப்பாட்டுலதானே எல்லாம் இருக்கணும்?

அடுத்தவங்கள விடு...

நீ உனக்குள்ள உன் கட்டுப்பாட்டுல இருக்கியா? உன் உடம்பும் மனசும் உன் கட்டுப்பாட்டுல இருக்குதா?"

"அப்ப இதுக்கெல்லாம் காரணம்?"

"நாம் யாரால ஆளப்பட்றோம்கறதுல இருக்கு சூட்சமம்."

"அப்ப எட்டாம் எண் இப்படித்தான் நடந்துக்குமா. அதுதான் என் கஷ்டத்துக்கு, நான் நானா இல்லாததுக்கு காரணமா?"

"எண்ணுங்கறது ஒரு அடையாளம். எந்த எண்ணும் உயர்ந்ததும் கிடையாது. தாழ்ந்ததும் கிடையாது.

விறகா இருந்தா எரியணும், நெருப்பா இருந்தா ஒளி தரணும், அரிசியா இருந்தா சாதமாகணும். இது நியதி. விறகு சாதமாக முயற்சி செய்தா என்ன நடக்கும்?"

"என்ன நடக்கும்?"

"கொதிக்கிற தண்ணியில கிடந்து தத்தளிக்க வேண்டியதுதான். தப்பா கிடக்கறியே விறகேன்னு அதை கொதி தண்ணியில இருந்து



எடுத்து காயவெச்சு நெருப்புல வெச்சா அது அழகா எரியும் இல்லியா?"

"நிச்சயமா?"

"நீயும் அப்படித்தான். நாலையும் தெரிஞ்சுக்கற ஆற்றல் உள்ள நீ, தப்பா அதுக்கு இடமில்லாத ஒரு சோதனைக்கூடத்துல இருக்கே. அங்கே இருந்து வெளிய வந்து உன்னை சூரியனாக்கறேன் நான். இனி பார்."

"இப்படி எல்லாரும் தங்களுடைய இயல்பு தெரிஞ்சு மாத்தி கிட்டாதான் வெற்றியா?"

"ஆமாம். இன்னொரு விஷயமும் இருக்கு."

"என்ன அது?"

"நீ வெற்றின்னு எதை நினைக்கறே?"

"ஆரம்பத்துலையே சொன்னேனே. நினைக்கறது நடக்கணும்- கேட்கறது கிடைக்கணும்."

"அப்படி நடந்துட்டா- கிடைச்சிட்டா நீ வெற்றியாளனா?"

"இல்லையா...?"

-அவன் கைகளை ஆட்டியபடி கேட்க அவர் சிரித்துவிட்டு, "சரி பாஸ்கர்ராஜ்! நீ கிளம்பு. காசி நகரத்துக்குள்ள நீ பாஸ்கர்ராஜா நுழையும்போதே தெரியும் அந்த மாற்றம்!" என்றார் ஞானப்பிர காசம்.

"என்னோட கடைசி கேள்விக்கு நீங்க பதிலே சொல்ல லையே...?"

"காலம் சொல்லும்... போய்ட்டுவா!"

"உங்க பேச்சை நம்பி பாஸ்கர்ராஜா புறப்பட்றேன். உள் மனசு முழுக்க அவநம்பிக்கையோடதான் போறேன். ஒரு பைத்தியக்

காரன்கூட இப்படிப்பட்ட சுலபமான மாற்றங்களால வெற்றியாளனாக முடியும்கறத நம்ப மாட்டான். நம்பறவங்கள பார்த்தா பின்பக்கமா சிரிப்பான். அந்த எண்ணங்களோடதான் போறேன்.

உண்மையில் பாஸ்கரனை, பாஸ்கர்ராஜ் எப்படி ஜெயிக்கப் போறான்கறத இனிதான் நான் பார்க்கணும். என் வாழ்க்கைல எவ்வளவோ ஏமாற்றங்கள். தோல்விகள், அந்த பட்டியல்ல இந்த முட்டாள்தனமும் சேருதா இல்லை உங்களோட கேள்விகளும் பதிலும்தான் மனுஷ வாழ்க்கைக்கு ஞானபாடமாங்கறது போகப் போகத் தெரியட்டும்."

-சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டான்!

## 6

**ஆறது சுக்கிரமூர்த்தி**
**அழகிதன் சூட்சம கீர்த்தி!**
**கவருதல் என்றும் இதன் அடி நாதம்**
**காமுறுதல் இதனாலேயே வாழ்க்கை ஜீவிதம்**
**சேர்க்கைக்கேற்பவே நன்மை தீமை**
**குருவுடன் கூடிட அமைதி சாந்தம்**
**பாரையே இழுத்திடும் பலமிக்க காந்தம்**
**சீருடன் கலை விளங்க தேறுவர் மோட்சம்**
**சீரற்றுப் போனாலோ உறுவதும் மோசம்!**
**-நவநாயக சித்தர்**

சாமிநாதன் சுப்ரமணியன் சொன்னதைக் கேட்டு பெரிதாக சந்தோஷப்பட்ட மாதிரியே தெரியவில்லை. "என்ன சாமிநாதா... நான் எவ்வளவு பெரிய சந்தோஷமான ஒரு விஷயத்தை சொல்லியிருக்கேன். துளி சந்தோஷத்தைக்கூட காணோமே உன் முகத்துல?"



"இதுல சந்தோஷப்பட என்ன இருக்கு? எனக்கு ஆறுதல் சொல்ல ஜோசியத்தைக் கைல எடுத்துகிட்டிருக்கே நீ. அவ்வளவுதான். ஆனா அதுக்கு அவசியமில்ல சுப்பு. நான் திடமாத்தான் இருக்கேன். எப்படியோ எனக்கு அந்த மனோதிடம் அமைஞ்சிருக்குன்னுதான் சொல்லணும்..."

"அப்ப நான் உன்னை சமாதானப்படுத்த சொல்றதாதான் நீ நினைக்கறியா?"

"பின்ன... தென்னை மரத்துல மாங்காய் காய்க்கப் போகுதுன்னு சொன்னா எப்படி நம்பறது?"

"இது அப்படியில்லப்பா. காய்க்கவே காய்க்காதுன்னு சொல்லிட்ட ஒரு மாமரத்துல மாங்காய் காய்க்கும் நம்புன்னு சொல்ற மாதிரி ஒரு விஷயம் இது."

"வேண்டாம். பேச்சை விடு. கனகம் காதுல விழுந்தா என்ன ஏதுன்னு கேட்பா?"

"சரி இப்ப அவங்க எப்படி இருக்காங்க...?"

"இல்லாத பொய்யை எல்லாம் சொல்லி தேத்தி வெச்சிருக்கேன். அவளும் அடுத்த மாசம் நான் பொழச்சு வந்தவுடனே குருவாயூர் போகணும். திருப்பதி போகணும்னு பட்டியல் போட ஆரம்பிச்சுட்டா..."

"நிச்சயமா நீ போகத்தாம்ப்பா போறே..."

"நீ வேற... யாரோ ஒரு ஜோசியராம். இன்னும் இரண்டு நாள்ல இங்க வந்து ஹோமம் யாகம்னு கூத்தடிக்கப் போறாரு. அதுக்கு கிட்டத்தட்ட நாற்பதாயிரம் செலவு வேற."

"உனக்கு நம்பிக்கை இல்லாத விஷயமாச்சே. எப்படி ஒத்துகிட்டே?"

"நான் ஏற்பாடு செய்ததானே...! எல்லாம் கனகத்தோட தம்பி சபாபதி ஏற்பாடு..."

"சரின்னு சொல்லிட்டியா?"

"வேற வழி... அவ எதைக் கேட்டாலும் மறுக்கறதில்லைன்னு செயல்பட்டிருக்கேன். கழுதையைக் காட்டி குதிரைன்னா அதுக்கும் ஆமாம் போடுவேன். ஏன்னா பத்து நாள் கழிச்சு இப்படி நல்லதோ கெட்டதோ பேச அவ இருக்கமாட்டா பாரு..."

–சாமிநாதன் சொல்லி முடிக்கும்போது கண்ணிரண்டும் கலங்கி விட்டது. சுப்ரமணியனுக்கும் மனது கனத்துப் போனது.

இடையில் சாமிநாதனின் மைத்துனர் சபாபதி தலை தெரிந்தது.

"மாப்ள! ஒரு முக்கியமான விஷயம்."

"என்னப்பா சபாபதி?"

"ஹோமம் பண்ற அந்த ஜோசியர் ஒரு முக்கியமான விஷயம் செய்யச் சொல்லியிருக்கார்."

"என்ன?"

"உங்களுக்கு இது நாள் வரை புத்திரப் பிராப்தம் இல்லை. இந்த நிலைல நீங்க ஹோமம் பண்றது ஸ்லாக்யம் இல்லையாம். அதனால நீங்க யாரையாவது தத்து எடுத்துக்கணுமாம். அது மட்டுமில்ல..."

"இன்னும் என்ன?"

"ஹோமத்துக்கு முந்தி நீங்க காசிக்குப் போய் கங்கைல ஒரு முழுக்குப் போட்டுட்டு வர்றது நல்லதாம்."

"இதை எல்லாம் உடனே பண்ணனுமாமா?"

"ஆமாம்."

"ஏ சபாபதி... நடக்கற விஷயமா அந்த ஆள் எதையும் சொல்லமாட்டாரா?"



"என்ன மாப்ள... அவர் என்ன சந்திரனுக்கா போய் கல் எடுத்துக் கிட்டு வரச் சொன்னார்? காசிக்கு போய் கங்கைலதானே குளிக்கச் சொன்னார்."

"காசியும் கங்கையும் கெட்டு சாக்கடையானது அவருக்குத் தெரியாதா?"

"விதண்டாவாதம் வேண்டாம். கனகத்துக்காக நீங்க இதை செய்யத்தான் வேணும்."

"போய்த் தொலையுதுன்னு காசிக்குகூட போய்ட்டு வந்துடுவேன். ஆனா தத்து எடுத்துக்கணும்னு சொல்றாரே இதெல்லாம் உடனே நடக்கற காரியமா?"

"நடக்குமாம். நீ ங நம்பி இறங்கினா நடக்குமாம்."

"அந்த ஆள் தனக்கு காசு வரணும்கறதுக்காக இப்படி எல்லாம் சொல்லக்கூடாது. நான் தெரியாமதான் கேக்கறேன். அவர்கிட்ட அநாதைப் பையன் எவனாவது இருக்கானா...? என் தலைல கட்ட இப்படி அந்த ஆள் ஏதாவது குறுக்கு வழி தேட்றானா?"

"சேச்சே... அந்த மனுஷரைப்பத்தி உங்களுக்குத் தெரியாது. ஒரு நாளைக்கு ஒரே ஒரு வேளைதான் சாப்பாடு. அதுவும் பால் பழம் மட்டும்தான்."

"என்ன சபாபதி நீ... நான் ஒண்ணு கேட்டா நீ ஒண்ணு சொல்றே? இதோ பார் நான் காசிக்குகூட இப்பவே போய்ட்டு வந்துடறேன். ஆனா பையன் கிடைக்கறதுங்கறது சாத்தியம் இல்லை. ஞாபகம் வெச்சுக்கோ."

"அந்த காசியிலையே பையனும் கிடைப்பானாம்."

"அப்ப இது பயங்கர செட்டப் வேலைதான். சந்தேகமே இல்லை. என் சொத்தை அபகரிக்க இப்படி ஒரு ஏற்பாடா."

"நிச்சயமா இல்லை. அவ்வளவுதான் சொல்வேன்."

"அதை நான் சொல்லணும்."

"சாமிநாதா! எதுக்கு இப்படி அவநம்பிக்கையாவே பேசறே. பையனை உனக்கு பிடிச்சிருந்தாதானே தத்து எடுத்துக்குவே? முடிவு உன் கைல இருக்கும்போது இது அநாவசிய கவலைப்பா..."

"நீ சும்மா இரு சாமிநாதா. கனகத்துக்காக பொறுத்துகிட்டிருக்கேன். அவ நல்லா இருந்தா இப்படி எல்லாம் உளர்ற இவங்களுக்கு வேட்டு வெச்சிப்பிடுவேன் வேட்டு..."

"சரி சரி காசிக்கு கிளம்பு... நானும் வரேன்."

"நீயும் வர்றியா...?"

"ஆமாம்ப்பா. எனக்கும் காசிக்குப் போகணும்கறது ஏகப்பட்ட நாள் கனவு."

"அடப்பாவி!"

# 7

**ஒன்றது வீரியம், இரண்டது மாற்றம்**
**மூன்றது கல்வி, நான்கது அறிவு**
**ஐந்தது மையம், ஆறது அழகு போலே**
**ஏழது ஞானம்!**
**ஞானமது விக்னநாயக மூலம்!**
**நவத்தில் இதுவே நனிப்பெரிதாகும்.**
**கேதுவை உற்றதே பக்தி.**
**பக்தியே மாந்தர்க்கு அன்றாட சக்தி**
**அன்றாட சக்திக்கு ஆதாரம் கேது.**
**அவனருள் மிக்கவர் ஆனை பலமிக்கவர்!**

**-நவநாயகசித்தர்.**



காசியில் அதிகம் சோற்றுக்கு சிரமப்பட வேண்டாம். யாராவது யாருக்காவது அன்னதானம் என்னும் பெயரில் புண்ணிய வேட்டைக்காகவும், பரிகாரத்துக்காகவும் சோறு போட்டபடியே இருப்பார்கள்.

பாஸ்கரனும் பசித்த வயிறுடன் ஒரு சத்திரத்தில் வரிசையில் நின்று சப்பாத்தியும் சப்ஜியும் வாங்கிக் கொண்டு ஒரு ஓரமாய் போய் அமர்ந்துகொண்டு தின்னத் தொடங்கினான்.

சிரிப்பாக வந்தது.

'காசிக்குள்ற போ... மாற்றம் தெரியும் பார்' என்று ஞானப் பிரகாசம் சொன்னதுதான் ஞாபகத்தில் வந்தது. சப்பாத்தி, பூரி என்று சமைத்து ஹோட்டல் நடத்தி நாலு பேர் பசியாற்றப் போகிறோம் என்று நினைத்தது போய் வரிசையில் நின்று பிச்சைக்காரனாய் அதை வாங்கிச் சாப்பிட நேர்ந்தது ஒரு கேலிச் சிரிப்பாய் உதட்டில் பரவி ஓடியது.

'பாஸ்கராக இருந்தவரை பிச்சை எடுக்கவில்லை. யோவ் பாஸ்கர்ராஜ் இப்ப நீ அதையும் எடுத்திட்டய்யா!" -உள் மனசு கேலி செய்தது. அழுகையெல்லாம் வரவில்லை. மனசு மரத்துவிட்டதோ என்னவோ?

சாப்பிட்டு முடித்தான். ஒரு உடைந்த சிமெண்டு தொட்டியில் பைப்பைப் பொருத்தி திறந்துவிட்டிருந்தார்கள். அங்கேயும் தண்ணீர் குடிக்க அடிதடி.

முட்டி மோதி தண்ணீர் குடித்து முடித்தான்.

சூரியன் சுள்ளென்று தாக்கிக்கொண்டிருந்தான்.

அதனால் காது கழுத்தோரம் எல்லாம் வியர்வை பாம்புகள் எட்டிப் பார்த்துவிட்டு நெளிந்தபடி ஓடின. கசகசவென்று இருந்தது. பக்கத்திலேயே சத்திரத்திண்ணை. கடப்பைக்கல் போட்டு

வேய்ந்திருந்தார்கள். போய் உட்கார்ந்தபோது சிலுசிலுவென்று இருந்தது.

சமயங்களில் சிறுநீர் கழிப்பதும், தண்ணீர் குடிப்பதும், நிழலில் ஒதுங்குவதும் என்று மிகச் சாதாரண நிகழ்வுகள் எல்லாம்கூட சொர்க்கத்தில் விசேஷமான முறையில் கிடைக்கும் சுகம் போல தெரியும்.

இப்பொழுதும் பாஸ்கரனுக்கு அப்படித்தான் தெரிந்தது. சாப்பிட்ட அழுத்தம் உடம்பு, மனசு இரண்டின் களைப்பு எல்லாம் ஒன்றுகூடி அழுத்தியதில் தூக்கம் தானாக வந்து ஆக்ரமிக்க ஆரம்பித்துவிட்டது.

குறட்டை பெருகிவராத குறை. காலை ஒரு மாதிரி நீட்டி மடக்கி போதைக்காரன் போல படுத்துக் கிடந்தவனை அப்போது ஒருவர் வந்து பார்த்தார். தாடியும் மீசையும் புதர் போல வளர்ந்திருந்தது.

இடுப்பில் ஒரு அழுக்குக் கோமணம். கையில் ஒரு பிரம்பு. காலிலும் 'டொக் டொக்' என்று சப்தம் போடும் கட்டைச் செருப்பு.

அவரை சிலர் பார்த்துவிட்டு காலில் விழுந்தார்கள். சிலர் சிரித்தார்கள். தெரு நாய்கள் மட்டும் ஓடிவந்து மிக ஸ்நேகமாய் அவரைச் சுற்றிச் சுற்றி வந்தன.

அவர் கோணல் மாணலாகப் படுத்துக்கிடந்த பாஸ்கரனாகிய பாஸ்கர்ராஜைப் பார்த்தபடியே நடந்தார்.

பரபரப்பான ஜன நடமாட்டம் கடந்து எங்கெங்கோ நடந்தவர் இறுதியாக கங்கைக்கரை ஓரமாக நடந்து அந்த திருநெல்வேலிக்கார ஞானப்பிரகாசம் இருக்கும் இடத்திற்கு வந்தார். அவரைப் பார்க்கவும் ஞானப்பிரகாசமும் சிரித்தார்.

"என்னப்பா... அந்தப் பையன போகவிட்டுட்டியே...?" அவரிடம் பேச்சின் ஆரம்பம்.



"பின்ன... இங்க நம்ம கூடவே தங்க வெச்சுக்கலாம்னு பாக்கறீங்களா?"

"அதுல தப்பு என்ன... அவன் திரும்ப தற்கொலைக்கு முயற்சி செய்தா...?"

"அதுக்கு நாம என்ன பண்ண முடியும்? முடிஞ்ச அளவு மனசுக்கு கிரீஸ் அடிச்சு அனுப்பியிருக்கேன். நீங்க எனக்கு அடிச்சீங்களே அதே கிரீஸ்!"

"என் உபதேசத்தை இப்படி கொச்சைப்படுத்தலாமா நீ?"

"மன்னிச்சுக்குங்க சாமி. வெறும் உபதேசத்தால எந்த பலனும் கிடையாது. அது வாழ்க்கைக்கு பயன்படணும். நீங்க சொன்ன எதுவும் இதுவரை எனக்கு நடக்கலை. அவனுக்காவது நடக்குதா பாக்கலாம்னுதான் அந்த நவக்கிரகங்களோட பிரதிநிதி மாதிரியே அவன்கிட்ட பேசினேன்."

"எப்பவும் பொய் நம்பிக்கைகளை தரவே கூடாது. அதுவும் சோதிட விஷயத்துல கூடவே கூடாது."

"இதை நீங்க நூறு தடவை சொல்லிட்டீங்க. என்வரைல ஒரு நல்லதுக்காகத்தான் நான் அவனுக்கு நம்பிக்கை தர்ற மாதிரி பேசினேன். காக்கா உட்கார பனம் பழம் விழுந்த கதையா நான் சொன்ன நேரம் பாஸ்கரன் பாஸ்கர்ராஜா மாறி அவனுக்கு திருப்பங்கள் ஏற்படட்டுமே..."

-ஞானப்பிரகாசத்தின் பதிலைக் கேட்டு அவர் முகத்தில் ஒரு சன்னமான சலனம்.

"என்ன சாமி யோசிக்கிறீங்க...? உங்களால நான் மாறாம நான் உங்களை மாத்திக்கிட்டு இருக்கேன்னு நினைக்கறேன்... சரிதானே?" -ஞானப்பிரகாசத்தின் கேள்வி அவருக்கு சிரிப்பைத் தந்தது.

"ஆ ஊன்னா இப்படி சிரிச்சிடுங்க... ஆமா அவனை பாத்தீங்களா?"

"பார்த்தேன்... சத்திரத்துல அன்னதானம் வாங்கி சாப்பிட்டு பிச்சை வாங்கற நிலைமை வந்துடுச்சேன்னு வருத்தத்தோட படுத்து தூங்கிட்டான்."

"அப்ப எழுந்திரிச்சு உடனே திரும்ப ஆத்துக்குள்ற இறங்கிடுவானா?"

"அதை எப்படி நான் சொல்ல முடியும்?"

"இதை சொல்ல முடியாத நீங்க எப்படி நவநாயகர் சித்தர்ங்கற பேர்ல ஆகாசத்துல இருக்கற கிரகங்களப் பத்தி மட்டும் எல்லாம் தெரிஞ்ச மாதிரி எழுதினீங்க?"

"என்னப்பா குத்திக் காட்றியா?"

"இல்ல சாமி. இது ஆதங்கம். இன்னும் சொல்லப் போனா இப்பக்கூட உங்களைப் புரிஞ்சுக்க முடியாமதான் நான் இதைக்கூட கேட்கறேன்..."

-இந்தக் கேள்விக்கு மட்டும் அவர் மந்தமாய் ஒரு சிரிப்பு சிரித்தார்.

"பதில் சொல்ல முடியலேன்னா சிரிச்சிடுங்க. சாமி நான் ஒரு முடிவுக்கு வந்துருக்கேன்..."

"என்ன... சொல்லு?"

"நான் போலீஸ் தேட்ற ஒரு கைதி. உங்களுக்கும் தெரியும். உண்மையில ஒரு குற்றமும் செய்யாத அப்பாவி நான். இதை நீங்க நம்புவீங்கன்னு நினைக்கறேன்."

"சொல்லு... சொல்லு."



"அதனாலேயே இங்க உங்க குடிசைல இருந்துக்கிட்டு சாமியார் மாதிரி வாழ என்னால முடியலை. வெளியேறினா கம்பி எண்ண வேண்டி வந்துடும்கற பயத்தை உதறிட்டு ஜெயிலுக்கு போறதே எனக்கு நல்லதா படுது..."

"அப்படியா?"

"ஆமாம் சாமி. நீங்க சொன்ன மாதிரி நான் ஒண்ணும் கோடீஸ்வரனா- குபேரனா ஆகவேண்டாம். குறைந்தபட்சம் தண்டனைல இருந்துகூட தப்பிக்க முடியாதவனாதான் இருக்கேன். இந்த கங்கைக்கரைல இந்த குடிசைல உங்க கூட இருக்கறது கூட ஜெயில்ல இருக்கற மாதிரிதான் இருக்குது. அதுக்கு நான் நிஜமான ஜெயிலுக்குப் போனா கேஸ் நடத்தி ஜெயிச்சு வெளியே வரவாவது முயற்சி செய்யலாம் இல்லயா?"

"அப்படியா?"

"நான் என்ன கதையா சொல்றேன்... அப்படியா அப்படியான்னு கேக்கறீங்களே. ஒரு நல்ல பதிலைச் சொல்லுங்க..."

"சரிப்பா... உன் எண்ணப்படியே செய்."

"பாத்தீங்களா, இப்பக்கூட நான் சொன்ன ஜோசியப்படி எல்லாம் நல்லபடி நடக்கும்னு உங்களால சொல்ல முடியல இல்ல."

"சொல்ல முடியலதான். உன் ஜாதகம் எப்படின்னு தெரியாம பிரஷ்னம் பார்த்து உனக்கு நான் பலன் சொன்னது தப்புன்னு தோணுது."

"ஜாதகம் பார்த்து சொன்னா மட்டும் அப்படியே நடந்துடப் போகுதாக்கும்? சாமி உங்களுக்கு நான் ஒண்ணு சொல்றேன். இந்த ஜாதகம் ஜோசியத்தை எல்லாம் முதல்ல நீங்க விடுங்க. அதை நம்பாதீங்க. அது உண்மையா இருந்தாதானே...? ஒரே குடிசைல பல மாசமா ஒண்ணா இருக்கற என்னை உங்களால புரிஞ்சுக்க முடியல.

உங்களை என்னால சரியா புரிஞ்சுக்க முடியல. இதுல கண்ணுக்குத் தெரியாத கிரகங்களை எங்க நீங்க புரிஞ்சுக்க முடியும்?"

ஞானப்பிரகாசத்தின் பேச்சைக் கேட்டு திரும்பவும் சிரித்தார் அந்த மனிதர்.

"சிரிக்காதீங்க சாமி. உங்களுக்கோ நிறைய சொத்து பத்து இருக்கு. அதை எல்லாம் விட்டுட்டு எனக்கென்னன்னு நீங்க இந்த பக்கம் வந்துட்டீங்க. குறைந்தபட்சம் அதை என்பேர்ல எழுதி வெச்சு என்கூடவே இருந்துடுங்க. நானும் காசு பணத்தை வெச்சு கேஸ்ல ஜெயிச்சு வெளியே வந்துட்றேன். நீங்களும் சரி, நானும் சரி கைல வெண்ணெயை வெச்சுக்கிட்டு நெய்க்கு அலையற மாதிரிதான் எனக்கு தோணுது. என்ன சொல்றீங்க?"

-ஞானப்பிரகாசம் இந்தக் கருத்தை இதற்கு முன்பும் பலமுறை சொல்லியிருக்கிறார். இப்போதும் அதேபோல சொல்ல அவரும் அதைக் கேட்டுவிட்டு முதல்முறையாக "சரிப்பா..." என்றார். அடுத்தநொடி "அப்பாடா... இப்பதான் வழிக்கு வந்துருக்கீங்க. அப்புறம் மனசு மாறிடக்கூடாது சாமி."

"இல்லப்பா. மனசு மாற மாட்டேன்."

"இந்த ஜாதக புத்தியையும் இங்கேயே கழட்டி விட்டுடணும். அதெல்லாம் பொய்யி. ஆனா இதை வெச்சுக்கிட்டு சாமர்த்தியமா ஜல்லி அடிக்கலாம். அவ்வளவுதான். ஞானம் யோகம்கற எல் லாமே ஒரு வித கையாலாகாத்தனம்தான் சாமி. அதை மத்தவங்க அல்பமா நினைச்சுடக் கூடாதுன்னுதான் அது தெய்விகமானது அப்படி இப்படின்னு ஜிகினா சுத்தறோம். ஒன்பது பேராலதான் எல்லாம் நடக்குதுன்னு கணக்கு போட்டு சொன்னவங்கள உதைக்கணும். என்ன நான் சொல்றது?"

"சரிப்பா...!"



"இப்படி ஒரு வார்த்தைல சொன்னா எப்படி? மனசார சரிப்பான்னு சொல்லுங்க. இப்ப எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

"அப்படியா?"

"பார்த்தீங்களா... திரும்பவும் சாமியார் மாதிரி ஆழம் பாக்கற தொனியிலேயே பேசறீங்களே."

"இல்லப்பா... இனி நீ சொல்றபடியே கேக்கறேன். என்ன எழுதியிருக்கோ அப்படியே நடக்கட்டும்."

"பார்த்தீங்களா... திரும்பவும் எழுதினது எழுதாதன்னு பேசறீங்களே. யோசியுங்க சாமி. நம்ம தலை என்ன லெட்டர் பேடா அதுல எழுதறதுக்கு...? அப்படியே எழுதணும்னாலும் அறுநூறுகோடி பேருக்கு எழுத முடியுமா? சரி எழுத முடியும்னு வெச்சாலும் இந்த பூமியில தலையோட நாம மட்டுமா இருக்கோம். எந்த ஜீவராசிக்கும் தலை இல்ல? அப்ப அதுக்கெல்லாமும் தலை எழுத்து இருக்கணும்ல? லாஜிக்கா யோசியுங்க. இதே மாதிரிதான் பாவம் புண்ணியம்கறதும். உயிர் பலி பாவம்கறோம். அப்படின்னா, சிங்கம், புலி சாப்பிடவே முடியாதே? அது எதையாவது அடிச்சு தின்னாதானே அதுக்கு சோறு? பாம்பு தேளை எடுத்துக்குங்க... அது என்ன கடைக்கு போய் காய் வாங்கியா சமைச்சு சாப்பிடுது...? யோசியுங்க சாமி. உடனே மிருகங்க கதை வேற, மனுஷன் கதை வேறன்னு எதையாவது சொல்லாதீங்க..."

-ஞானப்பிரகாசம் தனக்கு சரி என்று பட்ட ஞான உபதேசத்தில் நெடுந்தூரம் போய்விட்டார். அந்த பரதேசி மனிதர் அதைக் கேட்டு திரும்பவும் ஒரு மாதிரி சிரித்தார். அந்த சிரிப்புக்குத் தான் அர்த்தம் தெரியவில்லை. அது அவன் சொல்வதுதான் சரி என்கிற சிரிப்பா... இல்லை இப்படி எல்லாம் கேட்கவும் இடம் இருக்கிறதே என்னும் வருத்தச் சிரிப்பா என்பது மட்டும் தெரியவில்லை!

# 8

அட்டமம் இது கரிய சனி
அண்ட பிண்டக் காரகக் கனி!
தர்ம நியாயம் பேணுதல் இதன் பணி.
அல்லல் படுத்துவோர் அட்டமம் உறுவர்.
அட்டமத்தாலே அல்லற்பாவம் நீக்குவர்
அல்லல் என்பது தேர்வு- அயராது எழுத
வெற்றியாய் பெறுவர் மோட்சத்தீர்வு.
அட்டமர்க்கு உதவுதல் மற்றவர்க்கு பரிகாரம்
அட்டமமே என்றும் அயராத திடமாகும்!

-நவநாயக சித்தர்.

அடித்துப்பிடித்து காசிக்குள் நுழைந்த சாமிநாதனும் சுப்ரமணியனும் ஜேஜே என்ற கூட்டத்தைப் பார்த்து மலைத்துப் போனார்கள்.

"பார்த்தியா சாமிநாதா... எவ்வளவு நம்பிக்கை இருந்தா இவ்வளவு பேர் இங்க வந்திருப்பாங்க...?" -கேட்டார் சுப்ரமணியம்.

"நீ இப்படிப் பாக்கறே... எவ்வளவு பயம் இருந்தா இவ்வளவு பேர் இங்க வந்திருப்பாங்கன்னு நான் யோசிக்கறேன்" என்றார் சாமிநாதன்.

"எதுலையும் பாசிட்டிவ் திங்கிங் வேணும்ப்பா... உன் எண்ணப்படி பயம்னே வெச்சுப்போம். பாவத்துக்கு பயப்பட்றது நல்லதுதானே?"

"அது சரி... இங்க வந்து குளிச்சா அது போயிடும்னு நினைக்கறதாலேயே தைரியமா பாவம் பண்ணத் தோணும் இல்லையா?"

"வேண்டாம்... குதர்க்கமா பேசறதே உனக்கு வழக்கமாப் போச்சு. காசிக்கு வந்தும் குதர்க்கம் வேண்டாம். நல்லதை நினை. எப்ப



செஞ்ச பாவமோ அதுதான் கனகத்துக்கு இப்படி ஆகி உயிர்ப்போர் நடத்திகிட்டிருக்கா. விஸ்வநாதா அது நீங்கி நல்ல வழி காட்டுன்னு சாமிகிட்ட கேளு..."

"காசி விஸ்வநாதனைச் சொல்றியா?"

"பின்ன... நம்ம ஃபிரெண்ட் வக்கீல் விஸ்வநாதன்னு நினைச்சிட்டியா நீ."

"பாவம்ப்பா இந்த விஸ்வநாதர். ஏம்ப்பா மனுஷங்கள படைக்கணும். அப்புறமா எதுக்கு அவங்கள பாவம் செய்ய வைக்கணும். அப்புறம் 'வாடா' வந்து குளி- உன் பாவம் போயிடும்'னு சொல்லவும் செய்யணும். யோசிச்சா சிரிப்பா வரலை?"

"திரும்பவும் விதண்டாவாதம் பண்றே நீ. இதை எல்லாம் மேலோட்டமா பார்த்தா ஒரு அர்த்தம். டீப்பா பார்த்தா வேற அர்த்தம். அதை முதல்ல புரிஞ்சுக்கோ..."

-நடந்தபடியே பேசிச் சென்றார். உலகம் முழுக்க மனித மனங்களுக்குள் அன்றாடம் தோன்றியும் மறைந்தும் ஆட்டுவிக்கும் எண்ணங்கள் அவர்களையும் விடவில்லை.

"ஆமா மேலோட்டம் ஆழம்னு என்னென்னமோ சொல்றியே, நான் ஒண்ணு கேட்கறேன். உலகம் பூரா மனுஷங்க இருக்காங்க. கங்கைன்னு ஒரு ஆறு ஓட்றதுகூட தெரியாதவங்க எவ்வளவோ பேர். அவங்கள்ளாம் இங்க வராததால கெட்டா போய்ட்டாங்க...?"

"டேய்... நாம இங்க பட்டிமன்றம் நடத்தவரலை. ஆராய்ச்சி பண்ணவும் வரலை. இங்க நம்பிக்கைதான் பிரதானம். நம்பிக்கையோட ஒரு கல்லப் பார்த்தாலும் அதுல சாமி தெரியும். இல்லேன்னா சாமியேகூட கல்லாத்தான் தெரிவார். பேசாம வா..."

"இதோ பார்... சாமர்த்தியமா பேசி என் வாயை அடைக்காதே. பதில் தெரிஞ்சா சொல்லு. குருட்டு நம்பிக்கையைப் போல மனுஷனை முடமாக்கிற விஷயம் எதுவும் இல்லை தெரிஞ்சுக்கோ..."

"சரிப்பா... உனக்கு புரியற மாதிரி ஒரு பதில் சொல்றேன். சாப்பிட்டாதானே பசி அடங்கும்?"

"அதுல என்ன சந்தேகம்?"

"சாப்பிட்டதா நினைச்சா பசி அடங்குமா?"

"அடேயப்பா பெரிய கேள்வி கேட்டுட்டதா நினைப்பா உனக்கு...?"

"சொல்லுப்பா. பசி அடங்குமா?"

"அடங்காது..."

"அப்படித்தான்ப்பா சில விஷயங்கள்... வெறும நினைச்சுப் பார்த்து எண்ணங்களைக் கொண்டு மட்டுமே புரிஞ்சுக்க முடியாது. அதுல இறங்கணும். அதாவது செயல் பிரதானம். இறங்கினாத்தான் புரிஞ்சுக்க முடியும்."

"லாஜிக்கா இதை நான் ஒத்துக்கறேன். ஆமா எப்ப இருந்து இந்த அளவுக்கு நீ மாறினே...?"

"ஒருதடவை ஆதிகேசவன் சார்கிட்ட நீ பேசிப்பார். நீயும் மாறிடுவே..."

"அவர் என்னை மாதிரின்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். அவரும் சாமியார் ஆயிட்டாரா?"

"யாரா இருந்தாலும் சரி சாமிநாதா... அனுபவம்தான் நிதர்சனம். அனுபவம்தான் பிரதானம். அனுபவம்தான் உண்மை. அனுபவப் பட செயல் வேணும். செயலை பாசிட்டிவா நம்பிக்கையோட அணுகணும். நம்பிக்கை இல்லேன்னா கூட பரவாயில்ல. அவ நம்பிக்கை இல்லாம நியூட்ரலா இருந்தாலே போதும்.

இப்ப நான் உனக்கு சொல்றேன். கடவுள் சிந்தனையோ, இல்லை மனித வாழ்க்கை பற்றிய சிந்தனையோ, அதுவும் இல்லை விஞ் ஞான சிந்தனையோ அதை குறைந்தபட்சம் நியூட்ரலா அணுகு.



அதன்பின் உனக்கு ஏற்பட்ட அனுபவங்களே உனக்கு ஒரு திசை யைக் காட்டும். அதுல நீ பாசிட்டிவுக்கு வேணா போ. நெகட்டிவுக்கு வேணா போ."

"அப்ப நீ நம்பிக்கை சார்ந்து என்கூட வரலை. நியூட்ரல் மைண்டோட அந்த ஜோசியர் சொன்னதை புரிஞ்சுக்கதான் வந்துருக்கியா?"

"இல்ல சாமிநாதா... நான் நம்பி வந்திருக்கேன். பொய்யான விஷயங்களும், தத்துவங்களும் எப்பவும் நிலைச்சு நின்னதில்லை. காலத்தால அடிச்சுக்கிட்டு போகப்பட்டிருக்கு. நமக்கு தெரிஞ்சு நாம இப்ப 2002இல் இருக்கோம். 2001 வருஷத்தை கடந்தவங்களா இருக்கோம். இந்த 2001 வருஷத்துல இந்த உலகம் எவ்வளவோ கோடி பேரை பார்த்திருக்கும். அதுல உன்னைப் போல என்னைப் போல நம்பியும் நம்பாமலும் கோடி கோடி பேர் இருந்திருக்காங்க. இவர்களைக் கடந்தும் எந்த வித பங்கமும் இல்லாத பல விஷயங் கள் இன்னிக்கு இருக்குன்னா அது உண்மையா இருந்தாதான் இருக்க முடியும். பொய்யானதை சுயநலம் மிகுந்த மனுஷன் வெச்சுக்க மாட்டான். அழிச்சுடுவான்."

-ஆழமான கருத்துக்குள் சுப்ரமணியன் விஸ்தாரமாக புகுந்தபோது ஒரு நடக்கக்கூடாத சம்பவம் நடக்கத் தொடங்கியது.

எவனோ ஒருவன் சாமிநாதன் ஹேண்ட் பேக்கை பிடுங்கிக் கொண்டு ஓட அதை திண்ணையில் சாய்ந்தபடி கிடந்த பாஸ்கரனும் பார்த்துவிட சாமிநாதனும் சுப்ரமணியனும் முதுமை காரணமாக விக்கித்து நிற்க, பாஸ்கரன் அதைப் பார்த்துவிட்டு அந்தத் திருடனைத் துரத்தத் தொடங்கினான்.

பாஸ்கரனிடம் அசுர வேகம்.

வாழும் ஆசை இருப்பவர்கள்தான் அடிபட்டு விடும், அதாகி விடும், இதாகிவிடும் என்ற பயங்களால் சூழ்நிலைக்கேற்ப செயல்

படுவார்கள். வாழ்க்கையை வெறுத்தவர்கள் மலை உச்சியில் இருந்து குதிக்கக்கூட அஞ்சமாட்டார்கள்.

பாஸ்கரனிடமும் அந்த உச்சி வேகம் இருந்தது. குறுக்கிட்ட காரின் மேல் பல்டி அடித்து சினிமா ஹீரோ கணக்காக சாகசம் எல்லாம் காட்டியவனாக ஓடித் துரத்த, திருடனும் மிரண்டுபோய் பேக்கை போட்டுவிட்டு ஓடினான்.

பாஸ்கரனும் எப்படியோ பேக்காவது கிடைத்ததே என்று எடுத்துக்கொண்டு திரும்பி வந்தான். அதன்பின் வழக்கம் போலவே எல்லாம் நடக்க ஆரம்பித்தது.

"ரொம்ப நன்றிப்பா..."

"பரவால்லீங்க. பார்த்துப் போங்க. பாவத்தைத் தொலைக்க வந்த இடத்துலதான் பாவம் பண்றவங்களும் அதிகமா இருக்காங்க." - பாஸ்கரனின் வித்தியாசமான பதில் சாமிநாதனுக்கு மிகப் பிடித்துப் போயிற்று.

"நில்லு தம்பி! நீ யார்?"

"வேண்டாங்க. எதுவும் கேட்காதீங்க. அப்புறமா அனுதாபப் பட்டு நூறோ, இருநூறோ தருவீங்க. இவ்வளவு நாள் நான் யார் கிட்டேயும் காலணா வாங்கினதில்லை. இங்கே வந்து சோத்துக்கு வரிசைல நின்னுட்டேன். இப்ப காசு வாங்கி முழு பிச்சைக்காரனாக தயாரில்லை."

"நாங்க ஒண்ணு கேட்டா நீ ஒண்ணு சொல்றீயே?"

"ஆமாங்க... அப்படித்தான். போய்ட்டு வாங்க."

"உன் பேர் என்ன - அதையாவது சொல்லு."

"பாஸ்கரன்கற பாஸ்கர்ராஜ்!"

"அது என்னப்பா பேர்ல கூட இப்படி ஒரு குழப்பம்?"



"நியூமராலஜி. பாஸ்கரன்னா துரதிர்ஷ்டம் பிடிச்சவனாம். பாஸ்கர்ராஜ்னா அதிர்ஷ்டசாலியாம். ஒருத்தர் இப்படி சொல்லி என் பேரை மாத்தி வெச்ச நேரம் பிச்சை எடுக்காத நான் பிச்சை எடுக்க ஆரம்பிச்சிருக்கேன். வேடிக்கையா இல்ல...?"

"நீ எந்த ஊர்...?"

"ஐயோ ஆரம்பிச்சிட்டீங்களா. ஐயா சாமி உங்களுக்கு நான் உதவி செய்தது தப்பு. கிளம்புங்க. எல்லாம் ஆத்துல குதிச்ச என்னை காப்பாத்தின அந்த ஞானப்பிரகாசத்தோட வேலை. செத்துத் தொலையலாம்னா அதுக்கு கூட விதி இல்லை எனக்கு."

-உக்ரமாய் ஆரம்பித்து முணு முணுப்பாய் பேசி முடித்தவனை ஆழமாகப் பார்த்தார் சாமிநாதன். சுப்ரமணியும் காதைக் கடிக்கத் தொடங்கினார்.

"சாமி... பையனப் பார்த்தா டிப்ரெஷன்ல இருக்கற மாதிரி தெரியுது. அதேசமயம் சிந்தனை பேச்செல்லாம் உன் மாதிரியே இருக்கு. சாகப் போனேன் முடியலை யாரோ காப்பாத்திட்டாங்கங் கறான். அப்ப அநாதையாதான் இருக்கணும். உதவி செய்துட்டு அதுக்கு பிரதிபலனை கூட எதிர்பார்க்காம பேசறான். கேரக்டர் இருக்கு. எனக்கென்னமோ அந்த ஜோசியர் சொன்ன தத்து புத்திரன் இவனாத்தான் இருப்பான்னு தோணுது. என்ன சொல்றே?"

"நீ இப்படி பாக்கறியா... நான் வேற மாதிரி பாக்கறேன். இவனை மாதிரி டிப்ரெஷன்ல உள்ளவங்கள பாத்துட்டு எனக்கென்னன்னு போனா நான் மனுஷனே இல்லை. இவனை புறந்தள்ளிட்டு கங்கைல இல்ல அதுக்கு மேல ஒரு நதியில குளிச்சாலும் பாவம் போகாது. உண்மையான கங்கை மனசுலதான் ஓடுது. இப்ப நான் சொல்றேன். நான் காசிக்கு வந்ததால கனகம் பிழைச்சாலும் சரி, செத்தாலும் சரி, கவலை இல்லை. இவன் பிழைக்கணும். அவ வாழ்ந்து முடிஞ்சவ. வியாதிக்காரி. அவ வாழ்க்கை என் கைல இல்லை. ஆனா இவன் வாழ்க்கை அப்படி இல்லை. நான் மனுஷனா

நடந்துக்கிட்டா இவன் நல்ல தன்னம்பிக்கையுள்ள மனுஷனா ஆயிடுவான். என்ன சொல்றே?"

"நீ இப்ப பேசறதைக் கேட்டா மனிதாபிமானமுள்ள பகுத்தறிவு தான் ஓசத்தின்னு தோணுது. கோ அஹெட் மைடியர் ஃப்ரெண்ட்!"

-இருவரும் ஒரு முடிவுக்கு வந்தவர்களாக திரும்பவும் திண்ணைக்கு போய் அமர்ந்துவிட்ட பாஸ்கரனை நெருங்கினர்.

"தம்பி..."

"நீங்க இன்னும் போகலையா?"

"நீ ரொம்ப டிப்ரெஷன்ல இருக்க போல தெரியுது. நாங்க உனக்கு உதவற முடிவுல இருக்கோம்."

"அப்படியா? அப்ப ஒரு லட்ச ரூபா கொடுங்க. ஐம்பதாயிரம் பேங்க் கடன் இருக்கு. அதை கட்டிட்டு சொச்சத்துல நான் ஆசைப் பட்டபடி ஹோட்டல் ஆரம்பிச்சுடறேன்."

"பாத்தியா உதவின்ன உடனே லட்சம் கொண்டா, கோடி கொண்டாங்கறியே..."

"என்வரைல இப்ப உதவின்னா அதுதான். சும்மா நூறு, இருநூறல்லாம் எனக்கு வேண்டாம். இருந்தா சிங்கமா இருக்கணும். இல்லாட்டி இல்லாமலே போயிடணும்..."

"அப்ப நாங்க நீ கேட்டா தரமாட்டோம்கற எண்ணத்துலதான் இப்படி விரக்தியா பேசறியா?"

"இப்படி கேட்டுட்டா நீங்க, நான் கேட்டத தர்றவங்களா ஆயிடு வீங்களா... போங்க சார்... போய் வேலையைப் பாருங்க..."

"ரொம்பதான் நொந்து போயிருக்கே நீ. உன் சொந்த ஊர் எது?"

"சொந்தமாகப் போற ஊர் எதுன்னு கேளுங்க கைலாசம்!"



"ஒழுங்கா பதில் சொல்லு. உன் வாயால உனக்கான நல்ல காலத்தைக் கெடுத்துடாதே."

-சுப்ரமண்யன் சற்று கடுமையாகவே பேச பாஸ்கரனும் அவர்களை சற்று காட்டமாகப் பார்த்தவனாய்-

"தெரிஞ்சு என்ன பண்ணப் போறீங்க...?"

"சொல்லுப்பா... உனக்கு யாரும் இல்லைன்னா நீ ஒரு அநாதைன்னா எங்களுக்கு நாங்க நினைச்சு வந்த காரியம் சுலபமாயிடும்."

"அப்படி போடு அரிவாளை... என்னை விலைக்கு வாங்கற உத்தேசமாக்கும்? என்ன வேணும்...? கிட்னியா? இல்லை கண்ணா...? எதுக்காக விரிக்கிறீங்க வலை?"

-நான் இந்தக் காலத்து ஹைடெக் யுகத்து இளைஞன் என்கிற தொனியில் பாஸ்கரன் கேட்க சாமிநாதனுக்கு ஒரு க்ஷணம் நெஞ்சையடைத்தது.

"சுப்ரமணி... சுத்தி வளைக்காதே- விஷயத்தை பட்டுன்னு போட்டு உடை. விட்டா நம்மை பிள்ளை பிடிக்கறவங்கன்னு சொல்லி இவன் ஊரையே கூட்டிடுவான்."

-சாமிநாதனின் எச்சரிக்கையைத் தொடர்ந்து சுப்ரமணியன் விலாவரியாக கனகத்தின் வியாதியிலிருந்து ஆரம்பித்தார்.

அதே சமயம் கங்கையின் கரையோரம்...

"சாமி இருங்க... கடைசி கடைசியா ஒரு முழுக்கு போட்டுட்டு வரேனே" -ஞானப்பிரகாசம் நவநாயக சித்தர் என்கிற அந்த மனிதரிடம் சொல்லிக்கொண்டு கங்கை ஆற்றுக்குள் இறங்குவதற் காக நடந்தார். அந்த மனிதரும் காத்திருக்கத் தொடங்கினார். அருகிலேயே அவரது ட்ரங்குப் பெட்டி அதில் கட்டுக் கட்டாய் புத்தகங்கள். அவரே கைப்பட எழுதிய பாடல்கள்! ஞானப்பிரகாசம்

வரும் வரை என்ன செய்வது என்ற நினைப்பில் ஒரு நோட்டின் புத்தகத்தைப் புரட்டியவர் கண்ணில் அங்காரகன் என்று எழுதிய செவ்வாய்கிரகம் பற்றிய அவரது கணிப்புப் பாடல் கண்ணில் பட்டது. அதில் கண்கள் ஓடத் தொடங்கியபோது சாமி என்கிற அலறல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தார். கங்கையில் திடீர் என்று வெள்ளப் பெருக்கு. அதில் ஞானப்பிரகாசம் இழுபட்ட நிலையில் கத்திக்கொண்டே போய்க்கொண்டிருந்தான். அதே சமயம் அவர் பார்க்க சில முதலைகள் அவனை நோக்கி கரையோரப் புதர்களில் இருந்து இறங்குவதும் தெரிந்தது.

ஈஸ்வரா, என்றவருக்கு நெஞ்சையடைத்தது. கையில் இருந்த நோட்டுடன் வேகமாக கரையை நோக்கி ஓடினார்.

"சாமி... சாமி... சாமிஈஈ..." என்றபடியே நெடுந்தூரம் போய் விட்டவனைப் பார்த்தபடியே அவரும் கரையோரமாக நெடுந் தூரம் வரை ஓடினார். ஒரு கட்டத்தில் அவன் மூழ்கிக் காணாமப் போக அப்படியே விக்கித்துத் தேங்கி நின்றவர் கையில் இருந்து அந்த நோட்டு கீழே விழுந்து ஆற்றின் ஓட்டத்தில் அதுவும் போய் சேர்ந்துகொண்டது.. நொந்து போனவர் நெஞ்சைக் கையில் பிடித்தபடி மண்டியிட்டார்.

இது தண்டனையா, இல்லை இதுதான் அவனுக்கான முடிவா என்று புரியாத நிலையில் கங்கையையே வெறித்தவரின் கண்களில் இன்னொரு கங்கை!

# 9

**"நவமிது செவ்வாய் என்றே அறிவாய்!**
**பூமிக்காரகன் இவன்நாவின் சுடரொளி.**
**சிவந்த இவனோர் வீரியன்**
**உச்சமாய்க் கட்டத்தில் இவனிருக்க**



**அச்சமேயின்றி செயல் இருக்கும்.**
**தீவினைக்குத் தீயிடும் இவன்போலே**
**மேதினியில் எவருமில்லை மண்மேலே!**
**அங்காரகன் இவனை உற்றவர்**
**அடிபணியா வேகக் கொற்றவர்."**

**-நவநாயக சித்தர்**

ஹோட்டல் ஞானப்பிரகாசம்!

பெயர்ப்பலகை கொத்தான தடித்த மலர் மாலையுடன் மின்ன வாழைமரத் தோரணங்களுக்கு நடுவில் நின்றுகொண்டு எல்லோரையும் வரவேற்றுக்கொண்டிருந்தான் பாஸ்கர்ராஜ்!

ஒரு பக்கம் அவனது பெற்ற தந்தை வேலாயுதமும். மறுபக்கம் அவனது சுவீகாரத் தந்தையான சாமிநாதனும் நின்று கொண்டு அந்த புதிய ஹோட்டலின் திறப்பு விழாவிற்கு எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள்.

அதிசயம் போல கனகம் உள்ளே ஓடியாடிச் செயல்பட்டுக் கொண்டிருந்தாள்!

நிகழ்ச்சிக்கு ஆதிகேசவனும் வந்திருந்தார். சுப்ரமணியன் அவரோடு குலாவிக்கொண்டிருந்தார்.

"ஆதிகேசவன் சார்... இந்தஅதிசயத்தை என்னன்னு சொல்றது. ஒரு பக்கம் சாமிநாதன் மனைவி கனகமும் பொழைச்சிக்கிட்டா. மகனும் கிடைச்சிட்டான். இவங்க இரண்டு பேருமே நம்ம சாஸ்தரங் களோட சக்திக்கு ஒரு ஆதாரம்தான். என்ன சொல்றீங்க?"

"ஆமாம் சுப்ரமணியன்... எதுவும் தெரியறதுலதான் இருக்கு. தெரிஞ்சுட்டா திட்டமா வாழ எவ்வளவோ வழிமுறைகள் இருக்குங் கறதுதான் உண்மை..."

"ஆனா இது ரொம்ப பேருக்கு தெரிய மாட்டேங்குதே."

"அதான் சொன்னேனே... தெரியறதுலதான் எல்லாமே இருக்கு. அதுக்கு நாம கொடுத்து வெச்சிருக்கணும் சுப்ரமணியன். கொடுத்து வெச்சிருக்கணும். அது சரி ஹோட்டல் பேர் ஞானப்பிரகாசம்னு இருக்குதே. யார் அவர்?"

"பையனோட ஞானகுருவாம். அவர்தான் பாஸ்கரனா இருந்த வனை பாஸ்கர்ராஜ் ஆக்கினது. பெரிய ஞானியாம். கங்கைக்கரை ஓரத்துலதான் எங்கையோ இருக்காராம்."

"அவரும் இப்ப இங்க இருந்தா நல்லா இருக்குமே அவரை ஏன் கூப்பிடலை...?"

"கூப்பிடலையாவா...? தேடுதேடுன்னு தேடியிருக்கான் நம்ம பையன். ஆனா, அவரோட நவநாயக சித்தர்னு ஒருத்தரும் இருக்காராம். இரண்டு பேரும் எங்கையோ போய்ட்டாங்க போல.

எப்பவுமே ஒரு லெவலைத் தாண்டிட்ட ஞானிகளை எல்லாம் நாம நினைச்சப்பல்லாம் பாக்க முடியுமா என்ன?"

-இருவரும் பேசும்போதே முதல் காரியமாக அன்னதானப்பந்தி ஆரம்பமாகியிருந்தது. அதில் அரக்கப்பரக்க அந்த நவநாயக சித்தரும் ஒரு பிச்சைக்காரன்போல் அமர்ந்து சாப்பிட்டபடி இருந்தார். அவ்வளவு பசி! சாப்பிட்டு முடித்தவர் வெளியே வந்து பெயர்ப் பலகையை ஒரு பார்வை பார்த்தார். சிரிப்பாக வந்தது. சிரித்தபடியே நடக்கத் தொடங்கினார்.

முற்றும்

35848